# தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க

## மாநாட்டு சிறப்பு மலர்

17·01·69

University of Jaffna
305.5122
TIN
162611(AR; MAIN)

1969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாட்டுச் சிறப்பு மலர்

17-1-69

அடிமை விலங்கறுப்போம்! — அதில்
ஆயுதங்கள் செய்திடுவோம்!
கொடுமை மிக மலிந்த — இக்
குவலயத்தை மாற்றிடுவோம்!

University of Jaffna Library
University of Jaffna
162611
Library
Donated by:
PROF. K. KAILASAPATHY
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ உங்கள் இல்லங்களை அலங்கரிக்கும்
இரும்புக் கேற்றுகள், கிறில்களும்

★ லொறிகளுக்குரிய
டிவறஞ்சர் - கவுஸிங்
இணைப்பு வேலைகளும்

★ டிறக்ரர் உறுப்புகளின்
சகல வேலைகளும்
குறித்த தவணையில்
செய்து கொடுப்பவர்கள்.

மற்றும்

எலக்றிக் வெல்டிங், சகலவித கடைச்சல்
வேலைகளுக்கும் உத்தரவாதமுள்ள இடம்.

# ஸ்ரார் எலக்ட்றிக் வேல்டேஸ் அன் ரேணிங் வேக்ஸ்

வெலிங்டன் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க
மாநாட்டுக்கு

எமது மனப்பூர்வமான நல்வாழ்த்துக்கள் !

UNIVERSITY OF JAFFNA LIBRARY

ஸ்ரீ பார்வதி அச்சகம்

288, ஆஸ்பத்திரி வீதி, — யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 689

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீண்டாமை ஒழிப்பு
வெகுஜன இயக்கத்துக்கு
எமது மனமார்ந்த
வாழ்த்துக்கள் !

வரதர் வெளியீடு
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



அன்பு வெளியீடு

அரசாங்க திணைக்கள
பாடத்திட்டத்தையடக்கி
உரிய விளக்கப்படங்கள், பயிற்சிகள்,
மாதிரி வினாப்பத்திரங்கள் யாவும்
அடக்கி ஆக்கிய நூல்.

ஆருந்தரப் புவியியல்
எழுதியவர்: க. குணராசா, பி. ஏ., (Hons
ஆருந்தர மாணவருக்கு



றேடியோ பழுது பார்ப்பதிலும்
றேடியோ உப உறுப்புக்கள்
விற்பனை செய்வதிலும்
வட மாகாணத்தில்
பழைமையானவர்களும்,
திறமையானவர்களும்.

றேடியோ மனுயல்
23/4, ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.



எல்லாவிதமான
அச்சு வேலைகளுக்கும்

யாழ்ப்பாண அச்சகம்
95, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை விஜயம் செய்தால் திருப்தி அடைவீர்கள்!

முதல்தரமான டி. ஐ. சப்பாத்து

ஜெர்மன் தோல் சப்பாத்து

மற்றும் பலவித உள்ளூர் உற்பத்திச்
சப்பாத்துகளுக்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்.

உலகப் புகழ்பெற்ற
பாட்டா சப்பாத்துகளும் பெண்களுக்கு
வசதியான டீனச்சீல் சப்பாத்துகளும்
குதிச் சப்பாத்துகளும் சகாயவிலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

ஓடர்கள் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.

**யாழ்ப்பாணம் சப்பாத்து மாளிகை**

51, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF JAFFNA
Library
SRI

❊ பெற்றோமாக்ஸ், மண்ணெண்ணெய் அடுப்பு, சகலவிதமான பொலிடோல் பம்புகள், கிராமப்போன், ரோச்லைற், எல்கறிக் இஸ்திரிப்பெட்டி முதலியன திறமையாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

❊ யன்னல் கிறீல், கேற்று, மற்றும் மோட்டார்களின் உப உறுப்புக்களும், யந்திரப் படகுகளின் சிலின்டர் ஹெட்டு களும், டிராக்ரர் உறுப்புக்களும் சிறந்த முறையில் ஒட்டி சீர்ப்படுத்திக் கொடுக்கப்படும்.

**லிங்கம்ஸ் எலக்ரிக்கல்ஸ்**

(ராஜா தியேட்டருக்கு எதிரில்)

72/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல விதமான கடைச்சல் வேலைகள்,
வார்ப்பு வேலைகள், வள்ள வேலை
களுடன் தண்ணீர் பம்புகளும்
திருத்திக்கொடுப்பதில்
திறமை வாய்ந்தவர்கள்

றிப்பப்ளிக் என்ஜினியேஸ்

52/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

நெசவுத் தொழிலாளர்களுக்கு
ஓர் வரப்பிரசாதம்!
பருத்தி நூல்களுக்கு வேண்டிய
நிறங்களில் சாயமூட்டிக்
கொடுக்கப்படும்.

தரம் உத்தரவாதம்

ஜெயா கைத்தறி நெசவு சாயத்
தொழிற்சாலை,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

JEYA HANDLOOM WEAVERS DYERS
உரிமையாளர்: மு. தர்மலிங்கம்

உங்கள் தீராத வியாதிகட்கு

சுகவாச வைத்தியசாலைக்கு

விஜயம் செய்யுங்கள்.

டாக்டர். பி. எட்வேட்
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

குறைந்த விலை! சிறந்த பொருள்!

உள்ளூர் கைத்தறி பிடவைத்
தினுசுகள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளக்கூடிய ஒரே
ஸ்தாபனம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

வேல் பிரதர்ஸ்
பிடவை வியாபாரம்
மார்க்கட் சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

305.5122
TIN

# தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாட்டுச் சிறப்பு மலர்

★

1969 தை 17

★

விலை ரூபா ஒன்று

★

3, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.

## உள்ளே


| | பக். |
|---|---|
| தலையங்கம் | 2 |
| மாநாட்டு அறிக்கை | 5 |
| **கட்டுரைகள்** | |
| எஸ். ரி. என். நாகரட்ணம் | 9 |
| வ. நாகலிங்கம் | 11 |
| ப. கிருஷ்ணன் | 14 |
| 'அம்பலத்தான்' | 17 |
| சா. சேவற்கொடியோன் | 22 |
| கி. லக்ஷ்மணன் | 25 |
| செ. கணேசலிங்கன் | 30 |
| செந்தில் | 40 |
| கே. டானியல் | 45 |
| என். சண்முகதாசன் | 50 |
| 'முருகன்' | 56 |
| மு. முத்தையா | 61 |
| சி. கணேசன் | 62 |
| 'மாவையான்' | 64 |
| **கவிதைகள்** | |
| கவிஞர் பசுபதி | 4 |
| இ. சிவானந்தன் | 20 |
| மாந்தோப்பு மாணிக்கனூர் | 22 |
| முருகையன் | 27 |
| க. கிருஷ்ணபிள்ளை | 39 |
| தில்லைச்சிவன் | 44 |
| சுபத்திரன் | 49 |
| எஸ். வில்வராஜன் | 54 |
| சுத்தானந்தபாரதியார் | 55 |
| வ. மகாலிங்கம் | 59 |
| **சிறுகதை** | |
| யோ. பெனடிக்ற்பாலன் | 32 |


162611
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
162611

# கிளர்ச்சி செய்வது நியாயமானது

ஒடுக்கப்பட்ட மக்கள், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக தம்மை அடக்கி ஒடுக்கியும் சுரண்டிச் சூறையாடியும்வந்த, மிகவும் கொடூரம் மிகுந்த சாதியமைப்புக்கெதிராக கீர்த்திமிக்க போராட்டங்களை நடத்திய பாரிய அனுபவங்களுடன் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாட்டில் அணிதிரள்கிறார்கள்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், போராட்டத்தில் பிறந்து போராட்டத்தில் வளர்ந்த மக்கள் இயக்கமாகும். இது ஒரு சிலரின் சுயநல அபிலாசைகளை ஈடேற்றிக்கொள்ளவோ அல்லது ஒரு சில வசதி படைத்தவர்களின் நலன்களைப் பேணிக் கொள்ளவோ ஏற்பட்ட இயக்கமல்ல. அதற்கு மாறாக சாதியமைப்பைத் தகர்த்து மக்கள் போராட்ட இயக்கத்தை வளர்த்து புதிய ஜனநாயக அமைப்பைத் தோற்றுவிக்கப் போராடும் ஒடுக்கப்பட்ட மக்களின் இயக்கமாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களும் ஏனைய மக்களைப்போல சகல துறைகளிலும் சமத்துவ ஜனநாயக உரிமைகளை அனுபவிக்க உரிமை படைத்த மனித இனத்தைச் சேர்ந்தவர்களே. இந்த உண்மையை இதுவரை காலமும், அவர்களை அடக்கி, ஒடுக்கி ஆண்டு அனுபவித்து வந்தவர்கள் அங்கீகரிக்க மறுத்து அடம்பிடிக்கிறார்கள். இதை எதிர்த்து இந்த உண்மையை நிலைநாட்ட கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக வீரஞ்செறிந்த போராட்டங்களை நடத்தியதன் மூலம், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் இம்மக்களின் உண்மையான விடுதலை இயக்கமாக அபிவிருத்தியடைந்துள்ளது. தமிழினத்தின் விடுதலைக்கும், தேசிய விமோசனத்துக்கும் எடுத்துக்காட்டான பல போராட்ட முறைகளையும் பின்பற்றியுள்ளது.

தமிழ் மக்கள் தமது மொழி, இன உரிமைகளுக்காக நடத்திய சாத்வீகப் போராட்டத்தை அரசாங்கம் ஆயுத பலாத்காரத்தால் கணப் பொழுதில் அடக்கி ஒடுக்கியதுபோல, தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒரே நாளில் ஒடுக்கிவிட முடியவில்லை. அதற்குப் பதிலாக அவர்களை மிலேச்சத்தனமாக ஒடுக்க முயன்றவர்களுக் கெதிரான போராட்டத்தின் மூலம், தங்களைத் தாங்களே பலப்படுத்தி, போராட்ட சக்தியை அதிகரித்து எவராலும் வெல்லற்கரிய மக்களாக உரம் பெற்று, சகலரையும் வெற்றி கொள்ள வல்லவர்கள் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

"சாதியமைப்பு தகரட்டும், சமத்துவநீதி ஓங்கட்டும்" என வீராவேசத்துடன் வீறிட்டுக் கிளம்பிய '66 ஒக்டோபர் இயக்கம் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் உன்னத திருப்பத்தை ஏற்படுத்திய கிளர்ச்சிப் பேரியக்கமாகும். இது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஒடுக்குவதுசரி, சுரண்டுவதுசரி என இருந்த பழைய கொள்கையை மாற்றி சாதியமைப்புக் கெதிராக கிளர்ச்சி செய்வதுசரி, போராடுவதுசரி என்ற நியதியை உலகறியப் பிரகடனப்படுத்தியுள்ளது. இது தாழ்த்தப்பட்ட மக்களின் அடிமை விலங்கை அறுத்தெறிய தெம்பையும் திராணியையும் அளித்ததுடன் சகல உழைக்கும் மக்களுக்கும் உத்வேகத்தையும் அளித்துள்ளது.

இந்த ஒக்டோபர் எழுச்சியின் ஓராண்டுப் போராட்டத்தில் அணிதிரண்ட மக்கள் இயக்கமே 67 ஒக்டோபர் 21-ல் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமாகப் பரிணமித்தது. சங்கானை, கொடிகாமம், அச்சுவேலித் தேநீர்கடை, ஆலயப்பிரவேசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தின் பலாபலனே இவ்வியக்கமாகும்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் கடந்த மாநாடு நடந்து 15 மாதங்களுக்கிடையில் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் போராட்டம் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் வெகுஜன எழுச்சியைத் துரிதப்படுத்தியது மட்டுமல்லாமல், தீண்டாமைக் கொடுமையையும், சாதியமைப்பின் கோரத்தையும் உலகறிய அம்பலப்படுத்தியுள்ளது.

போராடும் தாழ்த்தப்பட்ட மக்கள், முன்போல் இன்று தணிந்திருக்கவில்லை. அவர்கள் பக்கத்தில் தோளோடு தோள் நின்று போராட எண்ணற்ற உயர் சமூகத்தைச் சேர்ந்த வாலிபர்களும் தொழிலாளர்களும் புரட்சிகர புத்திஜீவிகளும் இருக்கிறார்கள் என்பதைக் கடந்த காலப் போராட்டம் எடுத்துக்காட்டியுள்ளது. மலையகத்திலும் தென்னிலங்கையிலும் உள்ள பெருவாரியான மக்கள் இப்போராட்டத்தை ஆதரித்து அணிதிரண்டுள்ளார்கள். இது ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டத்தின் வெற்றிக்கு நம்பகமான அடித்தளமாக அமைந்துள்ளது; இது என்றுமில்லாத நல்லதொரு நிலைமையாகும்.

சாதி ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டம், இலங்கை எங்குமுள்ள சகல மக்களினதும் ஒடுக்குமுறைகளுக் கெதிரான சகலபோராட்டங்களுடன் ஒன்றிணைந்ததாகும். இன விடுதலையாக இருந்தாலும்சரி தேசிய விடுதலைக்கான போராட்டமாக இருந்தாலும்சரி அடிப்படையில் சமூக ஒடுக்குமுறைக் கெதிரான போராட்டங்களே. இவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ள உள்நாட்டு நிலப்பிரபுத்துவ, வெளிநாட்டு ஏகாதிபத்தியப் பிணைப்புகளுக்கெதிரான - தேசிய விமோசனத்திற்கான கூரிய வர்க்கப் போராட்டத்தின் பிரச்சினையேயாகும்!

எதிர்காலம் பிற்போக்குவாதிகளுக்கல்ல, போராடும் மக்களுக்கே!

இந்த நல்ல சூழ்நிலையில் நடைபெறும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாடு, போராடும் மக்களை ஆதரித்து போராட்டத்தை விரிவுபடுத்தவும் கடந்த காலபோராட்ட அனுபவத்தைத்தொகுத்துக் காணவும், நிகழ்கால நிலைமையை ஆராய்ந்து, வருங்காலப் போராட்டத்திற்கு வழி காட்டவும் வல்லதாய் அமையவேண்டும்.

சாதி அமைப்பு தகரட்டும்!

மக்கள் ஜனநாயக அமைப்பு மலரட்டும்!

## நன்றி!

பல்லாண்டு காலமாக ஒடுக்கப்பட்ட மக்கள், தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும், அநீதிகளையும் எதிர்த்து நடத்திய கிளர்ச்சிகள், போராட்டங்கள், தியாகங்களின் அடிப்படையில் மலர்ந்த புரட்சி மலர் இது! நிலப்பிரபுத்துவத்தின் கபடத்தனமான சாதியமைப்பு முறை, சட்டத்தினாலோ, சமாதானப் பேச்சு வார்த்தைகளினாலோ அழிக்கக்கூடியதல்ல. போராட்டம் ஒன்றே அதனை அழித்தொழிக்கக்கூடிய சரியான மார்க்கமாகும்.

இம் மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை யாவும் நமது கடந்தகாலப் போராட்டங்களின் அனுபவத்தினூடாக, ஏகோபித்த குரலில் இந்த உண்மையையே பறைசாற்றுகின்றன. இம்மலரில் தங்கள் பயனுள்ள கருத்துக்களை வெளியிட்டுள்ள எல்லா நண்பர்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவிய வணிகப் பெருமக்களுக்கும், மலரை அழகுற அச்சிட்டுதவிய ஸ்ரீ பார்வதி அச்சகத்தினருக்கும் எங்கள் நன்றி!

— ஆசிரியர் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரரை நோக்கிப் புறப்படடா!

கவிஞர் பசுபதி

போரரை நோக்கிப் புறப்படடா — ஜெகப்
புரட்சி வருகுது புறப்படடா! ... போரரை

பாரரை ஆள்பவர் நாமன்றோ — பல
படைத்துக் காத்தவ ராமன்றோ?
ஊரரைக் காக்கும் உத்தமர் நாம் — இவ்
உலகம் தந்த வித்தகராம்! ... போரரை

போரரைக் கண்டு அஞ்சிடோம் — புது
வாழ்வை எண்ணி நின்ற நாம்
வீரர் எம்மை எதிர்க்க யார்? — வெறும்
விட்டில் பூச்சி அழிந்திடும். ... போரரை

கொடுமை இதுவரை போதுமடா — இனிக்
குவலயம் நமது சொந்தமடா
அடிமை என்று அறைந்தவரை — பாழ்
அழியா நரகிற் கேற்றிடுவோம்! ... போரரை

உழைத்த கூட்டம் உடல் நோக — தினம்
உறிஞ்சும் வர்க்கம் தலையெடுக்க
விளைத்த நிலையை மாற்றிடுவோம் — நாம்
விரும்பும் பொதுமை காத்திடுவோம்! ... போரரை

செங்குருதி வெள்ளம் ஜெகத்திடையே — நீள்
செக்கர் வானத் தொளியுடனே
சங்கமமாகி விட்டதடா — நம்
செங்கொடி வானில் பறக்குதடா! ... போரரை

புரட்சிக் கீதம் கேட்குதடா — எங்கும்
பொங்கி எழுந்த படைகளிடை
எழுச்சி கொண்ட வீரா நீ — இனி
எழுந்து முன்னே புறப்படடா! ... போரரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாட்டு

# நகல் அறிக்கை

## யாழ். நகர மண்டபம், 17-1-69

15 மாதங்களுக்குப் பின்னர் நடைபெறும் இந்த மாநாடும் ஒரு சிறப்பான சூழ்நிலையிலேயே நடைபெறுகிறது. கடந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இந்த 15 மாதங்களிலும் நடைமுறைக்குக் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாக மேலும் வளர்ந்துள்ள மக்களுடைய உணர்ச்சிகளையும், நடைபெற்ற இயக்கங்களின் அனுபவங்களையும், படிப்பினைகளையும் சரியாகக் கணிப்பீடு செய்துகொண்டு, அதன் அடிப்படையில் இயக்கத்தை மேலும் பலப்படுத்தவும், ஐக்கியப் படுத்தக் கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்திக்கொண்டுபோராட்டத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கான திட்டங்களைத் தீட்டும் பெரும் பொறுப்பை இம்மகாநாடு வகிக்கிறது.

கடந்த நாட்களில் நடைபெற்ற போராட்டங்களும் அதில் தோன்றிய பிரச்சினைகளும் பற்றி அனைவரும் நன்கு அறிந்திருப்பதால் அவைபற்றி இந்த அறிக்கையில் விரிவாகக் கூறாமல் சுருக்கமாக இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றோம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளைப் போக்குவதையும், தீண்டாமை-சாதிப்பாகுபாடு ஆகியவற்றை நீக்குவதையும் நோக்கமாகக் கொண்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபை, சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி போன்ற ஸ்தாபனங்களும், இன்னும் சில உதிரி ஸ்தாபனங்களும் இருந்தன. இந்த ஸ்தாபனங்களெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்காகவே இயங்கினவெனக் கூறிக்கொண்டாலும் தாழ்த்தப்பட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சினையை சரியானகண்ணேட்டத்துடன் அணுகவுமில்லை; சரியான போராட்டப்பாதையை வகுத்து, அப்பாதையில் தலைமை கொடுத்து தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்துச் செல்லவுமில்லை. மாருக, தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதாய் வாயளவில் கூறிக்கொண்டு அதே வேளையில், அந்த ஸ்தாபனங்களில் உள்ளவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரைச் சொல்லித் தத்தம் சொந்த நலன்களையும் முன்னேற்றங்களையும் தேடிக் கொள்வதற்கும், செனட்டர் போன்ற பதவிகளையும் ஜே. பி. போன்ற பட்டங்களையும் பெறுவதற்கும் அவற்றைப் பாவித்து வந்தனர். இந்த ஸ்தாபனங்கள் வெறும் போலி என்பதையும் தாழ்த்தப்பட்ட மக்களின் எந்த ஒரு பிரச்சினைகளும் தீர்வு காணமாட்டாதெனவும், தவருன வழியில் இழுத்துச் செல்கின்றனவென்பதையும் தாழ்த்தப்பட்ட மக்கள் உணரத் தலைப்பட்டனர்.

### தாழ்த்தப்பட்ட மக்களின் சொல்லொணுக் கஷ்டங்கள்

இந்த நாட்டின் வேறு எந்தப் பகுதி மக்களையும் விட தாழ்த்தப்பட்ட மக்கள் படும் கஷ்டங்களும், படும் இன்னல்களும் தான் அதிகம். அவர்கள் வழிபடுவதற்காக ஆலயங்களுக்குள் செல்ல முடியாது, பொதுக் கிணறுகளில் தண்ணீர் அள்ள முடியாது, தேநீர்க்கடைகளில் மற்றவர்களைப்போல் அமர்ந்து தேநீர் அருந்த முடியாது, பாடசாலைகளில் ஏனைய பிள்ளைகளுடன் சரி சமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக நடந்துகொள்ள முடியாது-இன்னும் இப்படிப் பல கஷ்டங்கள். இப்படியான விஷயங்களிலெல்லாம் சாதித்துவேஷம் தலைவிரித்தாடி அவர்களுக்குப் பல கொடுமைகளும் இழைக்கின்றன.

தாழ்த்தப்பட்ட மக்களின் பெரும்பகுதியினர் குடியிருக்கவோ பயிர் செய்து வாழவோ சொந்த நிலமில்லாதவர்கள். பெருந்தொகையான நிலங்களை தமதாக்கிக் கொண்ட உயர் சாதியைச் சேர்ந்த பெரும் புள்ளிகள் நிலப்பிரபுத்துவ அடிமை குடிமை முறையைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் அனுமதிக்கும் நிலங்களில்தான் குடியிருக்கிறார்கள். அவர்களது நிலங்களிலேயே வேலை செய்கிறார்கள். இதனால் உரிமைக்கான அவர்களது குரல் எழும்பும் பொழுதெல்லாம் பயங்கரமான முறையில் பயமுறுத்தப்படுகின்றனர்-அடக்கப்படுகின்றனர். இத்தகைய துன்ப துயரங்களை காலமெல்லாம் அனுபவித்து, அனுபவித்து அவர்கள் நலிந்தனர். அவர்களின் இதயம் எரிமலைபோல் குமுறிக்கொண்டிருந்தது.

### போராட்டமே சரியான பாதை

தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சரியான மார்க்கம் எது என்பது கடந்த இரண்டு ஆண்டு காலப் போராட்டத்தின் மூலமே தெரிய வந்தது. 1966-ம் ஆண்டு ஒக்டோபர் 21-ந் தேதி, பிற்போக்குவாதிகளின் சூழ்ச்சிகளையும் பொலிஸ்தடை-அடக்கு முறைகளையும், வெறித்தனமான தாக்குதலையும் மீறி சுன்னாகத்திலிருந்து கிளம்பிய சாதி எதிர்ப்பு ஊர்வலம், அதனைத் தொடர்ந்து நடந்த பல ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், கிராமங்களில் நடந்த கூட்டங்கள், அச்சுவேலி, கொடிகாமம், சங்கானை ஆகிய இடங்களில் பீறிட்டெழுந்த வெகுஜனக் கிளர்ச்சி, கிராமங்களில் அவற்றிற்காதரவாக நடந்த இயக்கங்கள்-போராட்டங்கள், இவற்றினால் எழும்பிய உணர்ச்சிகள், படிப்பினைகள், தேவைகள்-இவற்றிலிருந்து உருவானவையே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம். இது 1967 ஒக்டோபர் 21ல் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்திலேயே வளர்ந்தது. அதாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சரியான போராட்டப் பாதையைச் சுட்டிக் காட்டி நடவடிக்கையில் இறங்கிய 1966 ஒக்டோபர் 21-ந் தேதி தினத்தை நினைவில் வைத்து 1967 ஒக்டோபர் 21-ல் தீர்க்கமான ஸ்தாபனமாக அது உருவெடுத்தது. இந்த இயக்கம்தான் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்கான சரியான மார்க்கத்தை-போராட்டப் பாதையைத் தொடர்ந்து சுட்டிக் காட்டி தலைமையும் அளித்து வருகிறது.

சமாதானமாகப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்—காலப் போக்கில் தானாகத் தீரும்—சமரச வழியாலும், சாத்வீக வழியாலும் தான் உரிமைகள் கிடைக்கும் என்றெல்லாம் சொல்லப்படுவது சுத்த ஏமாற்று. மாறாக, இப்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைத்துள்ள அற்ப சொற்ப உரிமைகள் கூட அவ்வக் காலங்களில் நடத்தப்பட்ட போராட்டங்கள் மூலமாகத்தான் கிடைத்தன. ஒவ்வொரு உரிமைகளுக்கும் பின்னால் கிராமங்களில் ஒவ்வொரு போராட்ட சம்பவங்களும், சரித்திரங்களும் இருக்கின்றன-கடந்த இரண்டு வருட கால அனுபவமும் கூட இதனைத்தான் கூறுகின்றது. இக்குறுகிய காலகட்டத்தில் சங்கானை மக்கள் நடத்திய விட்டுக் கொடுக்காத வீரமிக்க போராட்டம் ஏனைய பகுதிகளிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை தட்டியது. இதன் பயனாக சாவகச்சேரியிலும் மற்றும் இடங்களிலும் தேநீர்க்கடைகள், ஆலயங்கள் திறக்கப்பட்டன. ஆதலால் ஐக்கியப்பட்டு ஓரணி திரண்டு போராட்டப்பாதையில் உறுதியுடன் செல்வதே சரியானது என்று வலியுறுத்தியதுடன் இதனை நடைமுறைப்படுத்தவும் செயலாற்றியது. இந்த இயக்கம் ஆரம்பித்த காலம் தொட்டே நல்லெண்ணம் படைத்த பலதரப்பட்ட உயர் சமூகத்தவர்கள், கமக்காரர்கள், தொழிலாளர்கள், இதர உழைப்பாளர்கள், தேசபக்தியுள்ள வாலிபர்கள், புத்திஜீவிகள் ஆகியோரை தன்னுடன் ஐக்கியப்படுத்தி இயக்கத்தை முன்கொண்டு சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எதிர் நோக்கிய நெருக்கடிகளும் கஷ்டங்களும்

இயக்கம் புரட்சிகர உணர்வுடன் வலுக்க, வலுக்க வலிமையுடன் முன் செல்லச் செல்ல போராட்டப்பாதைகள், பல நெருக்கடிகள் எதிர்நோக்கின. கிராமப்புறங்களிலுள்ள உயர் சமூகத்தைச் சேர்ந்த உழைப்பாளர்கள், கமக்காரர்கள் எதிர்க்காமல் இருந்த பொழுதிலும் விரல்விட்டெண்ணக் கூடிய சாதிவெறியர்கள் சிலரின் பலாத்கார நடவடிக்கைகளும், அட்டூழியங்களும், பொலிசாரின் அடக்குமுறைகளும் அதிகரித்தன. கொடிகாமம், அச்சுவேலி, சங்கானை, உரும்பராய், கரவெட்டி மட்டுவில், புருப்பொறுக்கி போன்ற கிராமங்களில் பலசேதங்கள், உயிர்த்தியாகங்கள் ஏற்பட்டன. சின்னர் கார்த்திகேசு, ஆரத்தினம், வன்னியன் குமரேசு, சண்டிலிப்பாய் வயித்தி ஆகியோர் தமது இன்னுயிரைத் தியாகம் செய்து அமரத்துவம் பெற்றனர். வீடுகள் எரிக்கப்பட்டன; பொருட்கள் அழிக்கப்பட்டன, இருந்தும் எத்தகைய துன்பங்களையும் பொருட்படுத்தாமல் ஐக்கியப்பட்டு உறுதியுடன் சகல கஷ்டங்களுக்கும் முகம் கொடுத்து தொடர்த்து போராடினர். இதன் பெறுபேருக பிரசித்திபெற்ற மாவை போராட்டம் வெடித்தது.

### மாவைப் போராட்டம்

இயக்கமும்—போராட்டமும் மாவை ஆலயப் பிரவேசத்தின்போது ஓர் உச்சகட்டத்தை அடைந்தது. மாவை ஆலயப் பிரவேசம் பேரலையாகப் பொங்கி எழுந்தது என்று சொல்லலாம். மாவை ஆலய ஆதீன கர்த்தாக்களான பிற்போக்குவாதிகளும், வைதீக ஸ்தாபனங்களும்' சாதிவெறியர்களும், அவர்களின் பிரதிநிதியான வவுனியா சுந்தரலிங்கமும், அவர்தம் குண்டர்களும் இந்த மாவை ஆலயப் பிரவேசப் போராட்டத்தை முறியடிக்கப் பல தந்திரங்களையும், சூழ்ச்சிகளையும் செய்தபோதிலும் இயக்கம் தலைமை தாங்கிய தாழ்த்தப்பட்ட மக்களின் மாவை ஆலயப் பிரவேச உணர்ச்சியைத் தடுக்க முடியவில்லை. அது பீறிட்டெழுந்தது. சுருங்கச் சொன்னால் நாட்டையே ஒரு குலுக்கு குலுக்கியது. ஊரும் உலகமும் அறிந்து கொள்ளும் பிரசித்திபெற்ற போராட்டமாக அது இருந்தது. ஆனால் பொலிசார் எடுத்துக்கொண்ட ஒரு பட்சமான நடவடிக்கைகளினாலும், ஒரு சில துரோகிகளின் காட்டிக் கொடுப்பு சமரச வேலைகளினாலும் மாவிட்டபுரத்தைப் பொறுத்த லட்சியம் பூர்த்தியாகவில்லை. இந்தப் போராட்டம் தொடர வேண்டியதொன்றாகும். அதே சமயம், மாவிட்டபுரம் போராட்டத்தின் வீச்சுதான் செல்வச்சந்நிதி போன்ற பல ஆலயங்களின் கதவுகளைத் திறக்க வழிவகுத்தது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இதற்காக முன்னின்று உழைத்த பெரியார்கள் அனைவருக்கும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் இந்த மாநாடும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளது.

### காட்டிக் கொடுப்பு

தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் இயக்கத்தையும்—போராட்டத்தையும் காட்டிக் கொடுக்கும் துரோக வேலைகளும் ஒரு பக்கம் நடந்து கொண்டு தான் இருந்தன. இந்த இழிசெயலில் பழக்கப்பட்டவர்களான திருவாளர்கள் எம். சி. சுப்பிரமணியமும், ஜி. நல்லையாவும் முன்னணியில் நின்றது அனைவருக்கும் தெரியும். கொடிகாமத்திலும் சங்கானையிலும், இதர பகுதிகளிலும் நடந்த சம்பவங்களுக்கும் தமக்கும் எவ்வித ஒட்டும் உறவும் இல்லை என்று பிரதமருக்கும் பத்திரிகைகளுக்கும் அறிக்கை விடுத்து, பொலிஸ் ஜீப் வண்டிகளில் பவனி வந்து காட்டிக் கொடுப்பு வேலைகளில் ஈடுபட்டதையும், மாவிட்டபுரம் போராட்டத்தை ஆரம்பத்திலிருந்தே கபடத்தனமாக எதிர்த்த இவர்கள் இறுதி நாளில் வலிய நுழைந்து போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பதற்காக சமரச நாடகமாடியதையும் கவனத்தில் கொள்ளும்போது, இது இவர்களின் அன்றாட மக்கள் விரோத நடவடிக்கைகளில் எச்சரிக்கையாக இருந்து நமது ஐக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது.

### சட்டமும் அதை அமுல் நடத்துவோரும்

தாழ்த்தப்பட்ட மக்களும் இதர முற்போக்காளர்களும் தொடர்ச்சியாக எழுப்பிய குரலினால் கொண்டுவரப்பட்ட சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைபாடு ஒழிப்புச் சட்டத்தை ஒழுங்காக அமுல் நடத்த வேண்டிய பொலிஸார், அதனைச் செய்யாது, அச்சட்டத்தை அமுல் நடத்தக் கோரும் மக்களுக்கு எதிராகவும், அச்சட்டத்தை மீறும் நபர்களுக் காதரவாகவும், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்தும், உரிமை கோரிய மக்களை துன்புறுத்தியும் வந்தது, வருகிறது. மக்களின் கிளர்ச்சியினால் மாவிட்டபுரத்தில் தொடக்கத்தில் நிர்ப்பந்தத்தின் மீது சட்டத்தை அமுல் படுத்த முன் வந்த பொலிஸார் பிற்பகுதியில் வவுனியா சுந்தரலிங்கத்துக்கும் அவரது பிரபுத்துவ எண்ணங்களுக்கும் அடி பணிந்தனர்,

பொலிஸாரின் இந்தப் போக்கை அனுமதிக்கமுடியாது. அவர்களின் இந்தப் போக்கை மாற்றவும், சட்டத்தை அமுல் படுத்தவும், அவசியம் ஏற்பட்டால் சட்டத்தை திருத்தவும் கோரி எமது இயக்கத்தை நாம வலுப்படுத்துவதோடு, இதர பொதுஜன ஸ்தாபனங்களும் இதனை வலியுறுத்தக் கோர வேண்டும்.

இயக்கமும்—போராட்டமும் தொடரட்டும்!

இயக்கத்தையும்—போராட்டத்தையும் மேலும மூசசாகக் கொண்டு செலலத் திட்டங்கள் தீட்டவும், தீர்மானங்கள் எடுக்கவும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின இந்த மாநாடு நடைபெறுகிறது.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் கடந்த மாநாட்டுத தயாரிப்புக் குழுவால் வெளியிடப்பட்ட அழைப்பில ''தீண்டாமை தமிழ் மக்கள் மத்தியில் புரையோடிய புற்றுநோயாக—பெரும் ஆபத்தானதும், அவமரியாதைக்குரியதுமான சின்னமாக இடம்பெற்றுள்ளது. இது நிலப் பிரபுத்துவ காலகருத்தோட்டங்களாலும், நடைமுறைகளாலும பாதுகாக்கப்பட்டு வருவதுடன அந்நியர் ஆட்சிக்காலகட்டத்தில ''தேசவழமை'' மூலம் வசப்படுத்தப்பட்டு குல-மத ஆதிக்கங்களால் நிலைநிறுத்தப்பட்டுள்ளது'' என எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. இது, மிகமிகச் சரியானது என்பதைக் கடந்த காலப் போராட்டம் தெட்டத் தெளிவாகக் காட்டிவிட்டது.

இந்த அனுபவங்களைக்கொண்டு இந்த மாநாட்டு முடிவுகள் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்தில் ஒரு மைல் கல்லாகவும், தமிழினத்தின் விமோசனத்துக்கும், தேசிய விடுதலை இலட்சியத்துக்கும் உறுதுணை பயப்பதாகவும் அமைய வேண்டும்.

எமது போராட்டம் ஆலயப் பிரவேசத்திற்கானதோ, தேநீர்க்கடை, பாடசாலை, பொதுக்கிணறுகள் போன்ற விஷயங்களிலும்இதர துறைகளில் மறுக்கப்பட்ட மனித உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சிகளையும உள்ளடக்கிய போராட்டமோ மட்டுமல்ல. அடிமை—குடிமை முறைகளுக்கெதிரானதும், நிலப்பிரசசினை, பொருளாதார சுதந்திரம், கலாச்சார விடுதலைக்குமான போராட்டமுமாகும்.

எனவே எமது போராட்டம் இந்த நாட்டில் சகல துறைகளிலும் ஒடுக்கப்பட்டு, சுரண்டப்பட்டுக் கிடக்கும் தொழிலாளர்கள், விவசாயிகள், ஏழை வெகுஜனங்கள, மற்றும் மாணவர்—வாலிபர் ஆகியோருக்குமான தேசிய விடுதலைப் போராட்டத்துன ஒரு பகுதி. எமது போராட்டம இந்த மக்களின பொதுப போராட்டத்துடன இணைந்தது.

எமது தொடர்ச்சியான போராட்டத்துக்கும், இன்று முன்னுள்ள போராட்டங்களுக்கும், எதிர்நோக்கியுள்ள கடமைகளை நிறைவேற்றவும் எமக்கு நண்பர்கள் ஏராளம் உளர். எதிரிகளோ விரல் விட்டெண்ணக் கூடிய சிலர்.

எமது போராட்டத்திற்கு மலைநாடு, திருமலை, மட்டக்களப்பு, கொழும்பு இதர பகுதிகளில் வாழும் தமிழ் மக்களினதும் தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்களினதும் பூரண ஆதரவு இருக்கிறது. எமக்கு ஆதரவாக தாமாகவே இயக்கங்களை நடத்தினர். அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளது எமது இயக்கம். தொடர்ந்து நடைபெறவிருக்கும் எமது போராட்டங்களுக்கு அவர்களது ஆதரவு இருக்கும். இதனை மேலும் பலப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

**ஐக்கியப்படுவோம்! பலப்படுத்துவோம்! முன்னேறுவோம்!**

**சாதி அமைப்பு தகரட்டும்!**

**மக்கள் இயக்கம் வலுக்கட்டும்!!**

**ஜனநாயக அமைப்பு மலரட்டும்!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம் இன்றி போகாது சாதிப்பேய்

எஸ். ரி. என். நாகரட்ணம்

உலகையும், என்னைச் சூழவுள்ள நடவடிக்கைகளையும் அறியத் தொடங்கிய காலந்தொட்டு, "நான் சிறுபான்மைச் சமுகத்தைச் சேர்ந்தவனாய் இருந்தபடியால் சாதியின் அடக்குமுறையை வெறுக்கத் தொடங்கினேன். அது ஒழிய வேண்டும், அதை ஒழிப்பதில் நானும் பங்கு கொள்ள வேண்டும் என்ற காரணத்தால் 1952-ம் ஆண்டில் மகாசபையில் அங்கத்தவராக சேர்ந்தேன். 1950-ம் வருடம் நான் எனது கடைக்கு புடவை எடுப்பதற்காக முனீர்ஸ் புடவை ஸ்தாபனத்தில் சரி சமனுக ஆசனத்தில் அமர்ந்து பேரம் பேசிய காரணத்துக்காக அவமதிக்கப்பட்டேன். சாதி அடக்குமுறை என்பது சாத்வீகமான முறையில் பாதுகாக்கப்படவில்லை என்பதற்கு இது நான் நேரில் கண்ட அனுபவமாகும். இந்த நிகழ்ச்சி என்னை மேலும் கொதிப்படையச் செய்தது. இதனல் மகாசபைக்கு நான் விஸ்வாசமாக வேலை செய்து வந்தேன். அதன்பின் 1956-ம் ஆண்டு தொட்டு தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைக்கு ஆதரவளித்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து வந்தேன். உடுவில் தொகுதி அபேட்சகராக நியமிக்கப்பட்டவர்களுக்காக மனப்பூர்வமாக வேலை செய்தேன். சரீர உதவி, பண உதவி போன்றவற்றை முகச் சலிப்பின்றிச் செய்தேன்.

ஆனல் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாக பிரிந்த காலந்தொட்டு எனது மனதிலும் தொடர்ச்சியான போராட்டம் நடந்து வந்தது. சுமார் பதினைந்து வருட காலமாக திருவாளர் எம். சி. சுப்பிரமணியத்தின் தலைமையில் நாம் சாதித்ததென்ன? என்ற கேள்வி மனதில் எழுந்தது. சிறுபான்மைத் தமிழருள் உள்ள வசதிபடைத்த சிலருக்கு உத்தியோகம் எடுத்துக் கொடுப்பது, இடமாற்றங்கள் எடுத்துக்கொடுப்பது, சிறுபான்மைத் தமிழரின் ஸ்தாபனம் என்ற செல்வாக்கை வைத்துக்கொண்டு சிலருக்கு வெளிநாட்டுப் படிப்புக்கு உதவிகள் செய்து கொடுத்தது, (எனது தம்பி உட்பட) செனட்டர் பதவிகள் பெறுவது, ஜே. பி. பட்டங்கள் பெறுவது போன்றவையே நாம் சாதித்தவை. சாதி அமைப்பின் அடித்தளத்தில் நாம் கைவைக்கவில்லை, தீண்டாமைக்கெதிராக ஒரு உருப்படியான செயலைக் கூடச் செய்யவில்லை. அப்படி ஏதாவதுசெய்திருந்தாலும் வெறும் சண்துடைப்புக்சாகச் செய்யப்பட்டனவாகவே அவை இருந்தன. மக்களிடமிருந்து இயற்கையாகவே தீண்டாமைக் கெதிரான கிளர்ச்சிகள் தோன்றிய காலத்தில் எல்லாம் சண்டை வரும், அழிவு வரும், எம்மிடம் போதிய பலம் இல்லை என்ற காரணங்களைக் காட்டி அவற்றைப் பூசி மெழுகும் கைங்கரியத்தைத் திறமையாகச் செய்தோம். இவையெல்லாம் எனக்கு கடந்தகாலப் பாதையில் வெறுப்பை உண்டாக்கியது. அடுத்து என்ன செய்யவேண்டும் என்று தெரியாத காரணத்தால் ஓர் விரக்தியும் உண்டாகியது.

அக் காலகட்டத்தில்தான் "பீட்டர்கெனமனைத் தலைமையாக கொண்ட திரிபுவாதிகள்" என்று உலகெங்கும் அழைக்கப்படுவோரின் கட்சியின் சில முக்கிய தலைவர்கள் என்னை அணுகினர்கள். "தமிழரசுக் கட்சியால்தான் சாதிப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் அவர்கள் மீதே சுமத்த வேண்டும்" என்ற கருத்தை முன்வைத்தார்கள். அவர்கள்மேல் எனக்கிருந்த அற்ப சொற்ப நம்பிக்கையையும் இது உடைத்தெறிந்தது. இவர்களது கபடத்தனத்தையும் முன்னுக்குப்பின் முரணான ஏமாற்று வேலைகளையும் தெரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட எனக்கு வேதனையையும் ஆத்திரத்தையும் உண்டாக்கியது.

அந்த நேரத்தில்தான் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தீண்டாமைக் கெதிரான பிரச்சாரத்தை ஆரம்பித்தது போராட்டம் ஒன்று தான் தீண்டாமையை ஒழிப்பதற்கான ஒரேவழி என்பதை உறுதியுடன் முன்வைத்தது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனியாக என்று ஒரு ஸ்தாபனம் இருக்கக் கூடாது. தீண்டாமை ஒழிப்பில் நாட்டங் கொண்ட ஸ்தாபனம் ஒன்று அமைய வேண்டும் என்றும் வற்புறுத்தியது. இந்த வழிகாட்டல்கள் எனது குளம்பிய உள்ளத்திற்கு வழிகாட்டியது. இந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் நான் பங்கு கொண்டேன், அதற்காக உழைத்தேன். இந்த அடிப்படையிலேயே 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் தேதி "தீண்டாமை ஒழிக" என்று சங்க நாதம் முழங்கி, "போராட்டம் இன்றேல் போகாது சாதிப்பேய்" என்று மாற்ற முடியாத உண்மையை உலகறியச் செய்தோம். அன்று நாம் ஆரம்பித்த ஊர்வலத்தைப் பொலிஸ் தடுத்தது. நாம் பொலிசை எதிர்த்து போராடினோம். அதில் எமது தோழர்களில் மூவரை பொலிஸ் கைது செய்தார்கள். ஆனாலும் நாம் பொலிஸ் மரியாதையுடன் ஊர்வலம் நடத்தினோம். இது போராட்டம்தான் சரியான வழி என்பதற்கு நாம் கண்ட மற்றோர் உதாரணம். பொலிஸ் மட்டும் எங்களைத் தடுக்கவில்லை. ஊர்வலம் நடக்க இருந்த தினத்திற்கு முன் எம். சி. சுப்பிரமணியமும், ஐ. ஆர். அரியரத்தினமும் என்னிடம் வந்தார்கள். என்னிடம் தமக்கிருந்த செல்வாக்கைப் பிரயோகித்து என்னை ஊர்வலத்திற் பங்கு கொள்ளவிடாமல் தடுப்பதற்கு பல பிரயத்தனங்கள் செய்தார்கள். அவர்கள் இன்று யாருடன் நிற்கிறார்கள் என்பதை இது எனக்குத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது.

இந்த இரண்டு வருட காலத்திற்குள்தான் சாதிப் பிரச்சினை என ஒன்று வட மாகாணத்திலுண்டு என்ற விசயம் வெளி உலகத்துக்கும் பரவியுள்ளது. சாதி அமைப்பின் அடித்தளத்தையே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆட்டங்காண வைத்துள்ளது. இந்த இயக்கத்துக்குப் பக்கபலமாக நின்று உதவிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு நான் எனது சார்பிலும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் சார்பிலும் நன்றி செலுத்த விரும்புகிறேன். நாம் எடுத்துக்கொண்ட பயணம் இன்னும் முடியவில்லை. அது கரடு முரடானது, கஷ்டமானதுங்கூட. அவற்றைப் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு மேலும் போராடுவோம் என்று சபதமேற்று உறுதியுடன் முன்செல்வோம்.

இன்று தமிழ் மக்களுக்கு முன் பல தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் உள்ளன. மொழிப் பிரச்சினையும், பொருளாதாரப் பிரச்சினையும் அவற்றுள் சில. சிறுபான்மையோர் என்று அழைக்கப்படும் எமது உரிமைகளுக்காக, உயாசாதியில் உள்ள சகல முற்போக்காளரும், சாதாரண ஏழை மக்களும் எம்முடன் ஒத்துழைக்குமாறு வேண்டிக்கொள்கிறோம். அப்போதுதான் நாம் ஐக்கியப்பட்டு ஒரு பொதுப் போராட்டத்தை நடாத்த முடியும். இப்பிரச்சினை தீர்க்கப்பட்டால் பொதுவான கோரிக்கைக்காக நாம் முன்னணிப் பாத்திரம் வகிப்போம் என்று உறுதிகூற விரும்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை கண்ட வீர வரலாறு

வ. நாகலிங்கம்

போராட்டமே எமது ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுத்துத் தந்தது; இதற்குச் சில சரித்திரச் சம்பவங்கள் சான்று பகருகின்றன. எனினும், எமது சங்கானையைப் பொறுத்தளவில் போராட்டம், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விமோசனம் பெறும் விஷயத்தில் எவ்விதம் உதவியிருக்கிறதென்பதற்கு ஆதாரமாகச் சில சம்பவங்களைக் கவனிப்போம்.

மனிதன் பிறக்கும்போது சுதந்திரமாகவே பிறக்கிறான். அவனை ஆண்டவன் "மனிதனே! நீ இன்ன சாதியாகத்தான் பிறத்திருக்கிறாய், ஆனபடியால் நீ மற்றைய உயர்சாதியினருடன் சமமாக மதிக்கப்படக்கூடாது" எனக்கூறவில்லை, அப்படிச் சுதந்திரமாகப் பிறந்த மனிதன், இறந்த பின்புகூட அவனது உடலை மயானத்தில் விரும்பியபடி எரிக்கவோ அன்றிப் புதைக்கவோ முடியாத ஒரு அநாசரிகமான நிலை எமது சைவ சமயத்தவர்களுக்கிடையில் நிலவி வந்தது. இந்த நிலைமையைச் சங்கானை வாழ் ஒடுக்கப்பட்ட மக்கள் சுதந்திரமான வாழ்வு வாழவேண்டுமென்ற மன உந்தலினால் 1931-ம் ஆண்டு ஆவணி மாதம் 31-ந் திகதி ஒரு வயோதிபரின் பிணத்தை மயானத்தில் எரிக்க முற்பட்டனர். அந்த வேளையில் சாதி வெறியர்கள் எல்லாரும் ஒன்றுகூடிப் பலாத்காரத்தைப் பிரயோகித்துத் தாக்க முற்பட்ட அவ்வேளையில் அடக்கப்பட்டு வந்தவர்களுக்கும் அடக்குபவர்களுக்குமிடையில் மிகப் பிரமாண்டமான போராட்டம் நடைபெற்றது. இறுதியில் சாதி வெறியர்கள் தமது தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டிய நிலை உருவாகியது. எனவே அன்று சங்கானையில் ஏற்பட்ட போராட்ட உணர்வே இன்று வட இலங்கை பூராவும் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது பிணத்தைத் தாம் விரும்பியவாறு எரிக்கலாம் அன்றிப் புதைக்கலாம் என்ற நிலை உருவாகக் காரணமாயிருந்தது.

சங்கானை மக்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலாக முன்னணியில் திகழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதற்கு இன்னும் பல ஆதாரங்கள் உண்டு.

1957 ம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றத்தினால் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் என்று ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. போராட்டமே தமது வாழ்வின் விடிவுக்குரிய ஒரே மார்க்கமென வாழ்ந்த நம்மக்கள் சட்டம் வந்த உடனேயே ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் ஆலயங்களுக்குள் உட்சென்று வணங்கும் உரிமையுண்டு என்று முதன் முதலில் சங்கானைப் பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடு செய்வதற்காகச் சென்றார்கள். அந்த நேரத்தில் கோயில் உரிமையாளனாகிய சாதி வெறியன் அவர்களை வெளியேறச் சொன்னபோது "நாம் பலாத்காரம் புரிய வரவில்லை; இறைவழிபாடு செய்யவந்திருக்கிறோம்" என்று கூறி அமைதியாக வழிபாடு செய்துவிட்டு வந்தார்கள். இதைப் பொறுக்காத சாதி வெறியன் நீதிமன்ற மூலம் வழக்குத் தொடர்ந்தான். பின்பு இருசாராருக்குமிடையில் நடைபெற்ற வழக்கின் தீர்ப்பு, ஆலயத்தினுள் யாரும்

---

**திருத்தம்**

51-ம் பக்க படவிளக்கத்தில், சின்னர் குமரேசு என்றிருப்பதை, வன்னியன் குமரேசு என்றும், 52-ம் பக்க படவிளக்கத்தில் சின்னர் குமரேசு என்றிருப்பதை சின்னர்-கார்த்திகேசு என்றும் திருத்தி வாசிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று வழிபடலாம் என்று எமக்குச் சாதகமாகவே அமைந்தது. இன்னும் வட இலங்கையிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களான நல்லூர், வண்ணைசிவன், போன்ற ஆலயங்களின் கதவுகள் வழிபாட்டுக்காகச் சகலருக்கும் திறக்கப்பட்டதற்கான சூழ்நிலையையும் சங்கானையில் நடைபெற்ற ஆலயப் பிரவேசத்தின் பலனுகவேதான் என்ருல் மிகையாகாது.

முன்பு நமது ஒடுக்கப்பட்ட மக்கள் தாம் விரும்பியவாறு உடை அணியவோ விவாக வீடுகளில் விசேஷமாக அலங்கரிக்கவோ மேளமடித்தல் போன்றவற்றைச் செய்யவோ பஸ்களிலே சமமாகப் பிரயாணஞ் செய்யவோ முடியாத அநாகரிகமான முறைகளும் நிலவிவந்தன. இவற்றைப் பெறுவதற்காக ஒடுக்கப்பட்ட மக்கள் அந்த அந்த நேரங்களிலே போராட்டத்தால் தமது உரிமைகளைப் பெற்றிருக்கிருர்கள். நமது பெண் ஒருவர் சட்டை அணிந்த குற்றத்திற்காக ஒரு சாதி வெறியன் தொக்கைச் சத்தகம் கட்டி அப்பெண்ணின் சட்டையை அறுத்தானும். அதைப் பொறுக்க முடியாத அப்பெண்ணின் சகோதரன் அச்சாதி வெறியனை நையப் புடைத்ததோடு அவனின் கால் ஒன்றையும் பதம் பார்த்து விட்டானும். இப்படி அந்த நாட்களில் எத்தனை எத்தனையோ அட்டூழியங்களை எல்லாம் சாதி வெறியர்கள் இழைத்து வந்திருக்கின்றனர். நாம், இவற்றை எதிர்த்த போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வந்திருக்கிருேம்.

1967-ம் ஆண்டு வட இலங்கை பூராவும் கொதித்தெழுந்த ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டத்தில் எமது மக்களும் தமது பங்கை நிறைவேற்றிச் சாதி வெறியர்களுக்குத் தகுந்த பாடம் கற்பித்திருக்கிருர்கள். 1967-ம் ஆண்டு ஆடி மாதம் 5-ம் திகதி ஓர் தேனிர்க்கடைப் பிரவேசத்தை நடத்திஞர்கள் நம்மக்கள். இத் தேனிர்க்கடைப் பிரவேசம் அமைதியான முறையில் மூன்று பேருடன் நடைபெற்றது. கடைச் சொந்தக்காரர்கள் கடைக்கு வந்தவர்களுக்குத் தேனீர் கொடுத்துக் காசு வாங்கிய சம்பவமும் நடைபெற்றது. இதைப் பொறுக்காத சாதி வெறிக் கும்பல் ஒன்று இச்சம்பவத்திற்கு முற்றும் முரணுன வகையில் தமது தேனீர்க் கடையில் தீண்டத்தகாத சாதியினர் உட்பிரவேசித்ததுமன்றிக் கடையிலுள்ள பொருட்களுக்கும் சேதம் விளைவித்ததாக ஒரு பொய் முறைப்பாட்டையும் பொலிசில் கொடுத்தனர். பொலிசிலுள்ள சாதி வெறியரும் பொய்யர் பக்கம் சேர்ந்து நின்று எமது மக்களைத் தாக்கத் தொடங்கினர். இந்நிலையில் சாதிவெறிக் கும்பலுக்கும் எமக்கு மிடையே அல்லோலகல்லோலமான ஒரு நிலை உருவாகியது. இதன் பயனுக எமது வீரர்களில் ஒருவனுகிய சின்னர் கார்த்திகேசு உயிரிழக்க வேண்டி நேர்ந்தது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட சம்பவங்கள் பலவற்றில் பொலிஸ் குண்டர்களினுலும் சாதி வெறியர்களினுலும் நாம் அதிகமாகத் தாக்கப்பட்டோம். இச்சம்பவங்களின்போது சங்கானையே ஒரு போர்க்களமாக மாறியது. அதில் உறைவிடங்களையும் உடமைகளை இழந்தோர் ஏழுபேர். இப்படியே தொடர்ச்சியான பல சம்பவங்களைத் தொடர்ந்து எமது வீரர்களில் ஒருவர் பண்டத்தரிப்பிலும் மற்றவர் சங்கானைச் சந்தைக்கு அண்மையிலும் வைத்துத் தாக்கப்பட்டு அங்கவீனர்களாயினர் இதன் பிரதிபலிப்பாக ஏற்பட்ட நிலைமையில் வீரன் குமரேசு சாதி வெறியர்களின் சூழ்ச்சியால் சுடப்பட்டு இறந்தான். அவ்வீரனின் பிரேதத்தை நாம் வழக்கமாகக் கொண்டு செல்வது போல நமது இடத்தினூடாகச் சென்று எதிரிகளின் பாதையால் கொண்டு செல்லும்போது வஞ்சகர்கள் கேவலமான முறையில் பனைகளுக்குப் பின்னுல் ஒழித்திருந்து பிரேத ஊர்வலத்தில் சென்றவர்களைத் தடுத்து நிறுத்தித் துப்பாக்கியினுல் சுட்டனர். அப்படிச் சுட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது எமது தரப்பில் முப்பத்தொருபேர் காயமடைந்தனர். இப்படி நடைபெற்ற பல சம்பவங்களை முறைப்பாடு செய்வதற்காகப் பொலிஸ் நிலையம் சென்ற எம்மவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தார்கள். எமக்காக உதவி புரிய வந்த உயர்சாதி உத்தமர்களையும் பொலீஸ் குண்டர்கள் தாக்கினார்கள். இவ்வளவு இன்னல்களும் எமது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட போதும் அவர்கள் விடாப்பிடியாக நின்று எமது பிரேதத்தை எதிரியின் கேந்திரஸ்தானமான பாதையால் கொண்டு சென்று எரித்தனர். இச்சம்பவங்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் நியாயமான போராட்டங்களை இலங்கை முழுவதும் வெளிப்படுத்தியுள்ளது. எமது தரப்பில் மொத்தமாக உயிரிழந்தவர்கள் இருவர். உடமைகளையும் உறைவிடத்தையும் இழந்தோர் ஏழுபேர். காயம்பட்டோர் முப்பத்தொருபேர். அங்கவீனப்பட்டோர் இருவர். இவ்வளவு நஷ்டங்கள் நமக்கு ஏற்பட்டிருப்பினும் உரிமையே எமது குறிக்கோள் என்ற நோக்கோடு மாமேதை மாஒ சே - துங் கூறியது போன்று போராட்டமென்பது தூய்மையானதோ அன்றி மென்மையானதோ அல்ல; அது இலகுவில் செய்து முடிக்கக்கூடியதுமல்ல அதைப் போலவே, நாம் கரடுமுரடான பாதையிலும் எமது உரிமைகளை நாடி உறுதியுடனும் உற்சாகத்துடனும் வெற்றிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். இதே நேரத்தில் எமது போராட்டத்தின் போது அல்லற்பட்ட எம்மக்களின் பக்கம் நின்ற எமது நண்பர்களையும் எமக்கு எதிராக நின்ற எதிரிகளைப் பற்றியும் சொல்லுவது அவசியம். எமது போராட்டம் உச்சக் கட்டத்திலிருந்த நேரத்தில் எமது மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருந்த வேளையில்தான் திருவாளர்கள் எம். சி. சுப்பிரமணியமும், ஜி. நல்லையாவும் இச்சம்பவங்களுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்றும் இது சிலவிஷமிகளின் வேலையென்றும் பத்திரிகைகளுக்கும் பிரதம மந்திரிக்கும் அறிக்கை விட்டார்கள்; காட்டிக் கொடுத்தார்கள். இச்சம்பவமும் எமக்கு ஒரு அனுபவந்தான். இப்படிப்பட்ட சந்தர்ப்பவாதிகளையும் காட்டிக்கொடுப்பவர்களையும் நாம் மறக்காமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நமது ஐக்கியத்தைப் பாதுகாக்கவேண்டும்.

எமது போராட்டங்களுக்கு பூரண ஆதரவு தத்த நாட்டிலுள்ள சகல பகுதி மக்களுக்கும் பொது ஸ்தாபனங்களுக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்திற்கும் எமது மக்கள் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மேலும் எமது போராட்ட இயக்கமான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தைக் கட்டி எழுப்புவதில் இதர பகுதி மக்களுடன் நாமும் உறுதுணையாக நிற்போம்.



*சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் ஆலயங்களைத் திறந்துவிடக் கோரியும், தேனீர்க் கடைகளில் சமத்துவத்தை நிலைநாட்டக் கோரியும், சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி நடத்தப்பட்ட போராட்ட முக்கியத்துவம் வாய்ந்த சாதி எதிர்ப்பு ஊர்வலம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே அணியில் ஐக்கியப்பட்டு முன்னேறுவோம்!

ப. கிருஷ்ணன்

இலங்கையின் வடபகுதியில் சாதாரண மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, உயர்சாதியினரால் அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் தாழ்த்தப்பட்ட மக்கள் தம்மை அடக்குபவர்களுக்கெதிராகப் போராடுவது வரலாற்றில் தொடர்ச்சியான சம்பவமாகும். இருப்பினும் கடந்த 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் திகதிக்குப் பின்னர்தான் தாழ்த்தப்பட்ட மக்களின் நியாயமான போராட்டம் ஓர் புதிய வடிவில் அகில இலங்கையின் கவனத்தையும் ஈர்க்கும் ஓர் புரட்சிகரப் போராட்டமாக உருவெடுத்துள்ளது.

தாழ்த்தப்பட்டமக்கள் சாதாரண மனிதர்களைப்போல் தெருவில் நடமாடவோ தாகத்திற்குத் தண்ணீர் அள்ளிக் குடிக்கவோ கூட உரிமையற்ற மக்களாக நாளாந்தம் கஷ்டப்பட்டார்கள். அவர்களுக்குச் சொந்தமானது என்று சொல்லிக்கொள்ள எதுவும் இருக்கவில்லை. அவர்களின் விமோசனத்திற்கு, நிலச் சொந்தக்காரர்களுக்கு எதிராகப் போராடுவதைத் தவிர வேறு எந்த வழியுமில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் முன்பிருந்ததைவிட இப்பொழுது ஒரு சில உரிமைகளைப் பெற்றுள்ளார்களென்றால் அதை உயர்சாதியினர் தாமாகவே கொடுத்துவிடவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் பலரின் இன்னுயிரைத் தியாகம் செய்தே ஒரு சிறு உரிமைகளையாவது பெறமுடிந்தது. எனவே தாழ்த்தப்பட்ட மக்களின் வரலாறு நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக நடக்கும் போராட்டத்தின் வரலாறாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களின் நீண்டகாலப் போராட்டத்தின் பயனாக இம்மக்களில் ஒரு பகுதியினர் சிற்சில உரிமைகளைப் பெற முடிந்தது. இவர்களிற் சிலர் சிறு நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாகவும், சுயமாகத் தொழில் செய்யவும், தமக்கெனச் சொத்துக்களைச் சேர்க்கவும் தலைப்பட்டனர். இப்படி ஒரு சிறு பிரிவினர் சொத்துள்ள அந்தஸ்துள்ளவர்களாக மாறினர். இவர்கள் தம்மையும் உயர்ந்த சாதியினராகவே எண்ணிக்கொள்கின்றனர். இத்தகைய பணம் படைத்த ஒரு பிரிவினர் படிப்படியாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குள் உயர்ந்தவர்கள் என்ற இடத்தைப் பிடித்தனர். தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளைப் போராடிப் பெறுவதற்குப் பதிலாகத் தம்மை வளர்த்துக்கொள்ளவும், தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரால் சலுகைகள் பெறுபவர்களாகவும் மாறினர். இதுகாலவரை வறுமையிலும் சாதி அடக்குமுறையாலும் அவதிப்பட்டு, அவற்றிற்கெதிராகப் போராடிய தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்ட உணர்வு இந்தக்கால கட்டத்தில் மழுங்கடிக்கப்பட்டது. போராட்டங்கள் அநாவசியமானவையென்றும், காலக்கிரமத்தில் எல்லாம் மாறுமென்றும் அரசாங்கத்திடம் சில சலுகைகள் பெறறுக்கொண்டால் போதுமென்ற மயக்கமும் இந்த இடைக்காலத்தில் ஏற்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்கள் எனப்பட்டவர்கள் செனட்டர் பதவிகள், ஜே.பி. பதவிகள் சில வேலை வாய்ப்புகள், இடமாற்றங்கள் ஆகியவற்றைப் பெறுவதே தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்த சேவையாகும். இதனால் இத்தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட பதவி புகழ் மோகங்களின் மோதலால் சாதிக்கொரு சங்கங்களாக- ஸ்தாபனங்களாகப் பிரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதங்கள் ஏந்திடுவோம்!

தன்னுழைப்பைத் தானுண்ணத் தடுக்கின்ற சமூகநெறி
இன்னும் இருப்பதுவோ; இருந்திடநாம் விடுப்பதுவோ?
தட்டிப் பறிப்பதுபோல் தாம் சுகிக்கும் முதலைகளை
வெட்டித் தலைகுவிப்போம்! வீணர்தம் தனியுடமைச்
சொத்தெல்லாம் பறித்திடுவோம்! சுகமெல்லாம் பிடுங்கிடுவோம்!
பித்தர்க்குக் காவல்தரும் பேயாட்சி உடைத்தெறிவோம்!
உழுவார்க்கு வெறுவயிறும் உழைப்பார்க்குப் பட்டினியும்
எழுதி வைத்தவிதி இறையவன் விதியென்றால்
அறை கூவல் விடுத்திடுவோம்! அடுக்காத செயல் செய்த
இறைவனுக்கும் எதிராக எம்போரைத் தொடுத்திடுவோம்!
அடிமைகளே எழுந்திடுக! ஆண்டானை ஆண்டிடவே
படையமைத்துப் போர் புரிவோம்! பலம்எங்கள் பலமேதான்!
மனமாற்றம் உறுவரெனும் மடமைகளைக் கைவிட்டு
இனியொரு விதிசெய்வோம் எந்நாளும் காத்திடுவோம்!
ஆற்றல் மிகு கரத்தில் ஆயுதங்கள் ஏந்துவதே
மாற்றத்துக் கானவழி மாற்றுவழி ஏதுமில்லை!

— எஸ். ஜி. கணேசவேல்

★ ★ ★

உருவெடுத்த தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்ட பாரம்பரியத்தையே திசை திருப்ப முயன்றன. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலோரின் வாழ்க்கை நிலை, முன்பிருந்ததைவிட சீரழியத் தொடங்கியது.

இந்தக் கால கட்டத்தில் தான் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்கான போராட்டம் பல்வேறு இடங்களில் பல்வேறு ரூபங்களில் வெளிப்பட்டது. சங்கானையில் தேநீர் கடைப்பிரவேசமாகவும், அச்சுவேலியில் ஆலயப்பிரவேசமாகவும், கொடிகாமத்தில் தேநீர்க்கடைப் பிரவேசமாகவும் அது உருவெடுத்தது.

சமூகக்குறை பாட்டுச் சட்டத்தின் கீழ் கடைகளில் தேநீர் கொடுக்க மறுப்பது சட்ட விரோதம் எனப்பட்டது. ஆனால் தேநீர் குடிக்கச்சென்றவர்களையே பொலிஸ் கைதுசெய்து காவலில் வைத்து, சட்ட விரோதமாகக் கூட்டம் கூடி குழப்பம் செய்யும் நோக்கத்தோடு கடைக்குச் சென்றதாக அவர்கள்மீதே வழக்குதொடுத்து சட்டத்தை நிலை நாட்டிய அதிசயத்தை நாம் கண்டோம். அதற்கும மேலாக மாவிட்டபுரத்தில் சமூகக் குறைபாட்டுச் சட்டத்தின் பாதுகாப்பில் வழிபடச்சென்ற தாழ்த்தப்பட்ட மக்களை வாசலில் வழிமறித்த நிலப்பிரபுத்துவத்தின் பிரதிநிதியான வவுனியா சுந்தரலிங்கத்தை சட்டம் என்ன செய்தது? கொழும்பிலிருந்து சட்டத்தைப் பாதுகாக்க விமானத்தில் பறந்து வந்த உயர்தர பொலிஸ் அதிகாரி சுந்தரனைப் பாதுகாத்து அங்கு திரண்டிருந்த உரிமையற்றமக்களை அடித்து விரட்டினர். பிற்போக்கு வாதிகளும் முதலாளித்துவ பத்திரிகைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைப் பார்த்து பலாக்காரம் பிரயோகிக்காதீர் என்று உபதேசம் பண்ணுகின்றனர். சுட்டெரிக்கும் வெயிலிலும், இறைத்து விட்ட தண்ணீருக்குள்ளும் இருந்த ஒடுக்கப்பட்ட மக்களின் மேல எறிகுண்டையும் மண்ணடைத்த போத்தல்களையும் வீசியவர்கள் பலாத்காரத்தைப் பிரயோகித்தார்களா? இவற்றைப் பொறுத்துக்கொண்டு பொறுமையாய் இருந்தவர்கள்தான் பலாத்கார வாதிகளா? ஆனால் இதிலிருந்து நாம் நல்லதொரு பாடத்தைக் கற்றுக்கொண்டோம். சாதி வெறியர்கள் எம்மை பலாத்காரத்தால் அடக்கி ஒடுக்கமுற்படும்போது அதே எதிர்ப் பலாத்காரத்தால் அவர்களை முறியடிப்பதே சரியான மார்க்கமாகும்.



மாவிட்டபுரத்தில் நடைபெற்ற ஆலயப் பிரவேசப் போராட்டத்தின் உச்சக் கட்டத்தின்போது தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் அதன் தலைவர் எஸ். ரி. என் நாகரட்ணமும் பொலீஸ் அதிபரின் ஒருதலைப் பட்சமான முடிவை உறுதியாக மறுத்த பின்னர், பொலீஸ் அதிபர் சுந்தரலிங்கம் தனது கருத்தைச் சொல்ல முற்படுகிறார். இதையடுத்து பொலீஸ் அதிபரின் முடிவை ஏற்க மறுத்த ஒடுக்கப்பட்ட மக்கள்மீது பொலீசார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்து கலைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டமும் வரலாறும்

"அம்பலத்தான்"

சாதிப் பிரச்சினை பற்றிப் பேசுகின்ற சிலர் பழந் தமிழிலக்கியங்களிலே ஆங்காங்கு காணப்படும் சில 'மனிதாபிமான'க் கருத்துக்களைச் சுட்டிக்காட்டி, பெரும் பெரும் புலவர்கள் எல்லாம் சாதி முறையை எதிர்த்தே வந்திருக்கின்றனர் என்று தமக்குத் தாமே ஒருவகையான மன அமைதியைத் தேடிக்கொள்வதைக் காணலாம். சங்கப் புலவர்களிலிருந்து இராமலிங்கர் வரை "சாதி சமயச் சழக்குகளை" கண்டித்துப் பாடியவர் பலர் உள்ளனர் என்பது உண்மையே. ஆனால் அக் கண்டனத்தின் தன்மையே கூர்ந்து நோக்கத்தக்கது. சாதி முறை கூடாது என்பதை எடுத்துக் கூறுவதற்குப் பெரும்புலமையோ, பேரறிவோ தேவையில்லை. நிலைமையை மாற்றுவதற்கு ஏற்ற வழிவகைகளைக் கூறுவதிலேயே முந்தையோர் பெரிதும் வேறுபடுகின்றனர்.

"கொடிது கொடிது வறுமை கொடிது" என்று ஔவைக் கிழவியும் பாடினாள். ஆனால் வறுமை சமுதாய நிதர்சனமாக இருந்து வந்திருக்கிறது. "இல்லை என்ற சொல்லை உலகில் இல்லை என்ன வைப்பேன்" என்று பாரதி முழங்கியபோது வறுமை வெறும் வருணனையாக அன்றி மாற்றப்பட வேண்டிய பொருளாகக் காட்சி தந்தது. சாதி முறையும் அவ்வாறுதான்.

மனிதனை மனிதன் அடக்கி அடிமைப் படுத்தும் எல்லாவிதமான முயற்சிகளும் பல்வேறு காலங்களில் போராட்டங்களினாலேயே மாற்றப்பட்டுள்ளன என்பது வரலாற்று உண்மை. மனமாற்றத்தால் அடிப்படை மாற்றம் எதுவும் ஏற்படாது, மந்திரத்தால் மாங்காய் விழாததுபோல. சாதிக்கொடுமையைப் பற்றியும் சாதி முறையைப் பற்றியும் எமது பழைய இலக்கியங்களிலே எடுத்துரைத்தவர்கள் ஆகக் கூடிய பட்சம் மனமாற்றத்தையே எதிர் பார்த்தனர். உடையவனும் இல்லானும் இருந்த - வணிக வர்க்கச் செல்வாக்கு ஓங்கிய சமுதாய அமைப்பிலே - "வறியார்க்கு ஒன்று ஈவது" பற்றி விரிவாக எடுத்துரைத்துப் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' இணக்க முறையை வகுக்க முயன்றார் வள்ளுவர். வறுமையை அதிகப்பட விடாது அதனைக் குறைக்க முயன்றால் செல்வனுக்கு அதுவே உதவியாயமையும் என்று உபதேசம் பண்ணினார் வள்ளுவர். 'அறம்' உரைத்த வள்ளுவர் எவர் பக்கம் நிற்கிறார் என்பது வெளிப்படை. ஆனால் சமூக சிந்தனையாளனாகிய அவர் வர்க்கப் போராட்டத்தைத் தடுக்கவும் - கூர் மழுங்கச் செய்யவும் - முயன்றார்.

பிறப்பால் பெறும் பேதத்தை பேச்சளவில் மறுத்த பொய்யா மொழியார் செய் தொழில் வேற்றுமையை அடிப்படையாக ஏற்றுக் கொண்டு, மனிதரிடையே ஏற்றத் தாழ்வை அமைத்து அமைதி கண்டார். வள்ளுவர் புத்துலகு அமைக்க முயன்றவர் அல்லர். பழைய உலகை புத்திசாலித்தனமாக நடக்கும்படி புத்தி கூறியவரே. தார்மீக புனருத்தாரண இயக்கத்தினர், முதலாளிக்கும் (முதலாளித்துவம் அல்ல) தொழிலாளிக்கும் நட்புறவும் நல்லெண்ணமும் உருவாக வேண்டும் எனப் பிரசாரஞ் செய்து கலைவடிவங்களில் அக்கருத்தை முக்கியப்படுத்துவது போலவே, தனது காலத்துச் சமூக முரண்பாட்டிற்கு "அமைதியான" நிவாரணம் காண முயன்றார் வள்ளுவர். ஆனால் அவர் அதில் எள்ளளவும் வெற்றிபெறவில்லை என்பது சரித்திரச் செய்தி.

அருளும் அன்பும் ஆருயிர் ஓம்பலும் வள்ளுவர் தனது வர்க்கத்தவராகிய வணிகருக்குக் கூறியவை. நேர்மையாகப் பொருள் கொடுத்து நீதியாகப் பணம் பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு வள்ளுவர் இடித்து இடித்துக் கூறினர். ஆனல் வாய்ச்சொல்லால் வர்க்க இயல்புகள் மாறிவிடுமாயின் வரலாறே வேருயிருக்குமே! வள்ளுவர் பலவாறு கூறி எச்சரிக்கை செய்திருக்கவும் வணிக வர்க்கம் தனது ஈவிரக்கமற்ற சுரண்டலைத் தொடர்ந்து நடத்தியதை சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களும் பிற நூல்களும் எமக்கு ஓரளவு காட்டுகின்றன. அச்சுரண்டலையும் அதன் விளைவாகச் சமுதாயத்தில் பரவலாகக் காணப்பட்ட துன்ப துயரங்களையும் எதிர்த்து மூண்டெழுந்ததே 'பக்தி இயக்கம்' எனப்படும் வர்க்கப் போராட்டம். தமது முன்னேற்றப் பாதையில் அடியெடுத்துவைத்த பெருநிலக்கிழாரும். பிரபுக்களும் சைவம் என்ற பெயரில் "ஆதரித்துத் தின்றுழலும் புலையர்" ரையும் உடன் காட்டி - அணிதிரட்டி, எதிர்வர்க்கத்தினரின் "தலையை அறுக்கும்" அறத் தொழிலைச் செய்ய முற்பட்டனர்.

நாயன்மாரும் ஆழ்வாரும் சாதி முறைமையை எதிர்ப்பவராயினர். இறைவன்முன் யாவரும் சமம் என்று குரல் எழுப்பினர். வேடர் முதல் பறையர் வரை இறை பக்தர்களாயின் ஒன்றே என்ற கருத்து உருவாகியது. ஆனல் இதே வைதிக சமயங்கள் தனியுரிமையும் சிறப்புச் செல்வாக்கும் பெற்று விளங்கிய சோழப் பெரு மன்னர் ஆட்சியிலே முன்னிருந்ததைவிடச் சாதி முறை மிகக் கடுமையாக அனுட்டிக்கப் பட்டது. அவரவர் யோகம் பாவத்துக்கேற்பவே சாதியும் வாழ்க்கைத் தகுதியும் என்று சமாதானம் கூறப்பட்டது. இறைவன் முன் யாவரும் சமம் என்ற குரல் மறைந்தது. உயர்ந்த குலமக்களே தெய்வங்களாக உலாவினர். தெருக்களிலே 'உலாப்பவனி' வந்த மானிட மன்னன் இறைவன் ஆனன். எனவே பக்திமான்கள் இழித்துப் பாடிய சாதி முறை, சாதிச் சழக்கு சமூக நிறுவனத்தின் கூறுகளில் ஒன்ருயிற்று. சைவம் மேனிலை எய்திய பிற்காலச் சோழர் ஆட்சியிலும் மடங்கள் செழித்து வளர்ந்த காலத்திலும் வருணசிர தருமமே தலையாய தருமமாகப் பேணப் பட்டது.

எனவே மக்களது அபிலாஷை மீண்டும் தலைதூக்குகிறது. இம்முறை, சம்பிரதாயங்களையும் சடங்குகளையும் எதிர்த்துக் குரல் எழுப்பிய சித்தர்கள் சாதியெதிர்ப்பையும் தமது கொள்கையில் இணைத்துக் கொண்டனர். ஆனல் சமூகத்திலிருந்து ஒதுங்கி, புறவாசிகளாக - வெறும் கண்டனவாதிகளாக மட்டும்-சித்தர்கள் வாழ்ந்தனர். மக்களது அபிலாஷைக்கு ஆக்க பூர்வமான உருக்கொடுத்து எதிர்ப்பை நடைமுறை இயக்கமாக நெறிப்படுத்தும் ஆற்றலும் அறிவும் அவர்களிடம் இருக்க வில்லை. தமக்குப் பிடிக்காத சமுதாயத்திலிருந்து தாமாகவே விலகிக்கொண்டனர். அவ்வளவில் அவர்கள் எதிர்ப்பு நின்றது. அந்தளவிலேயே அவர்கள் மக்களைக் கவர்ந்திருந்தமையை நோக்குமிடத்து மக்கள் இன்னும் முன்னேறத் தயாராயிருந்தமை புலப்படுகிறது. இன்னென்று. சித்தர்கள் சமுதாய உணர்வு நிறைந்தவராய் இருந்தும் அவர்களது "தத்துவம்" சமய சம்பந்தமானதாயும் - அகநிலைப்பட்டதாயும் குறுகிய வரம்புக்குள் அமைந்தது. எனவே ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் அதன் செல்வாக்கு இயங்கமுடியாது போயிற்று.

இந்த வரலாற்று உண்மை சற்று ஆழமாக நோக்கத்தக்கது. ஏனெனில் சமயப் போர்வையிலேயே இதுகாலவரை சாதிப் பிரச்சினை நோக்கப்பட்டு வந்தமையால், மிகச் சமீப காலம் வரை - அதாவது நவீன காலப் பகுதியிலும் பலர் சமய அடிப்படையில் இப்பிரச்சினைக்கு விடிவுகாண எண்ணினர். கிறித்துவம், பௌத்தம் முதலிய சமயங்களைச் சேர்வதால் சாதிப் பிரச்சினைக்குத் (தம்மளவிலே) தீர்வு காண்பதாகப் பலர் கருதியிருக்கின்றனர்.

பிரச்சினை என்பது ஒரு முரண்பாட்டின் உருத்தோற்றமாகும். அம்முரண்பாட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தினுல், அதாவது செயலினுல் - போராட்டத்தினுல் தீர்க்கலாமேயன்றி-அதிலிருந்து நழுவுவதால் தீர்க்கவியலாது. அவ்வாறு வேறு மதங்களைச் சார்ந்த பின்னரும் வேறு வகையான ஏற்றத் தாழ்வுகளும் முரண்பாடுகளும் தோன்றக் காண்கின்றேம். எனவே நிவாரணம் தவருக இருந்திருக்கிறது என உணர்கிறேம்.

ஆகவேதான் முற்றிலும் புதிய நடைமுறையில் இப்பிரச்சினையை அணுகும் தேவை இப்பொழுது உணரப்பட்டு வருகிறது. இப்பிரச்சினையைத் தனித்தெடுத்து சாதிப் பிரச்சினையாகவும், சமயப் பிரச்சினையாகவும் மாத்திரம் நோக்காது, பொதுவான தேசப் பிரச்சினையாகவும், வர்க்கப் பிரச்சினையாகவும் கருதிச் செயலாற்றும் நிலைமை தோன்றியுள்ளது. பல்வேறு வகைகளிலும் பல்வேறு நிலைகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களது அடிப்படை உரிமைகளுக்காகக் கிளர்ந்து எரியும் போராட்டங்களில் இதுவும் ஒன்று. பழைய சமூக அமைப்பில் சிலர் "தீண்டாதார்" என ஒடுக்கப்பட்டது போலவே பெண்கள் பின்புத்தி உள்ளவராகவும் பேதைகளாகவும் ஒதுக்கி வைக்கப்பட்டனர்; இளைஞரோ அநுபவம் அற்றவராகவும் பெரியோர் பின் செல்லவேண்டியவராகவும் குறைத்து மதிக்கப்பட்டனர். இங்கெல்லாம் ஏற்றத் தாழ்வும், பேதமும் "தீண்டாமையும்"யும் வெவ்வேறு அளவில் உள்ளன. இவை யாவற்றுக்கும் அடிப்படையாக பொருளாதாரக் காரணிகள் இருக்கின்றன. இது தேசத்துக்கு உள்ளே, சமூக அமைப்புச் சம்பந்தமானது; பொருளாரம் சம்பந்தமானது; அரசியல் சம்பந்தமானது. சாதி முறையைப் பாவித்துப் பல உரிமைகளை மறுத்து மக்களை அடக்கும் அதே வர்க்கந்தான், அந்நிய ஏகாதிபத்தியத்தின் ஆசீர்வாதத்துடன் பாட்டாளிகளையும் உண்மையான விடுதலை வீரர்களையும் அடக்கி ஒடுக்குகிறது. ஆகவே போராட்டம் என்பது ஒன்றுதான்; அதன் களமும் காரணமும்தான் மாறுபடுகிறது.

பழைய இலக்கியங்களைக் காட்டி 'சாந்தியும் சமாதானமும்' போதிப்போர் உண்மையில் மாற்றத்தை எதிர்ப்பவர்கள்; போராட்டத்தை விரும்பாதவர்கள். அவர்கள் இலக்கியத்தைத் தமது நோக்கிற்கு ஏற்பப் பயன்படுத்துகிருர்கள். வள்ளுவன் முதல் வள்ளலார் வரை, சோலா முதல் ஷொலொக்கொவ் வரை மனிதாபிமானம் பேசியோர் தொகை பெரிதுதான். ஆனுல் மனிதனது அடிமைத் தளைகள்தான் பலவிடங்களில் இன்னும் அறுபடவில்லை. மார்க்ஸ் சொன்னுர்: இதுகால வரை தத்துவ வாதிகள் உலகை விளக்கவே முயன்றனர்; ஆனுல் நாமோ அதனை மாற்ற முற்படுகிறேம். எவ்வளவுதான் இலட்சிய உணர்வும், இரக்க சிந்தையும் இருந்தவராயினும் பண்டைய இலக்கிய கர்த்தாக்கள் - அல்லது எமக்குக் கிடைக்கும் நூல்களின் ஆசிரியர்கள் உலகை விளக்கியவரே. பாரதிதான் ஓரளவேனும் "புதியதோர் உலகு செய்வோம்" என்று பாடினுன். எமது காலஞ்சென்ற யாழ்ப்பாணக் கவிராயர் பசுபதியும்,

"புதுவுலகம் காண்பதற்குப்
புரட்சி வேண்டும்
இது உலகம் எமக்களித்த பாடம்"

என்றும்,

"விடிவு காலம் இங்கு எமக்காம் -
இதை
வெற்றியோ டட்டித் தருவோம்"

என்றும் புதுக்குரலிற் பாடினுர். இப்புதுக் குரல் போர்க்குரல் ஆகும். 'நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்பது பழைய இலக்கியக் குரல். எல்லோரையும் உழைத்துண்ணும் 'நல்லவ'ராக்கும் புரட்சியை நாடி நிற்கிறது இன்றைய உலகம். அந்நாட்டத்தின் ஒரு சிறு பொறியே சாதிப் போராட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கொழும்பிலொரு கோலம்*

# சிவலோகமானலும்...

இ. சிவானந்தன்

சிவம் சைவம் என்பவற்றின் பொருள்விளக்கம் போலஅவர்
மனங்கனிந்த தீட்சண்யப் பார்வையினல் ஒளி பாய்ச்சி
மக்களுக்கு வழிகாட்டி வரமருளு மோர் புருஷர்,
கந்தபுரா ணத்தையெலாம் கரை கண்ட கருத்தாளன்,
நாவிலெழும் நறுந்தமிழில் நாயன்மார் நடமிடுவர்,
ஞானகுரு யாழ்ப்பாண யோகரது ஒரு சீடன்
புராணம் படிப்பதிலே பொழுதுபட்டுப் போனலும்
வீட்டுக்கு வந்தே விடாய்தீர்க்கும் ஓர்சீலன்,
அறைதேடி வந்தாரென் அருகேயோர் பொடியனுடன்,
குருசிஷ்ய பக்தியிலே குன்றிப்போய் அப்பொடியன்
இருமலினை அடக்கிக் கொண் டிவர்பின்னல் நின்றிருந்தான்.

"இன்றுதான் வீட்டைவிட்டு வெளிக்கிட் டோம் நாம்
இவன் என்ரை மகனல்லச் சொல்லப் போனல்,
ஈசனுடைய மக்களெலாம் ஒன்றே தம்பி.
அன்றுமுதல் இன்றுவரை ஆர்வமுடன் கற்று,
பீ. ஏ. படிப்பதற்கும் ஆளான இவன் வீரன்.
எழுத்தறி வித்தவன் இறைவன் ஆதலால்,
இவருக்கோர் அறையெடுத் துதவ வேணும்நீர்;

வெள்ளையன் இருக்கும்போது விஷயமே வேறை தம்பி,
இலவசக் கல்விவந்து இன்றைக்கு நிலைமை கெட்டு
அனைவரும் படிக்கின்றர்கள் பகிடியா படிப்பு? மேலும்
இன்னெரு விஷயம் தம்பி - இதனை நீர் அறியமாட்டீர்,
எங்களின் வீட்டின் மேற்கே இரண்டொரு வேலிதள்ளி
அங்கொரு கொட்டில் போட்டுக் கள்ளினை விற்கும் பள்ளன்
கனகனின் கடைசிப்பையன் கதிரனும் கூடத்தம்பி,
இம்முறை இவரோடிங்கே படிக்கென வருகிருனும்;
இப்படி இருக்குதின்று கலியுகக் காட்சி", என்றுர்.
என்றவர் இருமலோடு பேச்சினை நிறுத்தச் சொன்னேன்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அறைதானே வேண்டுமென்றீர் அடுத்துள வீதிதன்னில்
இருபதாம் வீட்டிலே ஓர் சிறுஅறை உண்டுபார்த்து
அதனை நீர் எடுக்கலாமே வசதியும் படிப்பதற்கு
எதனையும் பார்த்துவிட்டால் இப்பவே முடிவாய்ப்போகும்"
என்றந்தப் பெரியார் தம்மை என்னுடன் இட்டுச்சென்றேன்.
அனைத்தையும் பார்த்தபின்னவர் திருப்தியோ டென்னைக்கேட்டார்:
"கக்கூசே கைலாசம், காசுதான் போனுலென்ன ?
ஞாயமாய் வாடைகேட்டுக் கொடுக்கலாம் ஆனல் இந்த
அறையின்மேல் உள்ளறுமில் இருப்பவர் யாரோதம்பி ?"

"ஆவலாய்க் கேட்கிறீர்கள் அவரொரு மேதை; தீரன்.
படிப்பிலே புலியே அந்தப் பருத்துறைப் பொடியரையா",
என்றனே சடுதியாக நினைவினை மீட்டுக் கேட்டார்,
"பருத்துறையிற் புறைப்பொடியன் ஒருத்தனே போன ஆண்டில்
முதல்வனுய்ப் 'பாசு' பண்ணிப் பரிசில்கள் பெற்றன் அந்தச்
சிவனருள் என்றுபேர் ஆள் இவர்அவர் தானே?" என்ருர்.

"பறையரோ பருத்துறையோ எனக்கது தெரியாதையா
இவரொரு மேதை என்றமட்டுமே அறிவேன்," என்றேன்.
என்றதும் வீட்டுக்கார மனிசியைப் பார்த்துக் கேட்டார்:
"எமக்கறை பிடிச்சுதானல் இதுமட்டும் செய்யவேணும்,
மேலறைப் பொடியர்தம்மைக் கீழறை விட்டீரானல்
மேலறை தன்னை நாங்கள் விருப்புடன் எடுப்போ" மென்ருர்.
இவற்றினைக் கேட்டவீட்டார் இலேசிலே முறுவல் பூத்து,
மேலறைத் தம்பி கீழே இறங்கிட மாட்டாரென்றும்
கீழறை வேண்டுமாயின் வாடகை அறுபதென்ருர்.
சிவம் சைவம் எனமதித்த பெரியவர் என்னை நோக்கி
"பறைப்பொடியன் மேலிருக்க இப்பொடியன் கீழேயாகில்
சிவனர் வதியுமொரு சிவலோக மானுலும்
எமக்கது வேண்டாம் தம்பி, இறங்கிவா போவோம்," என்ருர்.

---

*எங்கே போராட்டம் இருக்கிறதோ, அங்கே தியாகமும் உண்டு. மரணம் என்பது அடிக்கடி நிகழ்வது. ஆனல், நாம் மக்களின் நலன்களையும், ஏகப் பெரும்பான்மையினரின் துன்ப துயரங்களையும் மனதில் கொண்டு மக்களுக்காக உயிர் விட்டால், அது தகுதியான சாவாகும். இருந்தாலும், அனுவசியமான தியாகங்களைத் தவிர்க்க நாம் இயன்றதனைத்தையும் செய்ய வேண்டும்.*

*— மா ஓ சே-துங்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Donated by:-
PROF. K. KAILASAPATHY

# சாதி அமைப்பின் பொருளாதாரப் பின்னணி

சா. சேவற்கொடியோன்

உலக மக்களும் பல்வகை அறிஞரும் புரிந்து கொள்ளாது திகைக்கும் வண்ணம் இலங்கை இந்தியா ஆகியநாடுகளில் சமூக அமைப்பில் இறுக்கமுறச் சிக்கலாகப் பின்னப்பட்டுள்ளது சாதி அமைப்பாகும். ஏனைய நாடுகளிலிருந்த, இருக்கின்ற மானிய சமுதாயங்களிலும் காண முடியாதது இச்சாதி அமைப்புச் சமுதாயமாகும். சாதி அமைப்பின் பொருளாதாரப் பின்னணியை ஆராய்வதே இதனை விளங்கிக்கொள்ள கையாளத்தக்க தர்க்க ரீதியான விஞ்ஞான ரீதியில் காரணம் காட்டும் வழிவகையாகும்.

உலகின் நாலா பக்கங்களிலும் நிலவும்-நிலவிய மானிய சமுதாயங்களில் தனி மனிதனுக்குச் செல்வாக்கையும், ஆதிக்கத்தையும் அளித்தது நில உடமையாகும். இக் கண்ணோட்டத்தில் பார்க்குமிடத்து இலங்கை, இந்தியா போன்ற நாடுகள், இந்நியதிக்குப் புறம்பானவையல்ல என்றே ஒருதலையாகக் கூறலாம். இவ்வகைக்க முடியாத பொருளாதார அடிப்படைக் காரணத்தை மூடி மறைக்கவே அவ்வக் காலத்தில் சமுதாயத்தின் மேல் வகுப்புத் தட்டுகளில் தோன்றிய அறிஞர்கள் மூடி மறைத்துச் சமுதாயத்தின் கீழ்த்தட்டுகளில் இருக்கும் மக்களின் அறிவையும், ஆற்றலையும் மழுக்கி, முறியடிக்கும் நூல்களை வெளியிட்டனர். இவ்வகை நூல் வரிசைகளில் சிருஷ்டிக்கப்பட்டவையே வேதம், மனுநீதி போன்றவையும், ஏனைய சித்தாந்த நூல்களுமாகும்.

"ஒவ்வொரு மனிதனும் தன் பொருளாதார நிலைக்கேற்ப வர்க்க ரீதியிலேயே சிந்திக்கிறான்" என்பது பேரறிஞர் மாஓவின் கருத்தாகும். இவ்விதிக்கு இணங்கவே இந்திய மானிய-சாதி அடிப்படை கொண்ட சமூக அமைப்பில் தோன்றிய எழுத்தாளர்கள் தமது நூல்களைப் படைத்திருக்கின்றனர். சமூகத்தின் கீழ்த்தட்டுகளிலுள்ள மக்கள், துயரைச் சகிக்கவும், அடுத்த பிறப்பில் இன்பத்தைப் பெறலாமென்ற ஏமாற்றுச் சிந்தனையை உருவாக்கவுமே இந்நூல்கள் பெரும்பாலும் வெளியிடப்பட்டன.

நில உரிமையே ஒருவனுக்குச் செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் சமுதாயத்தில் அளித்தமையால், நிலங்கள் எவ்வகுப்பினர் கையில் அதிகமாக இருந்தனவோ, அவர்களே தம்மை உயர் சாதியினரெனக் கற்பனை செய்து கொண்டு, இம்முறையைச் சமுதாயத்தில் பல்வகையில் வேரூன்றச் செய்து நிலைநாட்டினர். நிலமும், பொருளும் இல்லாதவர்கள் தம் சரீர உழைப்பால் சீவியம் நடாத்தினர். இவர்களின் உழைப்பின் மிகுதிச் செல்வத்தை அபகரித்தவர்கள் மேலும் உழைப்பாளிகளைச் சுரண்டுவதற்குப் பல யுக்திகளைக் கையாண்டனர். இத்தகைய சுயநலத் தூண்டல்களாலும் சுய தேவைகளாலும் பிறந்ததே சாதி அமைப்பினால் கட்டப்பட்ட சமூகம். வியர்வை சிந்த உழைப்பவன் இழிந்தவன்; சுரண்டிச் சும்மா இருப்பவன் உயர்ந்தவன் என்ற கொள்கையை வலுப்படுத்தினர். காலா காலங்களிலும் பல்வகைத் துவேஷங்களையும் மக்களிடையே வளர்த்து உழைப்பாளி மக்களில் சில பகுதியினர்க்கும் சமூக உரிமைகளை மறுத்தனர். சாதி அமைப்புடன் கலந்த இலங்கை இந்திய மானிய சமுதாயத்தில் சுரண்டப்படும் மக்களுக்கு மேலுலகத்தில் வாழ வழிகாட்டிகளாக பிராமணரும் குரவர்களும் தம்மைத் தாமே பணித்தனர். அரசர்கள் தம் பரம்பரையைப் பாதுகாக்க உடந்தையானார்கள். வணிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தம் செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் பெருக்கினுர்கள். நிலச் சொந்தத்தாலும், பொருள் ஈட்டலாலும் ஓரளவு செல்வாக்கைப் பெற்ற உழைப்பாளி வர்க்கத்தைச் சேர்ந்த வெள்ளாளர் தம்மை ஏனைய உழைப்பாளிகளிடமிருந்து வேறுபடுத்தி மேல் வகுப்பினருடன் சேர்ந்தனர். இவர்களுடன் வேறு சில சாதியினரும் மேல் அந்தஸ்துப் பெற்றனர்.

ஆகவே சமுதாயத்தில் சுரண்டப்பட்டுப் புறக்கணிக்கப்பட்ட மக்கள், அதாவது மேல் வர்க்கங்களினுல் தாழ்த்தப்பட்ட மக்கள், இக்கொடிய முறையைத் தகர்க்க முயல்வது இயல்பாகும். ஆனுல், இவ்வாறு சுரண்டப்படும் மக்கள் அறிவுத் தெளிவும், வர்க்கக் கண்ணேட்டமும், தக்க வழிகாட்டிகளும் இல்லாது தவிக்கின்றனர். இந்த அம்சங்களில் ஓரளவுக்கேனும் யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் தோன்றிய தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் பணிபுரிவது இயல்பானது. சரியானது, நியாயமானது. தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக மகாத்மாகாந்தியினுல் ஆற்றப்பட்ட சேவைகளையும் கூறவேண்டியது இன்றியமையாதது. காந்தி அவர்கள் தீண்டாமை என்னும் கொடுமையை ஒழிப்பதில் ஓரளவு வெற்றிகண்டார். தென்னு பிரிக்க வெள்ளையர்களின் கிண்டலுக்கும், பிரித்தானிய ஆட்சியாளரின் கேலிகளுக்கும் தந்திரோபாயங்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் இலக்கானபோதே காந்தி அவர்கள் தம் கண்ணேட்டத்தை இவர்கள்பால் திருப்பினுர். இவரின் முயற்சியினுல் இந்தியாவில் ஆலயக்கதவுகள் சகல மக்களுக்கும் திறந்து விடப்பட்டன. இச்சேவை ஒன்றினுல்மட்டும் தாழ்த்தப்பட்டமக்களின் துன்பங்கள் நீங்கின என்று கூறுவதற்கிடமில்லை. இந்தியாவில் இன்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் பலவகையான இம்சைகளுக்கும் ஆளாக்கப்பட்டு வருகின்றுர்கள். சமீப காலத்தில் ஆந்திரப் பிரதேசத்தில் ஒரு கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மகனெருவன் கழுவில் ஏற்றிக் கொலை செய்யப்பட்டான் எனப் பத்திரிகைகள் கூறுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்களின் துயர் காந்தியின் சேவையால் முற்றுக அகற்றப்படவில்லை. அகற்றவும் முடியாது. அகற்ற முடியாமைக்கு அரசியலமைப்பு, நிலவுடைமை அமைப்பு, பொருளாதார அமைப்புப் போன்றவையே காரணிகளாகும்.

இச்சாதி முறை இலங்கை இந்தியா போன்ற தேசங்களில் வாழும் இந்துக்களின் மத்தியிற்ருன் நிலவுகிறது என்று வரையறுத்துக்கூற முடியாது. புத்த பிரான் 2500 ஆண்டுகட்குமுன் சாதிமுறையைக் கண்டித்து உபதேசித்திருந்தும், பௌத்த மக்களிடையேயும் குருமார்களிடையேயும் இச்சாதி முறை நிலைத்து வருகின்றது. 15-ம் நூற்ருண்டு தொடக்கம் ஐரோப்பியர் இலங்கையிலும், இந்தியாவிலும் கிறித்தவ சமயத்தைப் பரப்பி நிலைநாட்டியிருந்தும், கிறித்தவ மக்களிடையேயும் குருமாரிடத்திலும் சாதிப்பாகுபாடுகள் மறையவில்லை. இஸ்லாமிய மக்களிடையே சுரண்டல் முறை இருந்தாலும், சாதிப்பாகுபாடு அறவேயில்லாதது நல்லதொரு அம்சமாகும். தாழ்த்தப்பட்ட மக்கள் உழைப்பாளிகள்; பிறரால் சுரண்டப்படுகின்றவர்கள். இவ்வாருயின், சமயம் மாறுவதால் சாதிக் கொடுமைகளிலிருந்து தப்பலாம் என எண்ணுவதும் தவருகும். இக்கொடுமைகளை நீக்கிச் சாதி அமைப்பு முறையை ஒழிக்க வேண்டுமாயின், சுரண்டல்காரரையும், நிலவுடைமைக்காரரையும் ஒழித்து உழைப்பாளிகள் ஆதிக்கத்தைப் பெறவேண்டும். சுரண்டல்காரர்கள் தாழ்த்தப்பட்டோருக்கு உண்மையான ஆதரவு அளிப்பார்கள் என்று நினைப்பது ஏமாற்றத்திற்கு வழிவகுப்பதாகும். சாதி – மான்ய சமுதாயத்திற்குள் வாழ்ந்து கொண்டு சில சட்டங்களால் சமூகக் கொடுமைகளிலிருந்து தப்பலாமென நினைப்பது, தேன் கூட்டிற்குள் இருந்து கொண்டு தேனீக்களின் கடியிலிருந்து தப்பலாமெனக் கருதுவது போலாகும்.

University of Jaffna Library, Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தத்திற்கு இரத்தம்

பரம்பரை பரம்பரையாய்ப்
பாழும் சாதி என்று
புறம்பாக்கி உனைச்சுரண்டி
பெற்று விட்டார் பெருஞ் செல்வம்
திறம் படைத்த நீயும்
தீண்டாதார் என நினைத்து
உறங்கி விட்டாய் உலுத்தரை
உதைத் தெறிய எண்ணாமல்.

போதுமடா நீ பட்ட
பொல்லாத பாடெல்லாம்
சாதுவாக இனி இருந்து
சாதிக்க ஒன்றுமில்லை
ஆதலால் ஏந்திடடா
ஆயுதத்தை உன்கரத்தில்
சாடடா சண்டாளச்
சாதி வெறிக் கூட்டத்தை.

நீ இன்று போய் விடுவாய்
நாளை உன் மகன் வருவான்
நீ வாழ்ந்த வாழ்க்கையையா
அவன் என்றும் வாழுவது?
நீ இன்று புறப்பட்டால்
உன்னோடு ஒரு கூட்டம்
'நான் என்று' முன் வந்து
நாற்றிசையும் விரிந்து விடும்.

சமாதானம் சாத் வீகம்
சன்மார்க்கம் என்றெல்லாம்
உவமானம் பல பேசி
உனை ஏய்க்கப் பார்ப்பார்கள்
பிணமாக்கு அவர்களை நீ
போராயுதம் ஏந்தி
ரணமாக்கு! நீ புரட்சி
ராச்சியத்தைக் காண எழு.

சுமுகமாய் ஒரு போதும்
சுதந்திரத்தைப் பெற்றதாய்ச்
சமூகத்தின் வளர்ச்சியில்
சரித்திரம் கண்டதில்லை
அமுதமாய் உனைப் பேசி
அணைத்திடப் பார்ப்பார்கள்
இனி அதற்கு இடமில்லை
இரத்தத்திற் கிரத்தந்தான்!

— மாந்தோப்பு மாணிக்கனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயப் பிரவேசம்

கி. லக்ஷ்மணன் எம். ஏ.
[அதிகாரி, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்]

ஆலயப் பிரவேசம் பற்றிப் பல வருடங்களுக்கு முன்பே என் மனத்தில் எழுந்த சிந்தனைகளுட் சிலவற்றை இச்சந்தர்ப்பத்திலே குறிப்பிடுவது பொருத்தமென எண்ணுகின்றேன்.

இந்தியாவிலே இருபத்தைந்துக்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அவற்றுள் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், காசி இந்து பல்கலைக்கழகம் ஆகிய இரண்டும் தனிச்சிறப்புடையன. இரண்டும் இரண்டு பெரிய க்ஷேத்திரங்களில் அமைந்திருப்பதே அத்தனிச்சிறப்பு. தென்னிந்தியாவில் மிகப் பிரசித்திபெற்ற சிவ க்ஷேத்திரம் சிதம்பரம். அச் சிதம்பரத்திலேயே அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கட்டப்பட்டுள்ளது. அதைப் போலவே வட இந்தியாவிலே மிகப் பிரசித்திபெற்ற சிவ க்ஷேத்திரமாகிய காசியிலே, காசி இந்துப் கல்கலைக்கழகம் உள்ளது.

பூர்வ புண்ணியத்தினாலோ என்னவோ இந்த இரண்டு க்ஷேத்திரங்களிலும் தங்கி, இரண்டு பல்கலைக்கழகங்களிலும் கல்வி பயிலும் பேறு எனக்குக்கிடைத்தது. தமிழில் எம். ஏ. பட்டம் பெறும் பொருட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மூன்றாண்டும், தத்துவஞானத்தில் எம். ஏ. பட்டம் பெறும் பொருட்டு காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் இரண்டாண்டும் கல்வி பயின்றேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்தபோது சிதம்பரம் நடராசர் ஆலயத்துக்கும், காசியில் மாணவனாயிருந்தபோது காசி விஸ்வநாதர் ஆலயத்துக்கும் வாரந்தோறும் செல்வது எனது வழக்கமாயிருந்தது.

வழிபட விரும்புவோர் எவரும் இந்த இரு ஆலயங்களுள்ளும் தடையெதுவுமின்றிச் சென்று வழிபடலாம். சாதி பற்றிய கட்டுப்பாடெதுவும் அங்கு கிடையாது. காசியில் இன்னுமொரு விசேடமும் உண்டு. காசி கங்கைக் கரையிலுள்ளது. கங்கை இந்துக்களுக்கு மிகப் புனித நதி. கங்கையில் நீராடி விட்டுக் குடத்திலோ அல்லது செம்பிலோ கங்கை நீரை எடுத்துச் சென்று எவரும் தாமே தம் கையாலேயே லிங்கத்துக்கு அபிஷேகம் செய்யலாம். பாரத தேசத்தின் நாலுதிக்குகளிலிருந்தும் அங்கு வரும் பக்தர்கள் தாம் கொண்டு வந்த கங்கைநீரை லிங்கத்துக்கு அபிஷேகம் செய்வதோடு நில்லாமல் தமது கையால் அந்த லிங்கத்தைத் தொட்டு வழிபட்டுப் பரவசமடைவதைத் தினமும் காணலாம்.

இவைகளைக் காணும் போதெல்லாம் எனக்கு எங்கள் இலங்கையிலுள்ள ஆலயங்கள்தான் நினைவுக்கு வரும். காசியைப் போல மூல விக்கிரகத்தையே எல்லாரும் தொட்டு வழிபட அனுமதிக்காவிடினும் எல்லாரும் ஆலயத்துட் சென்று வழிபட வழிசெய்யக்கூடாதா என்ற எண்ணந்தான் எனக்கு ஏற்படும்.

* * *

இந்தியாவிலே சாதி வித்தியாசமின்றி எல்லாரும் உள்ளே சென்று வழிபடக் கூடியவை இந்த இரண்டு ஆலயங்கள் மட்டுமன்று. அங்குள்ள பிரசித்திபெற்ற எல்லா ஆலயங்களுள்ளும் எல்லோரும் சென்று வழிபடலாம்.

இவைகளைக் கண்ணுறும் போதெல்லாம் தொடக்கத்திலே பெரும் எதிர்ப்புக்களையெல்லாம் சமாளித்து ஹரிஜன ஆலயப் பிரவேசத்துக்கு வழிசெய்தவர்களும், அவ்வியக்கத்தின் முன்னணியிலே நின்று தம் செயலாலும் பேச்சாலும் எழுத்தாலும் அதனைச் சாதித்தவர்களுமான பேரறிஞர் சிலரை நான் நினைப்பதுண்டு. சுப்பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிய பாரதி, சேர் சி. பி. ராமசுவாமி ஐயர், மதுரை அட்வகேட் வைத்திய நாதையர், காங்கிரஸ் தலைவர் சத்திய மூர்த்தி, முதுபெரும் அரசறிஞர் ராஜாஜி ஆகியோரே இத்துறையில் என் மனத்தில் முதலிடம் பெறுவோர். இவர்கள் அனை வரும் சாதியில் மிக உயர்ந்ததாகக் கரு தப்படும் பிராமண குலத்தைச் சேர்ந்தவர் கள். ஆயினும் தென்னகத்திலே தீண் மை யொழிப்பு, ஹரிஜன ஆலயப்பிரவே சம் ஆகிய இயக்கங்களை வழிநடத்தியவர் களுள் முக்கியமானவர்களும் இவர்களே. சேர் சி. பி. ராமசுவாமி ஐயர் திருவாங்கூர் ராஜ்யத்தின் முதன் மந்திரியாக இருந்த காலத்தில் அதன் தலைநகராகிய திரு வனந்தபுரத்திலுள்ள மிகப் பிரசித்திபெற்ற ஆலயமாகிய பத்மநாதர் ஆலயத்தை ஹரி ஜனங்களுக்காகத் திறந்து விட்டவரெனப் பாராட்டப்படுபவர். அதைப் போலவே மதுரை வைத்திநாதையரும் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்துள் ஹரிஜனங் கள் செல்ல வழிசெய்தவருள் முக்கியமான வராகக் கருதப்படுபவர். தீண்டாமை யொழிப்பு, ஆலயப் பிரவேசம் ஆகியவற் றின் வரலாற்றிலே இவர்களுடைய பெயர் கள் நிலையான இடத்தைப் பெறும் என் பதை எவரும் மறுக்கமாட்டார். இவர்களை நினைக்கும்போதெல்லாம் எங்கள் நாட்டி லும் இவர்களைப் போன்ற தலைவர்கள் தோன்றலாகாதா என்ற எண்ணமே என் மனத்தில் ஏற்படும்.

* * *

இலங்கையிலே இன்று ஆலயப் பிரவே சத்தை எதிர்ப்பவர்கள் தமக்குச் சாதக மாகப் பல காரணங்களைக் கூறுகின்றனர். தாழ்ந்தவர்களெனக் கருதப்படுவோரை ஆலயத்துள் விடுவது ஆகமத்துக்கு விரோதம் என்பது அவர்கள் கூறும் ஒரு காரணம். காலாதிகாலந்தொட்டு நிலவி வரும் வழக்கத்துக்கு மாறானது என்பது இன்னொரு காரணம். தாழ்த்தப்பட்டவர் கள் துப்புரவில்லாதவர்கள் என்பது மற் றொன்று. கோவில்களுக்குள் புக விரும் பும் ஹரிஜனங்களுள் எத்தனை பேர் உண் மையாகவே வழிபடும் நோக்கத்துடன் போக நினைப்பவர்கள் என்பதும் இவர்கள் கேட்கும் கேள்விகளுள் ஒன்று.

இவைகளைக் கேட்போர் மனத்திலே இந்த ஆட்சேபனை ஒவ்வொன்றுக்கும் பதி லாகப் பல மாற்றுக் கேள்விகளை எழுப்ப லாமெனத் தோன்றுவது இயல்பு. இன் றைய ஆலயங்களில் நடைபெறும் நித்திய நைமித்தியங்கள் எவ்வளவு தூரம் ஆகமங் களையொட்டி இம்மியும் பிசகாமல் நடை பெறுகின்றன? எவ்வளவு தூரம் அவற்றி லிருந்து விலகிவிட்டன? தொன்று தொட்டு இடம்பெற்ற வழக்கங்கள் எல்லா வற்றையும் அப்படியே இன்று எல்லோரும் கடைப்பிடிக்கின்றோமா? எத்தனையோ வழக்கங்களை மாற்றிக்கொண்டோ மல்லவா? கோவில்களுக்குள் புகும் உயர் சாதியினர் எல்லோரும் நூற்றுக்கு நூறு துப்புரவாயுள்ளவர்களா? துப்புரவுக்குறைவு தான் தாழ்த்தப்பட்டவர்களைக் கோயிலுள் விடாது தடுப்பதற்குக் காரணமாயின் அவர்களுள் துப்புரவானவர்களை விடுவ தற்கு உடன்பாடா? உட்செல்லும் உயர் சாதியினர் யாவரும் உண்மையாகவே வழி பாட்டை மட்டுமே நோக்கமாகவுள்ளவர் களா? வெளியிலே நிற்பவருள் உண்மை யாக வழிபட விரும்புவோரையாவது உள்ளே செல்வதற்கு விடச் சம்மதம் கிடைக்குமா? இவைபோன்ற இன்னும் பல மாற்றுக் கேள்விகள் ஆதரிப்போர் மனத் தில் எழக்கூடும்.

இவையனைத்தும் நிதானமாக நோக்கும் போது ஆலயப் பிரவேசத்துக்கு மாறானோர் தாங்கள் பல காலமாகப் பழக்கப்பட்ட முடிவுகளுக்குக் காரணங்கள் காண முயல் கின்றார்களேயொழியக் காரணங்கள் இட் டுச் செல்லும் முடிவை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லையென்பது நன்கு புலனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த உலகிலே இருக்கிறீர் ஐயரே?

305.512
TIN
AR

முருகையன்

162611

சிற்றூர்க் கோயிலின் திருப்பெருந் திருவே,
குருக்கிராம மத்துக் கோயிலின் குருவே!
ஐயரே, மெய்யரே! ஆயிரம் வணக்கம்.
ஒரு சில கேள்விகள் — பதில் தரல் வேண்டும்.

பஞ்சமர் என்று நீர் பகுத்துக் காட்டுவோர்
நிந்தியா சௌசிகள் என்றும், அதனுல்
பிறப்புத் தொடங்கி இறப்பு வரைக்கும்
துடக்குப் பிடித்த தூர்ச்சனர் என்றும்,
கோபுர வாசலைத் தாண்டி அப்பாலே
நுழைந்தால், புனிதம் நொடித்திடும் என்றும்,
ஆகமச் சான்றுகள் காட்டுவீர், ஐயரே!

சத்திய மாய் ஒரு சமுசயம் எமக்கு —
மனசார இதற்கு மறுமொழி சொல்லும்:
எத்தனை ஆகமம் எடுத்துப் படித்தீர்?
காமிகம், யோகசம், சிந்தியம், காரணம்,
அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம்,
அஞ்சுமான், சுப்பிர பேதம் முதலிய
ஆகமம் இருபத் தெட்டெனக் கூறினீர்.
இத்தனை நூல்களுள் எத்தனை ஓதினீர்?
இவற்றின் நிறங்களை ஆயினும் அறிவிரோ?
சங்கத எழுத்துகள் எல்லாம் தெரியுமோ?
அருச்சனை மந்திரம் அறுபதோ, எழுபதோ
திவசம, மாளயம், சவுண்டி, கிருத்தியம்
சுற்றுப் பலிக்கெனச் சொல்லும் மந்திரம்,
யாக பூசைகள் — இவற்றைப் போன்ற
தேவையின்பொருட்டு நீர் மூன்று கொப்பிகளில்
எழுதி வைத்திருககும் பத்ததி தவிர
எந்த ஆகமமும் முழுமையாய் ஓதி
உணர்ந்துகொண்டீரோ? உண்மையைச் சொல்லும்.
சங்கத எழுத்துகள் எல்லாம் தெரியுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமம், ஆகமம் என்று வெருட்டுவீர் —
தில்லையில் இன்று சிவனே இல்லையோ?

எங்கள் சிற்றூர் இறையவன் கோயிலின்
கதவுகள் திறந்தால், அரிசனர் புகுந்தால்,
அங்கவன் சந்நிதி அசுசிப்படும் என
எம்மவர் நம்ப எடுத்துச் சொல்கிறீர்.
தில்லை எனப்படும் சிதம்பரம் தெரியுமா?
கோயில் எனப்படும் கோயிலின் கோயில்!
கபாடம் திறந்தன; கவிழ்ந்ததா உலகம்?
சிதம்பர நடம்பயில் செழுங்கழல் இறைஞ்சுவோர்
சாதி மறந்து சைவம் நாட்டினர்.
அன்பே சிவம் எனும் அறநெறி காட்டினர்
செந்தூர் திறந்தது; மதுரையும் திறந்தது.
திருப்பரங் குன்றமும் பழனியும் திறந்தன.
பிறப்பினால் இழிவு பேசும் பேதைமை
அறுப்பதே அறம் என ஆன்றோர் ஒப்பினர்.
இது நடந்தேறியும் பல பத்தாண்டுகள்
சென்று மறைந்தன; சிவ சிவா, சிவ சிவா!!
எந்த உலகிலே இருக்கிறீர் ஐயரே?
நீர் விதந்தோதும் ஆகமப்படியே
அரிசனர் நுழைவதால் ஆலயம் கெடுமேல்,
தில்லையில் இன்று சிவனே இல்லையோ?

ஒழுக்கம் விழுப்பம் தரலால், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் என உரைக்கும் நீர்
பக்கபலமாய்க் கொள்ளும் உம் துணைவர்
எப்படிப் பட்ட ஒழுக்கம் உடையவர்?
சைவாசாரம் சற்றும் இன்மையால்
அரிசனர் அசுத்தர் ஆம் எனக் கூறும் நீர்
உறுதுணை என்றே கருதி அணைப்பவர்
எப்படிப்பட்ட ஒழுக்கம் உடையவர்?
நெந்தலிப் பொரியல் நித்தமும் மெல்வதில்
மெத்த விருப்புடை மேலவர் எல்லாம்
உள்ளார் அல்லரோ, உமக்குத் துணையாய்?
இன்னும் இவர்போல் எத்தனை பேரோ?
பல்லு நலிந்த பான்மையால், பாக்குரல்
தேடி அதற்குள் நெத்தலி இடித்துத்
தூளாய் விழுங்குதல் சுத்த சைவமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமக்குத் துணையாய் உள்ளவர் ஒருவரும்
கள்ளுச் குடிப்பதே இல்லையோ? இருக்கலாம்.
சமய தீட்சை பெற்று, நித்தமும்
சந்தியா வந்தனம் தவருச் சிலரோ?
இருக்கலாம்; எல்லாம் இருக்கலாம். ஆயினும்
தன்னெஞ் சறிவது பொய்யா நடுநிலை
என்னென்பதனை நீர் இம்மியும் அறிவீரோ?

குக்கிராமத்துக் கோயிலின் குருக்களே!
மறுமொழி என்ன? வணங்கி நாம் கேட்கிறோம்.

கோபுர வாசலைக் கடந்து உள் நுழைந்திட
எண்ணுவோர் நாத்திகர் என்கிறீர். ஐயரே!
சைவத் திருமுறைச் சான்றுகள் கண்டால்
நீரே நாத்திகர்; நிறுவலாம், இதனை!!
கோயிலின் கோயிலாம் கோயிலே தில்லை.
தில்லையில் இன்று சிவனே இல்லை
என்ற பாங்கிலே எண்ணும் நீரே
நூற்றுக்கு நூறு நாத்திகர் ஆவீர்.

ஆகையால், ஐயரே; அகந்தை எனப்படும்
சைவவிரோதம் தவிர்த்தல் வேண்டுமே.
சைவவிரோதம் தவிர்த்திட ராயின், உம்
சாதி பேதம் உட்பட, தகாத
அநீதி அனைத்தும் அறந்தரும்
பெரும்புயலிடையே துரும்பெனத் தொலையுமே.

---

வெற்றியை வென்றெடுக்க, உறுதியுடனிருந்து, தியாகத்திற்கு அஞ்சாது சகல கஷ்டங்களையும் கடவுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம் எங்கே?

செ. கணேசலிங்கன்

சுதந்திரம் என்பது ஓர் இனிமையான வார்த்தை.

சுதந்திரம் மக்களின் பிறப்புரிமை; உயிர் மூச்சு.

மக்கள் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் கிட்டவேண்டும்.

இவை இன்று பரவலாக அனைவரும் ஏற்றுக்கொள்ளும் கருத்துக்களாகும்.

இன்று எல்லா மக்களுக்கும் சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று ஆரவாரிப்போரும் உளர். வெள்ளைக்காரன் தந்த ஜனநாயக ஆட்சி மூலம் சுதந்திரம் கிடைத்துவிட்டதாகக் கூறுவோர் பலர்.

எல்லோருக்கும் வாக்குரிமை உண்டு. தாம் விரும்பியவர்களை பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பலாமே. இது ஜனநாயக ஆட்சிதானே என்று இனிமையாக வாதம் புரிவார்கள்.

இந்த பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியில் நாம் கண்முன்னே காண்பதென்ன? கேட்பதென்ன?

"சிங்களவர்கள் தமிழர்களை நசுக்குகிறார்கள்".

"தமிழர்கள் தம் இனத்தவர்களிடையே ஒரு பகுதியினரை ஒதுக்குகிறார்கள்".

"கோவிலுக்குள் நுழைய உனக்குச் சுதந்திரமில்லை".

"எம் கிணற்றில் தண்ணீர் அள்ள உனக்கு உரிமையில்லை".

"என் தேநீர் கடையில் தேநீர் அருந்த உனக்கு அருகதையில்லை".

"இது என் வீடு. நீ நுழையப்படாது".

தமிழர்களே தம் இனத்தவர்களில் ஒரு பகுதியினரைப் பார்த்துச் சொல்லுகின்றனர்.

வெள்ளைக்காரன், கறுத்த நிறத்தவர்களை என்றாவது நிறத்தைக் காட்டி ஒதுக்குகிறான். இங்கே அப்படியான நிற வேறுபாடு கூடக் கிடையாது. இருவரும் கறுத்தவர்களே.

அப்படி ஒதுக்க தமக்குச் சுதந்திரம் இருக்கிறதென்று உயர்சாதியினர் எனத் தம்மைக் கூறிக்கொள்வோர் சொல்லுகின்றனர்.

ஜனநாயகம், சுதந்திரம், தேச வழமை, சட்டம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டே ஒதுக்குகிறார்கள்.

ஊருக்குப் பெரியவர்கள் அவர்கள்தான். நிலம் அவர்கள் சொத்து. பணம் அவர்களிடம் புழங்குகிறது. தனிச் சொத்துகளைக் காப்பாற்ற தாமே இயற்றிய தேச வழமைச் சட்டங்கள் அவர்கள் கையில். சட்டங்களை நிலைநிறுத்த பொலிஸ் படை, முப்படைகள், நீதிமன்றம் யாவும் உள்ளன. தமது சுதந்திரத்தைக் காப்பாற்ற இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு 'வாக்குரிமை உனக்குமுண்டு' என்று கூறிக்கொண்டே அவர்களை நசித்துக்கொண்டிருக்கின்றனர்.

வெறும் புற உரிமைகள் மட்டுமல்ல. மனிதனது உழைப்பு சுரண்டப்படுகிறது. அந்தச் சுரண்டலை தொடர்ந்து நீடித்துக் காப்பாற்றுவதற்காகவே உயர்சாதியினர் எனத் தம்மைச் சொல்லிக்கொள்வோர் புற உரிமைகளை மறுக்கின்றனர். 'குடிமக்கள்' என்ற பெயரில் ஒரு பகுதி மக்களை அடிமைகளாக வைத்து அவர்களது உழைப்பைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் விரும்பியபடி விலைகொடுத்து வாங்க முடிகிறது. நிலம், முதலீடு, கருவிகள் யாவும் உயர்ந்த சாதி எனப்படுவோரின் கைகளில் உள்ளன 'குடிமக்கள்' தமது உழைப்பை விலைபேசாது கேட்கும் விலைக்கே கொடுக்க வேண்டிய நிலை. பெரும்பண்ணை இல்லாவிடினும் சிறுபண்ணை அடிமைமுறை.

அந்த உயர்ந்த சாதியினர் எனக் கூறப்படுவோர், நிலம் துண்டுபட, ஆங்கில மொழியையும் கல்வியையும் தமக்குடைமையாக்கிக் கற்று பட்டினத்திற்கு வந்து தமது கூலியை விலைபேசி விற்கிறன்னர்.

"வாழ்க்கைக்கேற்ற ஊதியமில்லை"

"உழைப்பிற்கேற்ற சம்பளமில்லை"

"வீடு கிடைக்கவில்லை"

"வீட்டு வாடகை உயர்கிறது"

"பொருள்களின் விலைகள் விஷம்போல் ஏறுகின்றன"

புதிய குரல்கள் கேட்கின்றன.

ஜனநாயகம், வாக்குரிமை, பாராளுமன்றம் வாழ்கின்றன.

சுதந்திரம் இழந்தவர்களின் புதிய அலறல்கள் கேட்கின்றன.

முதலாளித்துவத்தின் நவீன சுரண்டல் முறைகள் மனித சுதந்திரத்தைப் பறிக்கின்றன. சிலர் சுரண்டி சுதந்திரமாக வாழ்கிறார்கள். பலர் சுரண்டப்பட்டு நவீன அடிமைகளாக குரல் எழுப்புகிறார்கள்.

"உனக்கும் வாக்குரிமை உண்டு"

முதலாளிகளின் சொத்துரிமையைப் பாதுகாக்க அவர்களது ஆட்சியால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் அவற்றை நிலைநிறுத்த பொலிஸ், முப்படைகள், நீதி மன்றங்கள் இருக்கின்றன.

சட்டங்களில் சிறுதிருத்தங்கள் செய்யப்படுகின்றன. சில தொழில்கள் தேசியமயமாகின்றன. தொழிலாளர்களைச் சமாதானமாக்கும் கண்துடைப்பு வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

"ஜனநாயகம், சுதந்திரம் இங்குதான் வாழ்கின்றன."

முதலாளித்துவத்தின் பிரசார சாதனங்கள், பத்திரிகைகள் அலறுகின்றன. பசப்பு வார்த்தைகளில் சிலர் மயங்கி சுதந்திரத்தை மறக்கிறார்கள்.

கைவிலங்கு பூட்டிய அநாகரிக அடிமைத்தனத்திலிருந்து கால்விலங்கு பூட்டப்படாத நவீன அடிமைத்தனத்திற்கு வளர்ந்து வந்துவிட்டோம்.

தனிச்சொத்துடைமையை அழித்து பொதுச்சொத்துடைமையாக்கும் புரட்சிமூலம் தான் பெரும்பான்மையான அடிமைகளாக வாழும் தொழிலாளர், விவசாயிகள் சுரண்டலற்ற மனித சுதந்திரத்தைப் பெற முடியும்.

சுரண்டலற்ற சுதந்திரம் மனிதனது பிறப்புரிமை. சுதந்திர உணர்வு பெற்றவர்கள் அதைப் பெற ஆயுதம் ஏந்தியே போரிட என்றும் தயங்கியதில்லை. இது வரலாறு காட்டும் பாடமாகும்.

நசுக்கப்படுவோர் என்றும் ஓய்ந்திருந்ததில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ சிறுகதை

# 'நானும் அடிப்பன்'

யோ. பெனடிக்ற்பாலன்

கந்தையா தன் வீட்டுக்கு முன்னுல் நிற்கும் மாமரத்தின்கீழ், அடிமரத்தில் சாய்ந்திருந்தான். மூக்கடிப் பள்ளத்தைக் கைவிரல்களால் லேசாக அமுக்கியவாறு, யோசனையில், என்றுமில்லாதவாறு ஆழ்ந்திருந்த அவன் கண்கள் கலங்கிக்கொண்டிருந்தன.

அப்பொழுதுதான் பொழுது கருகி வந்து கொண்டிருந்தது. அவனுடைய தாய் செல்லாச்சி குப்பி விளக்கை கொளுத்தி விருந்தையில் வைத்துவிட்டு, பனைவளவில் உள்ள கள்ளுக் கொட்டிலுக்குப் போய் விட்டாள். நீட்டியிருந்த அவனுடைய கால்களுக்கருகில்; அவனின் வீரன் நாய் வந்து குந்திக்கொண்டிருந்தது.

நேற்று மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குச் சென்ற அவனுக்கு எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கோரமான அனுபவத்தையும், சொல்ல முடியாத அவமானத்தையும் மனம் எண்ணி, எண்ணி பார்க்கும் போது, எழும் வேகமான தன்மான உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவற்றினுல் அவன் தகித்துப் போனுன். இப்படி ஏற்படும் என்று அவன் எண்ணவேயில்லை.

மிகப் புனிதமாகச் சென்ற கந்தையா, தன்னை தாழ்த்தப்பட்டவன் என்று தெரியாது என்ற துணிவில் கோவிலுக்குள்ளே சென்று கும்பிட்டு விட்டு, நெற்றியில் திருநீறும் சந்தனமும் அணிந்து கொண்டு வெளியில் வந்து மேற்கு வீதியிலுள்ள ஒரு தேனீர்க் கடைக்குச் சென்றுன். ஒரு சைவக் கடைக்குள் சென்று வாங்கில் அமர்ந்து தேனீரும் வடையும் வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்தான். கடைக்குள் இருந்த எல்லோரையும் போலவே அவனும் இருந்தான்.

அவன் ஒரு வடை சாப்பிட்டு தேனீரை எடுத்து ஒருவாய் குடிக்கும்போது "டேய் பள் பறையா எழுந்திரடா" என்ற ஒரு குரல் அவனுக்கு முன்னுல் வெடித்தது. திடுக்குற்று இவன் நிமிர்ந்து பார்ப்பதற்கிடையில் தேனீர்க் கிண்ணம் பறித்தெறியப்பட்டு அவன் கடைக்கு வெளியில் அவசரமாக உதைத்துத் தள்ளப்பட்டான்.

"டேய் கீழ்சாதி நாயே எங்கடை கடைக்குள்ளை போக அவ்வளவு துணிவோ!" திடீரென அங்கு பாய்ந்த இனந் தெரியாத இருவர் கந்தையாவின் முகத்தில் தாறுமாருய் அடித்து, கால்களால் உதைத்துத் தள்ளினுர்கள். அவன் அலங்கோலமாக நிலத்தில் விழுந்தான். முகக்குப்புற விழுந்த அவன் எழுந்து நிமிர்ந்தபோது, சிறிது தூரத்தில் அவனுடைய ஊர் பழைய விதானையார் சிவலிங்கம் நிற்பதைக் கண்டான். அவன் எழுந்து முகத்தில் அப்பியிருந்த மண்ணைத் துடைப்பதற்கிடையில் வயிறு பெருத்த அந்தக் கடைக்காரன், ஓடி வந்து தூஷண வார்த்தைகளால் ஏசி முகத்தில் காறித் துப்பி கையிலிருந்த சோடாப் போத்தலால் முகத்தில் குத்தினுன். அந்தக் குத்தின் தாக்கத்தால் கலங்கிப்போன அவன், கைகளால் முகத்தைப் பொத்தி கண்களை விழிப்பதற்கிடையில் "எளிய பள்ளுப் பயலை கொல்லுங்கடா; நாய்க்கு அவ்வளவு துணிவோ" என்று ஒரு நெடுவல் கத்திக்கொண்டு ஓடி வந்தான்.

கந்தையாவின் சேட்டுக் கொலரில் ஒரு பலமான கை இறுகப் பற்றித் தூக்கவும், முழங்காலால் வயிற்றில் உதை பலமாக விழுந்தது.

"ஐயோ! கந்தா! கடவுளே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அடி உதைகளை தாங்க முடியாமல் ஈனமாகக் கத்தினன். திருநீறும் சந்தனமும் அணிந்து கொண்டு அங்கு நின்ற 'சைவர்கள்' பலர் எலும்புத் துண்டைக் கண்ட பசி கொண்ட தெரு நாய்களைப் போல் அவனைக் கண்டவாக்கில் மொய்த்து, தடிகளாலும் சோடாப் போத்தல்களாலும் உருட்டி உருட்டி அடித்தனர். உலக்கை கொண்டு ஓடிவந்த ஒருவன் "அவனை என்னட்டை விடுங்கடா" என்று ஆவேசமாய் சத்தமிட்டுக் கொண்டு அவனுடைய முதுகில் ஓங்கி அடித்தான்.

"ஐயோ என்னை கொல்லுறாங்கள்"

அடைக்கலம் தேடி அந்தரித்து பரிதாபமாக எழுந்த அவனுடைய மனிதக் குரலைக் கேட்பதற்கு அங்கு யாருமில்லை.

அந்தக் கோபம் கொண்ட மனிதர்களின் அழுங்குப் பிடியிலிருந்து திமிறி நழுவிக் கொண்டு, சேட்டுக் கிலமாக கிழிந்து தூங்க, அவிழ்ந்து குலைந்த வேட்டியை அள்ளிப் பிடித்துக் கொண்டு காங்கேசன் துறை வீதியில் அவனை அறியாத வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தான். கண்களிலிருந்து கண்ணீர் வடிய மூக்கிலிருந்து இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. சில நிமிடங்களில் அவனுக்குப் பின்னல் ஒரு கார் வேகமாக வந்து கொண்டிருந்தது. அக்காரை மறித்து, அதில் ஏறித் தப்பி ஓட நினைத்தான். கார் அவனுக்கு முன்னல் வந்து நின்றதும், அதில் பலர் அவசரமாக இறங்கினர்; அதே கோபங்கொண்ட மனிதர்கள் அவனைச் சூழ்ந்து பிடித்துத் தாக்கத் தொடங்கினர்.

"நளம் பள்ளுப் பறையருக்கெல்லாம் சம அந்தஸ்து வேண்டுமோ?"

"நீங்களும் எங்களோடை சமனுக்கு கோயிலுக்கு உள்ளை நின்று கும்பிடவேணுமோ?"

"எங்களோடை சமனு இருந்து சாப்பிடப் போறீங்களோ?"

ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு விதமாகக் கேட்டு அடித்தான்; உதைத்தான். கந்தையாவால் எல்லா அடிகளையும், உதைகளையும் தாங்க முடியவில்லை. கூட்டமான வேடர் மத்தியில் அகப்பட்ட மானைப்போல வெளியேற வழி தெரியாமல் தவித்தான்.

"ஐயோ! உங்களைக் கையெடுத்துக் கும்பிடுறன்; என்னைக் கொல்லாதையுங்கோ! ஐயோ! கந்தா! என்னைக் காப்பாத்து!" முழங்காலில் விழுந்து அவர்களின் கால்களைப் பற்றிக்கொண்ட அவனுடைய கைகள், அவர்களைப் பரிவாகக் கும்பிட்டன. அங்கு இரக்கத்திற்கு இடமில்லை.

கந்தையா அறிவு மயங்கிப் புரண்டு சாய்ந்தான்.

"பள்ளன் செத்தான்; வாங்கடா போவம்" ஒரு தடியன் கூறியதும், அக்கூட்டம் காரில் சென்று ஏறியது. ஒரு மெலிந்த கறுவல் திரும்பி ஓடி வந்து, கந்தையாவின் ஆண் உறுப்பில் ஏறி மிதித்துவிட்டு ஓடினன். காருக்குள் ஏறிக் கொண்டிருந்தவர்கள் அதைக் கண்டு கலகலத்துச் சிரித்தார்கள். அந்த வீர சைவர்களை ஏற்றிக்கொண்டு மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலை நோக்கிக் கார் பறந்தது.

கொஞ்ச நேரத்தில் மயக்கம் தெளிந்து எழுந்த அவன் வேட்டியை ஒழுங்காக கட்டிக் கொண்டு, அந்த வீர சைவர்கள் கண்டால் இனிக் கொன்றே விடுவார்கள் என்ற பயத்தில் பஸ்ஸில் ஏறி வீட்டுக்கு வந்து விட்டான்.

அவன் பொலிசுக்குச் சொல்லவில்லை. அங்கு சாட்சி கேட்டு அடிப்பார்கள் என்ற பயம். வீட்டிலும் சொல்லவில்லை.

செல்லாச்சியும் நாகனும் முகத்திலும் உடம்பிலும் உள்ள காயங்களைக் கண்டு காரணத்தைக் கேட்டபோது சைக்கிளால் விழுந்துவிட்டதாகச் சொல்லிவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த யோசனைகளில் ஆழப்பதிந்த அவன் விட்ட பெருமூச்சால் நெஞ்சு உயர்ந்து தாழ்ந்து கொண்டது. கண்கள் இன்னும் கலங்கின.

இவ்வளவு காலமும் கந்தையா தன்னை தாழ்த்தப்பட்டவன் என்று கூறிக்கொள்ள விரும்பவில்லை. சமூகத்தில் தனக்கு இருக்கும் உண்மையான அந்தஸ்தைப் பற்றி யோசித்துப் பார்க்கவில்லை. தானும் தன் பாடுமாக இருந்தான். காலப் போக்கில் எல்லாம் சரியாகிவிடும் என்றிருந்தான்.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்சாதி வெறியர்களின் அடக்குமுறைக் கெதிராகவும் கோயில்களைத் திறந்து விடுவதற்காகவும் தேனீர்க்கடைகளைத் திறந்து விடும்படியும் நடத்திய போராட்டங்களைப் பத்திரிகைகளில் படித்திருக்கிறான். சங்கானையிலும், அச்சுவேலி, கொடிகாமம் முதலிய கிராமங்களிலும் நடக்கும் போராட்டங்களைப் பற்றியும் அறிந்துள்ளான். அவற்றையெல்லாம் அவனுக்கு விரிவாக கூறிய அவனுடைய சிநேகிதன் கிருஷ்ணன் அவனைத் தம்மோடு அவ்வியக்கங்களில் ஈடுபடும்படி கேட்டிருக்கிறான். அந்த ஊரில் பல இளைஞர்கள் அந்த இயக்கங்களில் முன்னின்று போராடுகிறார்கள். கிருஷ்ணன் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான் உண்மையாகப் பாடுபடுகிறது; போராட்டங்களுக்கு உற்சாகம் அளிக்கின்றது என்று கூறியபோது இதெல்லாம் அரசியல் நோக்கத்திற்காக என்று கூறித் தட்டிக் கழித்துவிட்டான். ஊரில் உள்ள பெரிய மனிதர் அவனை ஒரு நல்ல பையன் என்று கூறிக்கொள்வார்கள்.

நேற்று அவனுக்கு ஏற்பட்ட திடீர் தாக்கம், அவனைத் திகைக்க வைத்ததோடு ஆழமாகச் சிந்திக்கவும் வைத்திருக்கிறது, இவ்வளவு காலமும் சிந்தித்ததைவிட மிக ஆழமாகச் சிந்தித்தான்.

முழங்கையிலும் தலையிலும் வீங்கித் திரண்டிருக்கும் ஊமைக் காயங்களைத் தடவிப் பார்த்தான். முதுகில் விழுந்த உலக்கை அடியால் முதுகை அசைக்க முடியவில்லை. மூக்கு வீங்கி, புண்ணாக நோகிறது. ஆண்குறியில் உபாதை எடுக்கிறது.

"இந்தமாதிரி கொடூர தாக்குதல்களுக்கு ஆளாக நான் என்ன குற்றம் செய்தேன்? எனக்கு அடித்தவர்களை நான் இதற்கு முதல் ஒரு நாளும் பார்த்ததில்லையே!"

அவனுக்கு நடந்த கொடுமைகளின் காட்சி மனதில் உருவெளித் தோற்றங்களாய் அசைந்து கொள்ள, தன்மான முனகல்கள் நெஞ்சின் அடிவாரத்திலிருந்து கிளர எழும் உணர்வுகள் இரத்ததாகங் கொண்டிருந்தன.

"நாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள் இல்லை. ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு எந்தவிதத்திலும் தாழ்த்தப்பட்டவனல்ல. கடவுள் எம்மை அப்படிப் படைக்கவில்லை. எமது உழைப்பைச் சுரண்டுகிற மனிதர்களால் நாம் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கிறோம். எம்மை அடக்கி ஒடுக்குபவர்கள் உயர்சாதிக்குள்ளே இருக்கிற விவசாயிகளோ, தொழிலாளி வர்க்கமோ அல்ல. ஒரு சில சாதி வெறி பிடித்த நிலப்பிரபுக் கூட்டந்தான். எமது மனித உரிமைகள் அவர்களால் மறுக்கப்பட்டிருக்கிறது. இதை நாம் எதிர்த்துப் போராடாவிட்டால் எமது அடிமைத்தனம் ஒழியப்போவதில்லை. எமது போராட்டம் நீதியான போராட்டம்; மனித உரிமைப் போராட்டம். சமுதாய அமைப்பு மாறாமல் அவர்கள் மனம் மாறும் என்று நீ நினைக்கின்றாயா?"

கிருஷ்ணன் அவனுக்கு அடிக்கடி இப்படிக் கூறுவான். கந்தையா அதை அப்போது ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அவனுடைய மனத்தின் உள்ளே பதிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்து இப்பொழுது அலை அலையாக எழுந்து கொள்கின்றது.

"ஓ! இந்தக் காட்டு மிராண்டிகள் மனம் மாறுதுதான்!"

அவன் வாய்விட்டு முனகிக் கொண்டான்.

சங்கானையில் நிச்சாமக் கிராம மக்கள் உயர் சாதிக்காரர்களின் கொடிய அடக்கு முறைக்கு எதிராக துப்பாக்கி ஏந்தி நடத்திய வீரம் செறிந்த போராட்டங்களைப் பற்றியும், உயர் சாதிக்காரர்களால் சுடப்பட்டு இறந்த குமார வேலை சுடுகாட்டுக்கு ஊர்வலமாக எடுத்துச் சென்றபோது மீண்டும் துப்பாக்கிகளால் சுட்ட திமிர்த்தனத்தைப் பற்றியும் கிருஷ்ணன் அவனுக்குச் சொல்லியிருந்தான்.

இப்பொழுதுதான் அவன் மனம் அவற்றை முழுமனதோடு ஆதரித்துக்கொள்கிறது.

மீண்டும் அவன் கைகள் உடலிலுள்ள காயங்களைத் தடவிப் பார்த்துக் கொண்டிருந்தன. கடைக்காரன் முகத்தில் காறித் துப்பியது, மனதில் அருவருப்பாக எழுந்து கோபாவேசத்தை மூட்டியது. இருகைகளையும் வெறிததுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"சீ, இந்த இரு கைகளாலுந்தானே அந்தக் காட்டுமிராண்டிகளைக் கும்பிட்டேன்!" கைகளைக் கசக்கிக் கொண்டான். கிருஷ்ணனின் எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது.

"மனிதன் மானத்தோடு வாழவேண்டும்; இன்னொரு மனிதனுக்குப் பணிந்துபோவது கோழைத்தனம். இம்சைப்படுத்துபவனை இம்சைப்படுத்தியாகணும்; அவனிடம் அகிம்சை பேசுவது முட்டாள்த்தனம்; அடித்தவனுக்குத் திருப்பி அடிக்காதவன் நாயோடு சேர்ந்து வாலையாட்டத்தான் தகுதியானவன்". தான் அடி உதைபட்டதற்கு ஒரு நீதியான காரணமுமில்லை. என்பதை நினைக்க நினைக்க அந்த சைவ ஆத்துமாக்களின் மன நீதியற்ற இம்சையினால் சர்வாங்கமும் உளைவு எடுக்க, எடுக்க பழிவாங்கும் உணர்வுகள் மனதில் வைராக்கியம் பெற்றுக்கொண்டிருந்தன.

உணர்வுகள் வேகம் கொள்ள கைகால்கள் நடுங்கிக்கொண்டன.

"என்னை அன்றைக்குக் காட்டிக்கொடுத்தவன் பழைய விதானை விசுவலிங்கம்தான். அவன் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பல கொடுமைகள் செய்துள்ளான். வீடுகளை கொழுத்தியிருக்கிறான். கட்டி வைத்து அடித்து குதிக்கால்கூட வெட்டியிருக்கிறான். சங்கானையிலுள்ள நிச்சாமத்து மக்களைச் சுடுவதற்காக துவக்குகள் சேர்த்துக் கொடுத்திருக்கிறான்.'' அவன் நாகலிங்கத்தின்ரை கடையில் இப்ப நிற்பான்."

நீண்ட நேரம் முன்னால் சூழ்ந்திருக்கும் இருளை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த கந்தையா எழுந்து வீட்டுக்குள் சென்றுவிட்டு, தாமதிக்காமல் வெளியே வந்தான்.

"எங்கெ மோனை போறாய்?"

செல்லாச்சி கள்ளுக்கொட்டிலிலிருந்து முட்டிகளைத் தூக்கிக் கொண்டு முற்றத்திற்கு வந்துவிட்டாள்.

"சந்திக்கு"

கட்டி இருந்த சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு, இருட்டில் சென்ற அவன் கிருஷ்ணன் வீட்டில் அவனைக் கூப்பிட்டுப் பார்த்தான். அவன் இல்லை. அவனும் சுப்பிரமணியமும், சின்னையாவும், இராசாவும் கம்யூனிஸ்ட் கட்சியின் சாதி அடக்குமுறைக் கெதிரான ஊர்வலத்திற்குச் சென்று விட்டார்கள்.

கந்தையா பின்னுக்கு கைகளைக் கோர்த்தவாறு சந்தியிலுள்ள நாகலிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின் கடைக்கு முன்னால் வந்தான். கடைக்குள் சின்னத்தம்பி வாத்தியார், சுருட்டுக்கார ஐயம்பிள்ளை, கார்க்கார மணியம் முதலியோர் இருந்து பேசிக் கொண்டிருந்தார்கள்; விதானையைக் காண வில்லை.

கந்தையா அந்தக் கடையில் ஒருநாளும் தேனீர் குடித்ததில்லை அக் கடையின் ஒரு மூலையில் பக்கத்திற்கு பலகைத் தடி போட்டு தடுத்து தாழ்த்தப்பட்டவர்களுக்கு என ஒதுக்கி அங்கு கறள்ப் பேணிகளும் சோடாப் போத்தல்களும் புறம்பாக வைக்கப்பட்டிருந்தன. இருப்பதற்கு வாங்கில்லை; நிலத்தில் குந்திக்கொண்டு, கையில் ஏந்தி வைத்துத்தான் சாப்பிடவேண்டும். கந்தையாவின் சொந்தக்காரர் உயர் சாதிக்காரரின் கமத்தில் வேலை செய்பவர்கள் அங்கு இருந்துதான் சாப்பிடுவார்கள். அவன் பார்க்கும்போது வட்டன் என்பவன் அங்கே குந்தியிருந்து பேணியில் தேனீர் குடித்துக்கொண்டிருந்தான்.

அவனுக்கு அதை இப்போது பொறுக்க முடியவில்லை. அவன்மிக உறுதியாக இருந்தான்.

"அண்ணே ஒரு தேத்தண்ணி போடு"

நிமிர்ந்து பார்த்த கடைக்காரன் ஆளை இனங்கண்டு கொண்டு "இந்தா வெளிப் பேணியில் ஒரு தேத்தண்ணி போட்டுக் கொடு!" என்று தேனீர் போடுபவனிடம் சொன்னான்.

"எனக்கு வெளிப் பேணியில் தேவையில்லை!"

"அப்ப கையில ஊத்திறன் குடிக்கிறியா?"

"நானும் உன்னைப்போல மனுஷன்தான். உன்னைப் படைத்த கடவுள்தான் என்னையும் படைச்சிருக்கிறார். எல்லோருக்கும் கொடுக்கிற பாத்திரத்தில் கொடு!" என்று கூறிக்கொண்டு உள்ளே சென்று மற்றவர்களோடு வாங்கில் அமர்ந்து கொண்டான்.

கடைக்கார நாகலிங்கத்துக்கு கோபம் ஏறியது.

"கொடுக்க முடியாது; போடா வெளியில"

"ஏன் கொடுக்க முடியாது? காரணத்தைச் சொல்லண்ணை நான் வெளியில போறன். நியாயமான காரணமிருந்தால் வெளியில போயிடுறன்"

"டேட பள்ப் பயலே! உனக்கு காரணமோ சொல்ல வேணும்? இப்ப காரணம் சொல்லிக் காட்டுவன். ஏ! மரியாதையா எழும்பிப் போடா?"

"போகேலாது; சக மனிதனுக்குள்ள மரியாதையை குடுக்கும்படிதான் கேட்கிறன். இந்தா, ஏன் இந்த பாரதியிடை படத்தை தூக்கி மாலை போட்டிருக்கிறீங்க? குலத் தாழ்ச்சி இகழ்ச்சி சொல்லல் பாவம் எண்டு குழந்தைகளுக்குச் சொல்லிக் குடுக்கத்தான். நீங்க வளர்ந்த மனுஷர்களில்லையா? சகோதர மனிஷன்ரை உரிமைகளை மறுக்கிறீர்களே!

கந்தையாவின் பேச்சும் செய்கையும் உள்ளே இருந்தவர்களுக்கும் நாகலிங்கத்திற்கும் சினத்தை தூண்டிக்கொண்டேயிருந்தது. "நீ எங்களுக்குப் போதிக்க வாடா வந்திட்டாய்?"

"என்ன பொடியன் சமஅந்தஸ்து கேட்கிறான்போல"

சின்னத்தம்பி வாத்தியார் உள்ளே வாங்கில் இருந்தபடி கேட்டார்.

"ஓம் வாத்தியார்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் பொடியா, உனக்கு ஆரடா சொல்லித் தந்தவங்கள். உந்தக் கம்யூனிஸ்ட்டுகளோ?

வாத்தியார் நையாண்டியாகக் கூறினுர்.

"இதை அவங்க சொல்லித்தரவேண்டியதில்லை. ஆனு அவங்கதான் எங்களையும் மனுஷனெண்டு நிமிந்து நிக்கச் சொல்ருங்க"

கந்தையா கிருஷ்ணனை நினைத்துக் கொண்டு தைரியமாகச் சொன்னுன்.

"இவன் ஆர் உந்தக் கள்ளுக்கொட்டில் வைச்சிருக்கிற நாகன்ரை மோனல்லே?" சுருட்டுக்கார ஐயம்பிள்ளை கேட்டான்.

"ஓ! ஓ!"

"எட இவன் எங்களோடை சமனு இருக்கத் துணிஞ்சிட்டானே; வாத்தியார், நீங்க சொன்னதுதான் சரி. இவங்களில் பிழையில்ல"

"ஓமென்றன்" என்ருர் வாத்தியார்.

ஐயம்பிள்ளை கந்தையாவைப் பார்த்து "மோனே! இஞ்சபார், நாங்க சமாதானமா இருக்கணும்; உங்கடை சாதி பரம்பரை பரம்பரையாக எங்களுக்கு அடிமைத் தொழில் செய்து பிழைச்சு வந்தது. உங்கடை தகப்பன்மார் எங்களைக் கண்டா சால்வை எடுத்து தூரத்தள்ளிப் போவாங்க; வழமையை மாத்தப் போறிங்களே! அது முடியுமே?"

"அது முடியும்! நாங்க அடிமைகள் இல்லை, மனிதர்கள்!"

கந்தையாவின் வார்த்தைகள் நறுக்காக வந்தன.

"பொடியனுக்குச் சாதகம் சரியில்லை"

கார்க்கார மணியன் சொன்னுன். இந்த நேரம் அங்கு விதானையார் சுருட்டுக் குடித்துக்கொண்டு வெறும் மேலில் சால்வை போட்டவாறு வந்தான். அவனைக் கண்ட கடைக்காரன்,

"விதானையார் இவன் நாகன்ரை மோன் உங்கடை மகளைக் கலியாணம் முடிக்கப் போருனும்".

"ஓ! இவரோ! நேத்து மாவிட்டபுரத்தில் வாங்கினது காணுதோ? என்னடா வேணும்?"

"எனக்கு மனித உரிமை வேணும்!"

கந்தையா வாங்கிலேயே இருந்தான். அவன் கண்கள் வெறுப்புடன் விதானையின் உருவத்தை விழுங்கிக்கொண்டிருந்தன. அப்பொழுதுதான் கிருஷ்ணன் ஆட்களையும் அழைத்து வந்திருந்தால் பெலமாக இருக்கும் என்று யோசித்தான். தனியாக வந்தது தவறு என்று யோசித்தாலும் தன் தைரியத்தை அவன் விட்டுக் கொடுக்கவில்லை.

"ஓ, நீ கேட்பாயடா? என்னடா பார்த்துக் கொண்டிருக்கீங்க கீழ்சாதிப் பள்ளன் நாங்களிருக்கிற வாங்கில இருக்கிருன். உதையுங்கோ!" என்று கத்திக்கொண்டு கந்தையாவை நெருங்கினர். கடைக்காரன் சண்டிக்கட்டு கட்டிக்கொண்டு முன்னுக்குப் பாய்ந்தான். அதற்கிடையில் ஐயம்பிள்ளை அவன் பிடரியில் ஓங்கி அறைந்து விட்டான்.

கந்தையா துள்ளி எழுந்தான்.

"டேய் வேடர்களே! எனக்கு அடிச்சா நானும் அடிப்பன்" என்று கூறி முடிப்பதற்கிடையில் முகத்தில் ஓங்கி அறைந்து விட்டான். கந்தையா சக்தியைக் கூட்டி அவனைக் காலால் உதைய அவன் பலகார அலுமாரியோடு அடிபட்டு விழுந்தான். கண்ணுடிகள் உடைந்து நொருங்கி விழுந்தன. வெளியில் இருந்து ஓடிவந்த விதானையின் கையாள் ஒருவன் சோடாப் போத்தலால் கந்தையாவின் நெஞ்சில் எறிந்தான். அத்துடன் விதானை பாய்ந்து அவனுடைய சேட்டுக் கொலரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்து அமுக்கி காலால் உதைத்தான். அந்த நோவைத் தாங்க முடியாமல் குனிந்த அவன், மடிக்குள் வைத்திருந்த கோப்பிக் கத்தியை இழுத்து எடுத்து நிமிர்ந்தான். கண்கள் இரத்த தாகங் கொண்டு சிவந்திருந்தன.

"இப்ப தொடுங்கடா பாப்பம்!"

அவனுடைய மூக்கில் இருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது.

அவனுடைய கோபாவேசக் கண்கள் வெறுப்புடன் உப்பிப் பருத்து நிற்கும் விதானையைக் குறிபார்த்துக்கொண்டிருந்தன. விதானை உடனே பின்வாங்கி சோடாப் போத்தல் எடுத்து அவனை நோக்கி எறிய கையை ஓங்கினான். கந்தையா பற்களை நெருமிக்கொண்டு பாய்ந்து சென்று, விதானையின் கழுத்தில் தொங்கிய சால்வையை இறுகப்பற்றி கழுத்தை நெரித்துக்கொண்டு "டேய் நாயே என்னைப் பள்ளனெண்டு காட்டிக்கொடுத்து அடிவாங்கித்தந்தாய். நான் பள்ளனில்லை யடா, மனிதனடா! வினை விதைத்த நீ வினையை அறுத்துக் கொள்ளடா" என்று கூறிய அடுத்த வினடி-

"ஐயோ! கடவுளே!"

விதானை ஓங்காரமாகக் கூக்குரலிட்டுக் கொண்டு கடைக்கு முன்னால் சுருண்டு விழுந்தான். அவன் வயிற்றிலிருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்தது. கந்தையா இரத்தம் தோய்ந்த கத்தியை கையில் பிடித்தவாறு நின்றான்.

"நீ கடவுளையா கூப்பிடுகிறாய்; கடவுளிருந்தா உனக்கு நிச்சயம் நரகந் தான்ரா!"

அவன் வாய் அருவருப்போடு கூறியது.

கடைக்குள் நின்றவர்கள் பிரமிப்படைந்து, நடுங்கி ஓடத் தொடங்கினார்கள். வாத்தியார் சுருட்டை எறிந்துவிட்டு பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தார். கடைக்கரரன் கைகால்கள் நடுக்கத்தால் உதறிக் கொண்டிருந்தன.

"எல்லாரும் ஓடுறுங்கள்! கோழைகள்! ஏண்டா ஓடுறிங்கள். உங்க பக்கம் நியாயமிருந்தா ஏண்டா ஓடுறீங்கள்! பொலிசுக் காடா போறீங்கள்! போங்கடா; அவங்க உங்க பக்கந்தான்ரா; ஓடுங்கடா!"

நிலத்தில் விழுந்து கிடந்து துடிக்கும் விதானையை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்ற கந்தையா தைரியமாக எதற்கும் தயாராக நடந்துகொண்டிருந்தான்.

---

வாழ்க்கைதான் மனிதனுக்குக் கிடைத்த அரிய பொக்கிஷம். இந்தப் பொக்கிஷத்தை மனிதன் ஒரே ஒரு முறைதான் வாழ்ந்து அனுபவிக்க முடியும். எனவே எவ்வளவு காலம் செயலற்று இருந்து விட்டோம், என்று பிற் காலத்தில் வருந்தக் கூடிய நிலையிலோ, எவ்வளவு சில்லறைத்தனமான கேவலமான முறையில் நடந்து கொண்டு விட்டோம் என்று வெட்கப்படக்கூடிய நிலையிலோ நாம் வாழக் கூடாது. அதற்கு மாறாக சாகும்போது மனச் சாந்தியோடு 'என் வாழ்நாள் முழுவதையும், என் முழு சக்தியையும் மனித குலத்தின் விடுதலைப் போராட்டம் என்ற உலகின் ஒப்பற்ற பணிக்காகவே பயன் படுத்தினேன்' என்று சொல்லக் கூடிய முறையில் நாம் வாழவேண்டும்.

— ஆஸ்ரோவ்ஸ்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநீதி பெறுவோம்

க. கிருஷ்ணபிள்ளை

சூரியனுஞ் சுழல்பூமிச் செம்பா கத்தைச்
சோபைசெயப் பாரபட்சங் காண்ப தில்லை.
மாரிமழை மலைமண்ணை அடித்துச் சென்று
மகிதலத்தைச் சமப்படுத்த முயற்சி செய்யும்.
வாரியது தனதுஅலைக் கரத்தி னாலே
வண்மையுறு நிலமதனைத் தனக்கே யாக்கும்
பாரினிலே அல்திணைகள் சமமே காணப்
பகுத்தறிவு மனிதருக்கேன் பாகு பாடு?

பாகுபா டுள்ளவரை அகில மெங்கும்
பண்பாடு அரிதாகிப் புண்பா டாகும்.
சாகியங்கள் பல கூறிச் சாந்தி காணும்
சண்டியர்தம் சாதிவெறி நிலைக்க லாமோ!
தாகமதைத் தீர்தண்ணீர் குளுமை மாறித்
தகதகக்கும் தீயினாற் கொதித்த வாறு
ஆகமத்தைத் தமதாக்கிச் சான்று கூறும்
அருளற்றார் திருந்தவழி காண்பீர் இன்று!

* * *

ஒன்றுகுலம் என்றுணரா மூடரா னோர்கள்
உம்பருக் குதவிய வேடுவிச்சி நாதனை
நன்றான திருக்குறளைத் தந்தஆதி மகனை
நந்தனை, புலையர்கூ ழுண்ட ஆசானை
நின்றாடும் இறைவற்கு இறைச்சியை மென்று
நிறைவுடன் தீற்றிய கண்ணப்பன் தன்னை
அன்போடு போற்றுகின்றார் என்றாலும் நம்மை
அடக்கியே ஒடுக்குகிறார் சமநீதி காண்போம்!

காண்பதற் கழகான சுந்தரரின் பரவை
கணிகையர் குலத்தினர் மறுப்பதற்கே யில்லை
ஆண்டகையின் அருள்பெற்ற சம்பந்த மூர்த்தி
அருட்தோழர் இழிகுலத்துத் திருநீல கண்டர்
கூண்டோடு கைலையைக் கண்டிடவே சென்ற
குற்றமற்ற அப்பர் சொன்னதிரு வாக்கை
வீண் வாதஞ் செய்தே புறக்கணிக்கும் கசடர்
வேற்றுமையை வெற்றிகொண்டு சமநீதி பெறுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றில் புதிய எழுச்சி

செந்தில்

இலங்கை வரலாற்றில் வடபகுதியில் வாழும் லட்சக் கணக்கான ஒடுக்கப்பட்ட மக்கள் தம்மைப் பிணைத்திருக்கும் நிலப் பிரபுத்துவ விலங்கை உடைத்தெறிய இன்றைய எழுச்சி போன்ற ஒரு நிலைமையை என்றுமே சிருஷ்டித்ததில்லை. இந்த எழுச்சியானது மக்கள் ஐக்கியத்தினூடாகவும், வீரமிக்க தியாகம் நிறைந்த போராட்டங்களின் ஊடாகவும் இரண்டே இரண்டு வருடங்களில் வளர்ச்சி பெற்றது. ஆரம்பத்தில் ஊர்வலங்களாகவும் கூட்டங்களாகவும், பிரசார இயக்கங்களாகவும் ஆரம்பித்த மக்கள் எழுச்சி மிகக் குறுகிய காலத்தில் சக்தி மிக்க தேனீர்க் கடை, ஆலயப்பிரவேசப் போராட்டங்களாக வடபகுதி எங்கும் வியாபித்தது. என்றுமில்லாத இந்த எழுச்சியைக் கண்டு ஆளும் வர்க்கம் அஞ்சியது. அதன் அடக்கு முறை யந்திரமான பொலீஸ்படை பல முனைகளிலும் இவ் எழுச்சிக்கு எதிராக முடுக்கிவிடப்பட்டது. அரசாங்க அதிகாரிகள் மாநாடுகள் கூட்டினர். திட்டங்கள் தீட்டினர். வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இவ் எழுச்சியைக் கண்டித்து சொற்பொழிவுகள் ஆற்றினர். பத்திரிகைகள் வட பகுதியில் வியட்நாம், நக்சல்பாரி போன்ற போராட்ட கேந்திரங்கள் உருவாகிவிட்டன என ஓலமிட்டன. உலகப் பிற்போக்குப் பத்திரிகைகள் வட பகுதியில் சிகப்பு அதிகாரத்திற்கான ஆயுதப் போராட்டம் என வருணித்தன. இலங்கையிலுள்ள பிற்போக்குச் சக்திகள் ஒன்று கூடி மக்களை அமைதியாக இருக்கும்படி வேண்டுகோள் விடுத்தன. பொலீஸ் வட்டாரங்கள் தூண்டி விடுவோர், குழப்பத்தை உண்டு பண்ணுவோர், அரசியல் லாபம் பெறும் கோஷ்டி என பட்டங்கள் சூட்டினர். இவை யாவும் ஒடுக்கப்பட்ட மக்களின் புதிய-யாராலும் தடுத்து நிறுத்த முடியாத எழுச்சியை நசுக்கி விடவே நடத்தப் பட்ட பொய்ப் பிரசாரங்களும் கீழ்த்தரமான இயக்கங்களுமாகும்.

ஆனால் இவையெல்லாவற்றிற்கும் எதிராக ஒடுக்கப்பட்ட மக்களும் அவர்கள் பக்கம் நின்ற உறுதியான ஒரே ஒரு அரசியல் இயக்கமும் ஏனைய முற்போக்கு சக்திகளும் வலுமிக்க போராட்டங்களை நடத்தினர். பல்லாயிரம் வருஷங்களாக அமுல் செய்யப் பட்டு வந்த நிலப்பிரபுத்துவ, சாதி ஒடுக்கு முறைகளுக்கும், அடிமை குடிமை முறைகளுக்கும் எதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் கிளர்ந்தெழுந்தனர். அவர்களின் எழுச்சியின் முன் எந்த சக்தியாலும் தாக்குப் பிடிக்க முடியவில்லை. சாதி வெறியர்கள் ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறை யந்திரத்தின் உதவியுடன் மக்கள் போராட்டங்களை முறியடிக்க ஆயுதப் பலாத்காரம் பாவித்தனர். பகிரங்கமாகவே துப்பாக்கிகள் கொண்டு மக்களை வேட்டையாடினர். இவற்றின் மூலம் சாதி அமைப்பைப் பாதுகாத்துவிடலாம் எனவும் கனவு கண்டனர். எவ்வளவுதான் கொடிய அடக்கு முறைகளையும், அட்டூழியங்களையும் கையாண்டபோதிலும் ஒடுக்கப்பட்ட மக்களும் அவர்களின் பக்கம் நின்ற உறுதியான அரசியல் இயக்கமும் அச்சுறுத்தப்படவில்லை, அழித்தொழிக்கப்படவுமில்லை. பல உயிர்களைப் பலி கொடுத்த பின்பும் படுகாயங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் இரத்தத்தைச் சிந்திய பின்பும் அவர்கள் சாதி வெறியர்கள் முன் மண்டி யிடவில்லை. அவர்கள் உறுதியாக எழுந்து நின்று வழிந்தோடிய இரத்தத்தைத் தடைத்துக் கொண்டு, உயிர் நீத்த தம் தோழர்களை அடக்கம் செய்துவிட்டு, பிற் போக்கு சாதி வெறியர்களின் ஆயுத பலாத் காரத்தை புரட்சிகர ஆயுத பலாத்காரம் கொண்டு எதிர்த்தனர். ஒடுக்கப்பட்ட மக் களின் இப்போராட்டம் வட பகுதியில் பல் லாண்டு காலம் உறங்கிக்கிடந்த ஒடுக்கப் கப்பட்ட மக்களை விழித்தெழச் செய்தது. வடபகுதி எங்கும் போராட்ட உணர்வு பரவியது. மக்கள் தம்மைப் பிணைத்திருக் கும் அடிமை விலங்கை உடைத்தெறிய புரட்சிகரமான போராட்டம் ஒன்றே சரி யான ஆயுதம் என தெரிந்தெடுத்தனர்.

கடந்த பல வருடங்களாக ஒடுக்கப்பட்ட மக்கள் சாதி ஒடுக்கு முறைகளுக்கும் அடிமை குடிமை முறைகளுக்கும் எதிராக பல பகுதிகளில் தனித்தனிப் போராட்டங் கள் நடத்திப் பல உயிர்கள் பலி கொள்ளப் பட்டன. வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டனர். மக்களது தொழில்கள் நாசம் செய்யப்பட் டன. இவை அத்தனைக்கும் அன்றைய நேரத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் எதிராகப் போராடிய போதிலும் அப்போராட்டங்களை உறுதியான தொடர்ச்சியான போராட்டங் களாக முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. இதற்கான காரணம் போராட்டங்கள் நடத் தியமக்கள் அல்ல. அப்போராட்டங்களை வழிநடத்தியவர்களாகும். ஒடுக்கப்பட்ட மக் கள் சாதி ஒடுக்கு முறைகளுக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்திய காலங்களில் எல் லாம் அப்போராட்டங்களை வெறும் சாதிப் போராட்டமாக குறிப்பிட்ட இரு பகுதி களுக்கு இடையில் நடைபெறும போராட் டங்களாகக் கணித்து அவற்றைச் சமா தானம் செய்து வைப்பதில் முன் நின்றார் களே தவிர பிரச்சினைகளை ஒருபோதும் அணுகவில்லை, இத்தாழ்த்தப்பட்ட மக்க ளின் தனிப் பெரும் தலைவர்கள் என வேஷம்போட்டவர்கள். அது மாத்திர மல்ல, சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் முற்போக்கு சக்திகளுக்கும் பிற்போக்கு சக்திகளுக்கும் இடையிலான, வளரும் சக்திகளுக்கும் அழியும் சக்தி களுக்கும் இடையிலான அடிப்படையில் சமுதாய மாற்றத்திற்கான போராட்டமாக அப் போராட்டங்களை வழி நடத்தத் தவறி யது முக்கிய காரணமாகும். மேலும் அவர் கள் அன்றைய நேரத்தில் சாதிக்கொரு சங்கங்களையும், அதன் தலைவர்களுக்குப் பட்டம் பதவிகள் பெறும் நோக்கங்களை யுமே முதன்மைப் படுத்தினர். இதனால் வடபகுதியில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்கள் இவர்களது சுயநல வேட்டையால் கூறு போடப்பட்டனர். மக்கள் ஐக்கியம் என் பது அடையப்படவில்லை. இவை மாத்திர மல்ல, உண்மையில் தீண்டாமைக்கு எதிராக போராடத் தயாராயிருந்த உயர்சாதி முற் போக்கு எண்ணங் கொண்டோர் புறக் கணிக்கப்பட்டனர். அவர்களது ஐக்கியத் தைக் கைநழுவ விட்டனர். இவை எல்லா வற்றிற்கும் மேலாக அன்றைய நேரத்தில் அந்த ஸ்தாபனங்களிடமும் அதன் தலை வர்களிடமும் ஒரு புரட்சிகரமான வேலைத் திட்டமோ, கொள்கைகளோ இருக்கவில்லை. அவர்களுக்கு ஒரு நீண்டகால இலக்கு இருக்கவே இல்லை. இதனால் கடந்த காலங்களில் ஒடுக்கப்பட்ட மக்களின் போ ராட்டங்கள் மழுங்கடிக்கப்பட்டன. சாதி வெறியர்களுக்கும், பிற்போக்கு வாதிகளுக் கும் காட்டிக் கொடுக்கப்பட்டன. இதனால் சாதி வெறி மேலும் உரம்பெற வழி வகுத் தனர். இவையெல்லாவற்றையும் இன் றைய மக்கள் எழுச்சி நன்கு உணர்ந்துவிட் டது. ஒடுக்கப்பட்ட மக்கள் கடந்த கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கியமற்ற, வெறும் உதிரிகளின் வெட்டுப் பேச்சுக்களினதும், தவறான ஸ்தாபனங்களினதும், தனிப்பட்ட தலைவர்களினதும் கசப்பான அனுபவங்களை ஒருமுறை திரும்பிப் பார்த்து அவ் ஸ்தாபனங்களினதும் அதன் தலைவர்களினதும் முகங்களில் காறி உமிழ்ந்துவிட்டு புரட்சிகர வழிகளில் முன்னேறத் தொடங்கிவிட்டனர். சாதி வெறியர்களுக்கு கொடுத்த பலமான தாக்குதல்களின்போது தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெரும் தலைவர்கள் என வேஷம் போட்டவர்களுக்கும் அடிகள் விழத் தவறவில்லை. அவர்கள் குப்பைத் தொட்டிகளில் தூக்கி வீசப்பட்டனர்.

ஆனால் இன்றைய எழுச்சியானது சரியான தவறற்ற தலைமையினாலும், ஒடுக்கப்பட்ட மக்களின் உறுதியான ஐக்கியத்தினாலும் வழிநடத்தப்படுவதாகும். இன்று போல் மக்கள் ஐக்கியமும், போராட்ட உணர்வும் என்றும் ஏற்பட்டதில்லை. இதற்கான அடிப்படைக் காரணம் ஸ்தாபனமும், தலைமையுமேயாகும். சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான பரந்த வெகுஜன ஸ்தாபனத்தின்கீழ் சகல ஒடுக்கப்பட்ட மக்களினதும் ஏனைய முற்போக்கு எண்ணம் கொண்ட மக்களினதும் இறுக்கமான ஐக்கியம் உறுதியாக்கப்பட்டுள்ளது. அடுத்து எந்தக் கட்டத்திலும், எவ்வித கஷ்டத்திலும் விட்டுக் கொடுக்காத உறுதியான போராட்டத்தை தொடர்ச்சியாக முன் கொண்டு செல்லும் தவறற்ற தலைமையாகும். இத்தலைமையானது ஒரு சிலரின் தனிப்பட்ட தலைவர்களின் நலன்களில் இருந்தல்லாமல், ஒடுக்கப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளினதும் அதற்கான போராட்ட நலன்களில் இருந்தும் உருவாக்கப்பட்ட உறுதியான தலைமையாகும். இவ் ஸ்தாபனமும் தலைமையும் குறுகிய நோக்கமற்ற பரந்த ஸ்தாபனமாக இருப்பதால் ஒடுக்கப்பட்ட மக்கள், முற்போக்கு எண்ணங்கொண்ட உயர் சாதியினர், தென்னிலங்கை முற்போக்குச் சக்திகள் மற்றும் பல ஸ்தாபனங்கள் தீண்டாமைக்கு எதிராக வெகுஜன ஸ்தாபனத்தின் ஊடாக முன் செல்கின்றனர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கமும் அவர்களது உறுதியான போராட்டத்தின் பக்கமும் இலங்கையில் உள்ள ஒரே ஒரு அரசியல் இயக்கம் உறுதியாக நிற்கின்றது. இலங்கையில் உள்ள அவ் அரசியல் இயக்கத்தைச் சேர்ந்த பல லட்சம் மக்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் நிற்கிறார்கள். வட பகுதியில் உள்ள புரட்சிகர வாலிபர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களில் முன்னணிப் படையாக உள்ளனர். அவர்கள் இன்றைய யுகத்தின் ஒடுக்கப்பட்ட உலக மக்களினதும் தேசங்களினதும் மாபெரும் தலைவர் கூறியதற்கிணங்க "உண்மை மக்களின் நலன்களுக்கு உகந்ததாகையால், நாம் உண்மைக்காக நின்று போராடத் தயாராய் இருக்க வேண்டும் பிழைகள் மக்கள் நலன்களுக்கு எதிரானவையாகையால் நாம் பிழைகளைத் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்" மேற்கூறிய பாதையில் சகல போராட்டங்களிலும், மக்கள் போராட்டங்களில் தோளோடு தோள் நின்று போராடுகின்றார்கள். இந்த வழியில் ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னேறிச் செல்கையில் எந்தப் பிற்போக்குச் சக்தியும் அவர்களது போராட்டங்களைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதை இன்றைய எழுச்சியானது தெட்டத் தெளிவாக நிரூபித்து விட்டது.

ஒடுக்கப்பட்ட மக்களின் இந்த வீரமிக்க எழுச்சியைக் கண்டு இவ்வெழுச்சி எக் கட்

டம் வரை கொண்டு செல்லப்படும், அல்லது ஆலயப் பிரவேச தேனீர்க்கடைப் போராட்டங்களுக்கு மட்டுமா? போன்ற கேள்விகள் எழுகின்றன. உண்மையில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை இந்த நாட்டின் விடுதலையுடன் பிரிக்கப்பட முடியாத ஒரு அம்சமாகும். ஏனெனில் சாதி ஒடுக்கு முறையானது இன்று நேற்று ஏற்பட்ட தொன்றல்ல. அது பல்லாண்டுகளாக நிலப்பிரபுத்துவத்தால் கட்டிக் காக்கப்பட்ட தொன்றாகும். நிலப் பிரபுத்துவத்தால் தோற்றுவிக்கப்பட்ட சாதி ஒடுக்குமுறையானது நிலப்பிரபுத்துவத்தை ஒழித்துக் கட்டும் அடிப்படையான மாற்றத்தின் மூலமே அழிக்கப்பட முடியும். வடபகுதியில், நாம் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான போராட்டத்தை நடத்தும்போது அது இலங்கையில் ஏனைய பகுதிகளிலுள்ள நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான போராட்டங்களுடன் ஒன்றிணைக்கப்படவேண்டும். இவ்விதமாக இலங்கையில் நிலப் பிரபுத்துவத்திற்கு எதிரான போராட்டமானது இலங்கையைச் சூறைபாடும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்துடன் தோளோடு தோள் பூண்ட போராட்டமாகத் திகழ வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களாகிய எமது போராட்டம் இலங்கையில் வாழும் லட்சோப லட்சம் தொழிலாள - விவசாயிகளின் விமோசனத்திற்கான விடுதலைப் போராட்டங்களிலிருந்து பிரிக்க முடியாத போராட்டமாகும். இலங்கையின் தேசிய விடுதலைக்கும், அடிப்படையான அரசியல் மாற்றத்திற்குமான புரட்சிகரப் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்களாகிய நாம் கைகோர்த்துச் செல்ல வேண்டும். ஆகவே ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டம் இந்த நாட்டின் விடுதலைக்கான தனது பங்கைச் செலுத்தும் போராட்டமாகும் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

ஆகவே ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றில் இன்றைய எழுச்சி புதியதோர் அத்தியாயத்தை மட்டுமல்ல இலங்கை வரலாற்றிலேயே ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இது உலக ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களும், தேசங்களும் தம்மைப் பிணைத்திருக்கும் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ விலங்கை உடைப்பதற்கான எழுச்சியில் ஒரு பகுதியாகும். மாபெரும் தலைவர் மாஓ கூறியதுபோல "மக்களே, மக்கள் மட்டுமே உலகவரலாற்றை ஆக்குவதிலான இயக்க சக்தியாவர்". இவ்வாக்கியம் உலக மக்களால் உறுதியாக நிரூபிக்கப்பட்டு வருகின்றது. இன்று உலகம் பூராவும் மக்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர். அவர்களின் கிளர்ச்சியை அடக்க யாராலுமே முடியவில்லை. அவர்கள் "கிளர்ச்சி செய்வது நியாயமானது" என்பதற்கிணங்கப் போராடுகின்றார்கள். இந்த உலக நடைமுறை உண்மையை நாமும் உற்று நோக்கி எமக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக மேன்மேலும் கிளர்ச்சி செய்வதே நியாயமானது.

## வெற்றியில் நம்பிக்கை

உலகம் முன்னேறுகின்றது; எதிர்காலம் பிரகாசமாய் இருக்கின்றது. வரலாற்றின் இப் பொது ஓட்டத்தை எவராலும் மாற்ற முடியாது. வெற்றியில் மக்களின் நம்பிக்கையை வளர்ப்பதற்காக உலகமுன்னேற்றத்தின் நிலைமை பற்றியும், பிரகாசமான எதிர்காலம் பற்றியும் நாம் மக்கள் மத்தியில் இடைவிடாது பிரசாரம் செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குரல்!

தளையொடித் திட உரிமை கொண்டிடத்
தலைநிமிர்ந் தோமெனப் பாடு! — எம்மைப்
புலையர் என்றிகழ்ந் தேசும் புல்லரைப்
பூழ்தி செய்திடக் கூடு!

புலைச்சி மெல்லிதழ் சுவைத்த வாயொடு
புகுவர் கோவில்கள் உள்ளே — எம்மை
விலக்கிப் பூசைக்குச் செல்வம் கேட்டுக் கை
வேண்டுவார் வீட்டி னுள்ளே.

உழைப்பை உண்டிடும் உரிமை கொண்டவர்
உணர்கி றாரில்லை எம்மை — அடிமை
நிலைக கிரங்கிஎம் துயர் களைந்திட
நினைக்கிறா ரில்லை என்னே?

வழமையா யெமை வருத்தித் தாமுயர்
வாழ்வு கண்டவர் அன்றோ? — அந்தப்
பழமை நீற்றிடத் துணிவர் என்று நாம்
பகர்தல் தானிங்கு நன்றோ?

எட்டிலும் புகழ்ப் பாட்டிலும் மேடை
ஏறியும் நின்று கூவி — எம்மை
வாட்டும் பேய்தனை ஓட்டுமோர் வகை
வந்ததோ இங்கு யோசி!

தொடுத்த போர்விலங் கொடித்த பின்னரே
முடித்தல் தானிங்கு நீதி — எம்மை
அடுத் தடுத்தவர் கெடுப்பர் நாமிவை
அறிந்த வோர் பண்டைச் சேதி.

— தில்லைச்சிவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே ஒரு கொள்கையை முன்னெடுத்துச் செல்வோம்!

கே. டானியல்

"யார் யாருக்கு விடுதலை வேண்டுமோ அவர்களுக்கிடையே இருந்துதான் போராட்டங்கள் வெடிக்க வேண்டும். அப்படிப் பொங்கி எழும் போராட்டங்களே விடுதலையைப் பெற்றுத்தரக்கூடிய வல்லமை உடையதாக இருக்கும்" என்ற இக் கருத்துத்தான் இன்றைய நூற்றுண்டில் பலராலும், பல்வேறு கொடுமைகளுக்கும் அடக்குமுறைக்கும் உட்பட்ட மக்களாலும், ஏற்றுக்கொள்ளப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றது. நமது மக்களின் விடுதலைக்கான மார்க்கமும் இந்த அடிப்படையிலிருந்துதான் பிறந்தாக வேண்டும்.

சாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிரான இயக்கங்கள் தோன்றிப் பலகாலமாகிவிட்டன. ஆனால் இவ்வியக்கங்கள் யாவும் அப்போதைக்கப்போது உள்ள பிரச்சினைகளுக்குத் தற்காலிக தீர்வுகாண்பதோடும், அல்லது பிரச்சினைகள் வேகமடையாது தடுத்து வைப்பதோடும் நின்றுவிட்டன. இந்த தற்காலிக வைத்திய முறையிலான கொள்கைகளை மட்டும் ஏற்றுக்கொண்டு, அப்போதைக்கப்போது உள்ள அதிகார பீடங்களினது ஒத்துழைப்பையும் ஆசியையும் பெற்றுக்கொண்டு, இந்த ஸ்தாபனங்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் பகுதியை ஊடுருவி நின்றன. இந்த அடிச்சுவட்டில்தான் 'சலுகைகள்' என்ற வால் தலையில்லா முண்டமான பிறவிகளை இந்த இயக்கத்தினை வழிநடத்தி வந்தவர்கள் அடிக்கடி பிரசவித்து வந்தனர்.

இதன்மூலம் சமாதான நீதிபதிப் பதவிகளையும் அதன் தரத்துக்கும் மட்டமான வேறு பதவிகளையும் பெற்றுத் தருவது, சிலபாடசாலைகளைக் கட்டித் தருவது, இடமாற்றங்களைப் பெற்றுத் தருவது, நியமனங்களைச்செய்து கொடுப்பது ஆகியவை போன்ற சலுகைகள் பெறுவதன் மூலமாக சமூகத்தில் உள்ள கொடுமைகளையும், அடக்கு முறைகளையும், சின்னத் தனங்களையும் அழித்து விடலாம் என்ற மிக மூடத்தனமான நம்பிக்கையைத்தான் இந்த வழி காட்டிகள் ஒடுக்கப்பட்ட மக்களிடம் பரப்பினரே தவிர, அடிப்படை மாற்றங்களுக்கான மார்க்கங்களைக் காட்டி வைக்கவில்லை.

'சலுகை' என்ற இந்த முண்டப் பிறவியைப் பெற்று, அதை ஏற்கும்படியும் ஒடுக்கப்பட்ட மக்களைத் திரட்டி எடுத்தும் இது நாள்வரை சாதி அடிப்படையிலான கொடுமைகள் துளி அளவேனும் குறைக்க முடிந்ததா என்பதை ஆராய்ந்து பார்த்தால் உண்மை நன்கு புலனுகும்.

சமூக அடக்கு முறைகளும், சாதிக் கொடுமைகளும் தற்செயலான ஒன்ருக நினைத்துக்கொண்டு இந்த இயக்கங்களில் ஈடுபட்டு வந்த ஒரே ஒரு காரணத்தால் தான், விடுதலைக்கான சரியான வழியை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இவர்களால் காட்ட முடியவில்லை "சாதி அமைப்பு முறை என்பது நிலப்பிரபுத்துவத்தின் திட்டமிட்ட சமூக அமைப்பு முறை" என்பதனை மக்களுக்கு உணர வைத்திருப்பின்-போதனையைக் கொடுத்திருப்பின் நிலப்பிரபுத்துவ முறையை அழித்தொழிப்பதற்கான ஒரு பொதுப் போராட்டத்தை நடத்துவதன் மூலமாகவே இதை அழித்தொழிக்கும் வன்மையை இச்சமூகக் கொடுமைக்கு ஆளான சகல மக்களும் பெற்றிருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகாலமாக சமூக அடக்கு முறைகளுக்குப் பலியாகிவந்த மக்களுக்கு மத்தியிலேயே மக்களை வழிநடத்தி வந்தவர்கள் இருந்துவந்தனர். ஆனால் அடிப்படையான போத மின்மையாலும், வழிநடத்தல் தத்துவ விசாரத்தினாலும் மக்களை முன்னெடுத்துச்செல்வதற்குப் பதில் அவர்களை பின் நோக்கித் தள்ளிவந்து விட்டனர். இன்று அரசியல் போதமடைந்த மக்கள் கூட்டம், போராட்டத்திற்கான வழிகளைத் திறக்கும் போது, அவர்களை முன் செல்லவிடாது தடுத்து நிறுத்துவவற்காக "போராட்டத்திற்கு மக்கள் தயாரில்லை; மக்கள் போராட்டத்தை விரும்பவும் இல்லை" என்று படு பாதகமான துரோகத் தனங்களைச் செய்ய முற்பட்டு நிற்கின்றனர்.

அடக்கு முறைகளுக்கு உட்பட்ட காலக்திலிருந்தே, மக்கள் போராட்ட மனோபாவத்துடன் எதற்கும் தயாராகவே இருந்து வந்துள்ளனர். தியாகத்தின் மைல் கல்லாக விளங்கும் முதலி சின்னத் தம்பியின் காலத்திற்கு முன்பிருந்தும், தியாகிகள், சின்னர், சார்த்திகேசு, வன்னியன் குமரேசு, இரத்தினம், வைத்தி ஆகியோரது காலம் வரையிலும் போராளிகள் தொடர்ச்சியாகப் போராடி வந்துள்ளனர். இது பதவித் தலைவர்களின் காமாலைக் கண்களுக்குத் தெரியாமல் இருந்துவிட்டது விந்தையே! மிகவும் காட்டுமிராண்டித்தனமான அடக்கு முறைகளை மீறிக்கொண்டும், சாதி வெறியர்களின் பாதுகாவலர்களான பொலிசாரை மிஞ்சிக் கொண்டும் ஆயுதம் தாங்கிப் போராடிக் கொண்டிருக்கும் கிராமங்களை இவர்கள் இன்றும் அறியாமல் இருப்பது மாபெரும் அதிசயமாகும்!

நிலப்பிரபுத்துவ அமைப்பு முறையின் வரம்புகளை மீறுதல், அந்த வரம்புகளை அழித்துவிடப் போராடுதல் இவ்விரண்டிலுமே சாதி முறையை முற்று முழுதாக அழித்துவிடக்கூடிய சகல வல்லமையும் அடங்கியுள்ளது. நிலப்பிரபுத்துவ அமைப்பு முறையின் வரம்புகளை மீறும் தன்மைகள் ஒடுக்கப்பட்ட மக்களிடம் தொடர்ச்சியாகவே இருந்து வந்துள்ளன. இந்தத் தன்மைகளின் வெளிப்பாடுதான் பல ஆண்டுகளாக பல கிராமங்களில் பல வேறுபட்ட கலவரங்களாக உருவாகி வந்துள்ளன என்பதை உணர்வது அவசியம்.

மயானங்கள், பொதுக் கிணறுகள் பாடசாலைகள் ஆகியவை போன்ற இடங்களில் காலா காலமாக நடந்த போராட்டங்கள் யாவும் இந்த வரம்புமீறல் உணர்வுகளின் வெளிப்பாடுகளே. இவை தனிப்பட்ட முறைகளில் - ஸ்தாபன உருவம் இன்றி நடந்தவையாயினும் கிராம மக்களின் கட்டுக்கோப்பான ஒத்துழைப்புடன் சாதிமுறைக் கெதிராகநடந்த போராட்டங்களேயாகும். இப்போராட்டங்கள், பல நூற்றுக் கணக்கில் நடந்துமுடிந்துள்ளன. ஒவ்வொரு போராட்டத்தின்போதும், நிலப் பிரபுத்துவ சக்திகளின் பாதுகாவல் சாதனங்களான படைகள், நீதிஸ்தலங்கள், உட்பட்ட ஏனையவை சகலதும், 'காடைத்தனங்கள், அல்லது சண்டித்தனங்கள்' என்ற விதத்தில் இந்த அத்துமீறல்காரர்களுக்கு தண்டனைகள் கொடுத்து சமாளித்துவந்துள்ளன. ஆனால் இந்த அமைப்பு முறையின் வரம்புகளை அழித்துவிடப் போராடுதல்' என்ற அடிப்படையில் போராட்டத்திற்கான ஸ்தாபனத்தை அமைத்து, பலகாலமாகப் போராடி வந்த மக்கள் கூட்டத்தை ஒன்றிணைத்து பொது நோக்கங்களை ஒருமுகப் படுத்திவிட்ட இந்தக் கால கட்டத்தில், நிலப்பிரபுத்துவ முறையைப் பாதுகாத்து நிற்கும் சகல சக்திகளினதும், மக்கள் விரோத சக்திகளினதும் சுய ரூபம் தெரிய வந்துள்ளது.

இந்தப் பிற்போக்காளர்களின் சுயரூபம் அம்பலமாக்கப்பட்டுள்ள இந்த வேளை, 'சலுகைகள், பெறுவதன் மூலம் சமூகம் ஈடேற முடியுமென்று உபதேசம் செய்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களும், "போராட வேண்டியதில்லை; போராட்டமின்றி சாதி அமைப்பு மாறக் கூடியது" என்று கூறுகின்ற அரசியல் ஆண்டிகளும் பிற்போக்காளர்களின் கைகளையே பலப்படுத்துகின்றனர் என்பதை ஒடுக்கப்பட்ட மக்கள் நன்குணர வேண்டும்.

"நியாயம், அநியாயம்" இந்த இரண்டு தான் எங்கும் இருக்க முடியும். இது உலக வியாபகமான உண்மையாகும். மக்கள் தங்கள் நியாயத்திற்கான போராட்டங்களில் ஈடுபட்டிருக்கக்கூடிய வேளையில் இரண்டுக்கும் நடுவாக நிற்கப் பார்ப்பவர்கள் அநியாயத்தின் கையைப் பலப்படுத்துபவர்களே! இதனால் நடுநிலைமையென்ற புதிதான கூச்சலைக் கிளப்புபவர்களும் எதிரிகளே என்பதையும் போராடும் மக்கள் உணரவேண்டும்.

'வரம்பை மீறல், வரம்பை அழித்துவிடுதல்' என்ற இரு வகையான வல்லமைகளில் 'வரம்பைமீறல்' என்பதனை ஆதரித்து நிற்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களும் ஒருவிதமான சாதி அமைப்புக்குப் பல்லாண்டு பாடும் சுபாவமுடையவர்களே! இவர்கள் சாதி அமைப்பு முறைக்கு மாறாகக் கருத்துக்களைச் சொல்லவும், சொல்லும் அளவுக்குச் செயல்படவும் சித்தமாயிருப்பர். ஆனால், அடிப்படையில் இந்த வரம்பையே அழித்துவிடக் கூடிய போராட்டங்கள் வெடிக்கும்போது இவர்கள் மறுபக்கமாகவே செயல்பட முற்படுகின்றனர். இந்த விதத்தில் பார்க்கும்போது சாதி அமைப்பு முறையையும், அது நிலைத்து நிற்பதற்கான நிலப்பிரபுத்துவ முறையையும் அழித்துவிடும் புரட்சிகரமான இயக்கம் ஒன்றைத் தவிர ஏனையவைகளை நம்பியிருப்பதும், அவைகளை ஆதரித்து நிற்பதும், சாதி அமைப்பு முறைகள் தொடர்ந்தும் நிலைக்க வழிவகுக்குமே தவிர வேறுபலன் எதையுமே தரப்போவதில்லை என்பதை ஒடுக்கப்பட்ட மக்கள் நன்குணர்வது அவசியம்.

சாதி அமைப்பு முறைக்கெதிரான சட்டங்களைத் துணைக்கொண்டு சாதி முறையை ஒழித்து விடலாம் என்ற நம்பிக்கையும் வேறோர் விதத்தில் தரப்படுகிறது. சட்டங்கள் ஆயிரம் செய்யலாம். ஆனால் இந்தச் சட்டங்களை அமுல் நடத்துபவர்கள் யார்? அவர்கள் அடிப்படையில் எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்? பரம்பரை பரம்பரையாக அடிமைத் தனங்களை வளர்த்து பாதுகாத்து, அவைகளின்மேல் தங்கள் சுகவாழ்வுக்கு வழியமைத்துக் கொண்டிருந்தவர்களின் வழித் தோன்றல்களும், இன்று வரையில் கிராமங்கள் தோறும் இதே சாதி முறையில் வாழ்வு நடத்திக் கொண்டிருப்பவர்களுமேயாகும் தங்களுடைய வர்க்க நலன்களை விட்டுக் கொடுத்து, தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ளும் காரியத்தை அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது எவ்வளவு மடமைத்தனம் என்பதைச் சமீப காலத்தில் நடந்த போராட்டங்களும், சட்டங்களை அமுல் நடத்துபவர்களின் செயல் முறைகளும் எமக்குப் போதித்துள்ளன.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அனுபவங்கள் எதைப் போதித்துள்ளன? எங்கேயும், எப்போதும், போராட்டமுறையான இயக்க முறைகளே பலன் அளித்துள்ளன. ஒரு பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுப்பதிலிருந்து சுடலையில் பிணம் சுடுவது வரையில் அப்போதைக்கப்போது, தனியாகவோ, கூட்டாகவோ போராட்ட முறையான நடைமுறைகளே பலனளித்துள்ளன.

தனித்தனியான எழுச்சிகளைவிட, கூட்டு முறையிலான எழுச்சிகளைக் கணக்கிட்டுப் பார்த்தால் மூன்று தடவைகள் ஒடுக்கப்பட்ட மக்கள் பகுதியெங்கும் இந்தவகையான பேரெழுச்சி ஏற்பட்டிருப்பதையும், மொத்தமான பலன் கிட்டியிருப்பதையும் காணலாம். முதலில், வில்லூண்டி மயானத்தில் முதலி சின்னத்தம்பியின் உயிர் பறிக்கப்பட்டபோது, எழுந்த போராட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயமான கிளர்ச்சி நாடெங்கிலுமுள்ள சகல ஒடுக்கப்பட்ட மக்களிடமும் பிரதிபலித்து மாற்றங்களுக்கான போராட்ட மயமான பாதையைக் காட்டியது.

அடுத்து யாழ்ப்பாணப் பட்டினத்தில் உள்ள போசனசாலை ஒன்றில் ஒரு ஒடுக்கப்பட்ட வாலிபன் நையப் புடைக்கப்பட்ட சம்பவத்திலிருந்து 1956, 57-ல் எழுந்த போராட்ட மயமான பேரெழுச்சி யாழ்ப்பாணப் பட்டணப் பிரதேசம் எங்குமுள்ள தேனீர்க் கடைகளையும், சில இந்துக் கோவில்களையும் திறக்க உதவியது.

கடந்த ஆண்டில் சங்கானை, கொடிகாமம், அச்சுவேலி போன்ற பகுதிகளில் ஏற்பட்ட போராட்டப் பேரெழுச்சி, மாவிட்டபுரக் கந்தன் ஆலயம்வரை பரந்து சென்று ஈற்றில் செல்வச்சந்நிதி உட்பட பல இந்துக் கோவில்களைத் திறக்க வழியமைத்தது.

இந்த மூன்று காலகட்டப் போராட்டப் பேரெழுச்சியிலிருந்து ஒரு புதிய வழிமுறையை ஒடுக்கப்பட்ட மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று. அந்த முறைதான், விடாப்பிடியான - தொடர்ச்சியான - விட்டுக்கொடுக்காத போராட்டமாகும்.

"சலுகைகள் பெறுதல்" என்ற முண்டப் பிறவியை அழித்துவிட்டு, போராடுதல், அடிமை விலங்கை அறுத்து அதிலே ஆயுதங்கள் செய்தல்" என்ற கொள்கை இந்தப் போராட்டத்தின் மூலமே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் புரட்சிகரமான கொள்கையை, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு என்றும் வழிகாட்டக்கூடிய கொள்கையை ஏற்றுக்கொண்ட வேளையில் மக்கள் பல தியாகங்கள் புரிய வேண்டியதாயிற்று. சின்னர் கார்த்திகேசு, குமரேசு, இரத்தினம், வயித்தி போன்றோரை நாம் இழக்க நேர்ந்தது. ஆனாலும், இந்தப் புரட்சிகரமான கொள்கைக்கு இரத்த சாட்சிகளாக இந்த நால்வரும் நிலைத்துவிட்டனர்.

தனி ஒரு மனிதனின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் கொள்கை ஒழிக்கப்பட்டு, தனி ஒரு சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்கு வகுக்கப்படும் புரட்சிகரமான கொள்கையோடு சேர்ந்தாற்போல, முழுத்தேசத்திற்கான பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டால்தான் பயமற்ற உத்தரவாதப்படுத்தப்பட்ட சுதந்திர வாழ்வைக் காண முடியும். சமூகம் விடுதலை பெறினும், நாடு விடுதலைபெறாதுவிடின், முழு நாட்டினதும் பிற்போக்கு அமைப்பு முறை சமூகத்தின் சுதந்திரத்தையே அழித்துவிடும். இதை மனதில் இருத்திக்கொண்டு ஒடுக்கப்பட்ட மக்கள் செயல்பட வேண்டும். அதற்காக நாம் செய்யவேண்டியதென்ன?

போராட்ட மயமான கொள்கைகளைச் சகல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லல்.

பகுதிகள் தோறும் போராட்டக் குழுக்களை அமைத்தல்.

வெகுஜனங்களைப் போராட்டங்களில் பங்குபெறச் செய்ய, பயமற்ற - துணிச்சலான நிலையை ஏற்படுத்தல்.

இம்மூன்றையும் கடமைகளாக ஏற்றுக்கொண்டு, சகல ஒடுக்கப்பட்ட மக்களும் முன்னேறிச் செல்வது ஒன்றே முடிவானதும், உறுதியானதும், உத்தரவாதமானதுமான வெற்றியைத் தரும்.

பல ஸ்தாபனங்களாகப் பிரிந்து கிடக்கும் ஒடுக்கப்பட்ட மக்களை "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்" என்ற ஒரு குடையின்கீழ் ஒன்றிணைத்து "அடிமை விலங்கறுத்து ஆயுதங்கள் செய்வோம்" அடிமை விலங்கறுக்க அவ் ஆயுதங்களையே ஏந்துவோம்" என்ற ஒரே ஒரு கொள்கையை முன்னெடுத்துச் செல்வோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை மண்ணே
# உனக்கு வணக்கம்!

சங்கானைக் கென் வணக்கம்!
சரித்திரத்தில் உன்நாமம்
மங்காது! யாழகத்து
மண்ணிற் பலகாலம்,
செங்குருதிக் கடல் குடித்துச்
செழித்த மதத்துக்குள்
வெங்கொடுமைச் சாக்காடாய்
வீற்றிருந்த சாதியினைச்
சங்காரம் செய்யத்
தனைத்தெழுந்து நிற்கின்ற -
சங்கானைக் கென் வணக்கம்!

கோயிலெனும் கோட்டைக்குள்
கொதிக்கும் கொடுமைகளை
நாயினிலும் மிக்க
நன்றிப் பெருக்கோடு
வாயிலிலே நின்று
வாழ்த்தும் பெருஞ்சாதி
நாய்கள்.... வாலை
நறுக்கி .. எழுந்தாய்!
சங்கையிலே நீ யானை!
சங்கானை !! — அந்தச்
சங்கானைக் கென் வணக்கம்!

எச்சாமம் வந்து
எதிரி நுழைந்தாலும்
நிச்சாமக் கண்கள்
நெருப் பெறிந்து நீருக்கும்!
குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன்! — சங்கானை
மண்ணுள் மலர்ந்த
மற்ற வியட்நாமே! — உன்

குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன் — சங்கானை
மண்ணுள் மலர்ந்த
மற்ற வியட்நாமே!

எண்ணத்திற் கோடி
ஏற்றம் தருகின்றாய்!
புண்ணுற்ற நெஞ்சுள்
புதுமை நுழைக்கின்றாய்!
கண்ணில் எதிர்காலம்
காட்டி நிலைக்கின்றாய்!
மண்ணின் வெறியை
மோதி எரிக்கின்ற
திண்மை எழுந்த
தீயாக நிற்கின்றாய்!
உன்னை, எனக்கு
உறவாக்கி விட்டவனை
என்னென்பேன்!
என்னென்பேன்!!

ஐந்து பெருங் கண்டத்தும்
எழுந்துவரும் பூகம்பம்
தந்தவனும் மாஓவின்
சிந்தனையால் உன்நாமம்
செகமெல்லாம் ஒலிக்கட்டும்!
செங்கொடியின் வீடே!
சிறுமை உடைத்தெறியும்
சிங்கத்தின் நெஞ்சே!
செய்தேன் உனக்கு வணக்கம்!
சங்கானை மண்ணே,
உனக்கு வணக்கம்!!

— சுபத்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமையை ஒழித்துக்கட்ட மேலும் முன்னேறுவோம்!

என். சண்முகதாசன்

1930-ம் ஆண்டு காலவரையில் டொனமூர் கமிஷன் அறிக்கைக்கு எதிராகவும், இலங்கையின் பூரண தேசிய விடுதலைக்காகவும், இன்று செயலற்றுப்போயுள்ள யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் நடத்திய இயக்கத்திற்குப் பின் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட மிக முற்போக்கான நிகழ்ச்சிதான் தீண்டாமை ஒழிப்புக்கான இயக்கம்.

தமிழரசுக் கட்சியினதும், தமிழ்க் காங்கிரசினதும் பிற்போக்குக் கொள்கைகள் காரணமாக, யாழ்ப்பாணத்து முற்போக்கு இயக்கம் பற்றித் தென்னிலங்கையின் முற்போக்குச் சக்திகள் மத்தியில் ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையை, இவ்வியக்கம் ஓரளவு இல்லாமல் செய்திருக்கிறது. தென் இலங்கை முற்போக்கு சக்திகளின் நன்மதிப்பையும் அது பெற்றிருக்கிறது.

அடிப்படையில் சாதி அமைப்பும் அதன் படுமோசமான அம்சமாகிய தீண்டாமையும் நிலப் பிரபுத்துவத்தின் பாரம்பரியத்திலானதாகும். சாதி அமைப்பு இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் நிலவுகின்றது. ஆனால் யாழ்ப்பாணத்தில் மட்டும் தான் தீண்டாமை என்ற அநியாயம் கடைப்பிடிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் மனிதவர்க்கத்தின் கடையர்களாய் கணிக்கப்படுகின்றனர். உயர் சாதியினரைப் போல் அவர்கள் கிணற்றில் தண்ணீர் அள்ள முடியாது. தேநீர்க் கடைகளுக்குள் அவர்கள் போக முடியாது. கடைகளுக்கு வெளியே நின்று, பிரத்தியேகமான தகரப்பேணிகளில் தேநீர் அருந்த வேண்டும். ஆனால் மற்றவர்கள் கொடுக்கும் தொகைதான் கொடுக்கவும் வேண்டும். அவர்களது பிள்ளைகள் ஒரே பாடசாலைக்குப் போக முடியாது. பொதுவான சுடுகாட்டில் கூட அவர்களது பிரேதங்களை எரிக்க முடியாது. காணிகளைச் சொந்தமாக வைத்திருப்பதுகூட பலாத்காரமாகத் தடைசெய்யப்படுகிறது. ஆலயத்தினுள் புகுந்து தெய்வ வணக்கம்கூட அவர்களால் செய்ய முடியாது.

இத்தகைய மனிதாபிமானமற்ற காட்டுமிராண்டித்தனமான அமைப்புக்கு எதிராகப் பல்வேறு கிளர்ச்சிகள் தாமாகத் தோன்றின. ஆனால் அடிப்படை மாற்றம் எதும் ஏற்படவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் கிளர்ந்தெழுந்தபோதெல்லாம், அவர்கள் மிருகத்தனமாக அடக்கப்பட்டனர். அவர்களது கிணறுகள் நஞ்சூட்டப்பட்டன. குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன. அவர்களும் ஈவிரக்கமின்றித் தாக்கப்பட்டனர். துரதிஷ்டவசமான இந்த மக்கள், அங்குள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் பரிகாரம் தேடுமென வீணாக எதிர்பார்த்து நின்றனர். ஆனால் இந்த அரசியல் கட்சிகள் எல்லாம் பாராளுமன்றத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருப்பதால், உயர் சாதியினரைப் பகைக்க விரும்பவில்லை. ஏனெனில், தாழ்த்தப்பட்ட மக்கள் யாழ்ப்பாண ஜனத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினராய் இருந்தபோதிலும், செயற்கையாக உருவாக்கப்பட்ட தொகுதிகளில் எல்லாம் உயர் சாதியினர் தான் அதிகப்படியானவராய் இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1957-ல் பண்டாரநாயக்க அரசாங்கம் சமூக குறைபாட்டுத் தடைச் சட்டத்தை உருவாக்கியது ஆனால் அது நடைமுறைப் படுத்தப்படாமலே இருந்தது. பின்பு, மூன்று வருடங்களுக்கு முன், தமிழரசுக் கட்சியினதும், கொனமன் திரிபுவாதக் கும்பலினதும் கூட்டுத் தலைமையிலான சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி இப்பிரச்னையை இட்டுச் சத்தியாக்கிரகம் செய்ய முன்வந்தது. ஆனால் அவர்களது நடவடிக்கைகள் எல்லாம் பத்திரிகை அறிக்கைகளுடனும், அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தைகளுடனும், பலனேதுமில்லாது போயிற்று.

இந்தக் கட்டத்தில்தான் திரிபுவாதக் குப்பையைத் தூக்கி எறிந்துவிட்டு இருந்த நிலையில், தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தெளிவான வழிகாட்ட இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வந்தது. தாழ்த்தப்பட்ட மக்களில் அதிகமானோர் தொழிலாளர்களும் விவசாயிகளும் அதலால் இது அடிப்படையில் ஓர் வர்க்கப் பிரச்சினை எனபதை எடுத்துக் கூறியது. அகிம்சை என்ற முதலாளித்துவ சிந்தனையைக் கண்டு ஏமாற வேண்டாம் என்றும், அவர்களை நிரந்தர அடிமைகளாக்க இது ஓர் கபடமான உபாயம் என்றும் எடுத்துக்காட்டியது. அவர்கள் ஐக்கியப்பட வேண்டுமெனவும் உயர் சாதியில்



சங்கானையில் சாதிவெறிக்குப் பலியான தியாகி சின்னர் - குமரேசுவின் பிரேத ஊர்வலத்தின் மீது சாதிவெறியர்கள் திட்டமிட்டு நடத்திய மிலேச்சத்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தையும், தமிழரசுப் பிற்போக்கு வாதிகளின் துரோகத் தனத்தையும் பாராளுமன்றத்தில் அம்பலப்படுத்தி, ஒடுக்கப்பட்ட மக்களின் நியாயமான போராட்டத்திற்கு தென்னிலங்கை மக்களின் ஆதரவையும், அநுதாபத்தையும் பெற்றுத்தந்த கம்பஹா எம். பி. தோழர் எஸ். டி. பண்டாரநாயக்கா தோழர் என். சண்முகதாசனுடன், கலவரப் பகுதிகளைப் பார்வையிடுவதற்காக, பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கியபோது ஒடுக்கப்பட்ட மக்கள் மலர் மாலை அணிவித்து அவர்களை வரவேற்ற காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழர் எஸ். டி. பண்டாரநாயக்காவும், தென்னிலங்கையிலிருந்து வந்த புத்த பிக்குகளும் தியாகி சின்னர் குமரேசுவின் குடும்பத்தினரைச் சந்தித்து, ஆறுதல் கூறுகின்றனர். இடது கோடியில் நிற்பவர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம்.

உள்ள ஒரு சில விரல்விட்டு எண்ணக்கூடியவர்களின் எதிர்ப் புரட்சிகர பலாத்காரத்தை தாழ்த்தப்பட்ட மக்களின் புரட்சிகர பலாத்காரத்தால் எதிர்க்கும்படியும் அறைகூவியது.

அமெரிக்காவில் நீக்ரோ மக்கள் இனப் பாகுபாட்டை எதிர்த்து நடத்திவரும் போராட்டத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி உதாரணம் காட்டியது. பல வருடகாலமாக, காலம் சென்ற மாட்டின் லூதர் கிங் போன்ற சீர்திருத்தவாதத் தலைவர்கள் அகிம்சையைப் போதித்து வந்தனர் என்றும், வெள்ளையர்களின் அடக்குமுறை அதிகரித்ததுதான் மிச்சம் என்றும் சுட்டிக்காட்டியது. இன்று நீக்ரோ மக்கள் அகிம்சைப் பாதையை நிராகரித்துவிட்டனர் ஆயுதம் தாங்கிய தற்காப்பு என்ற புரட்சிப் பாதையில் அடி எடுத்து வைத்துள்ளனர். எதிர்ப்புரட்சிகர பலாத்காரத்தின் மூலம் பதிலளிக்கின்றனர். நீக்ரோ மக்களின் கிளர்ச்சி, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நெஞ்சில் குத்திய ஈட்டி போன்றதாகும், என்பனவற்றைக் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்துக் காட்டியது.

இந்தப் புரட்சிகர ஆலோசனையினால் உணர்வுற்ற தாழ்த்தப்பட்ட மக்கள், முதல் தடவையாக ஓர் அரசியல் கட்சியின் ஆதரவுடன், சாதிக் கொடுமையை எதிர்த்துத் துணிகரமான போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். சில இடங்களில் அவர்கள் வெற்றிகள் பெற்றுள்ளனர். ஆனால் பல இடங்களில் ஆலயப் பிரவேசப் பிரச்சினை தீர்க்கப்படாமலே இருக்கின்றது. இப் போராட்டங்கள் மூலம் – சென்ற வருடம் நடைபெற்ற, புகழ்மிக்க மாவிட்டபுர ஆலயப் பிரவேசம் – போன்ற போராட்டங்கள் மூலம், யாழ்ப்பாணத்திலுள்ள இந்த சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்கேட்டை நாடறிய வைத்ததோடல்லாது தென்னிலங்கையிலும் வட இலங்கையிலும் உள்ள முற்போக்கு சக்திகளின் ஆதரவையும் பாராட்டுதலையும் பெற்றுள்ளனர்.

தமது உண்மையான நண்பர்கள் யார் என்பதையும் அவர்கள் புரிந்துகொண்டனர். தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், சமசமாஜக் கட்சி, தெனமன் திரிபுவாதக் கும்பல் ஆகியோர் சாதி ஒழிப்புப்பற்றி உதட்டில் பேசிக்கொண்டு திரிந்தவர்கள்; தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாகச் சுண்டு விரலைக்கூட உயர்த்தவில்லை. சகல அரசியல் கட்சிகளின் மத்தியில் எமது கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்குத் தயங்காது ஆதரவு கொடுத்தது. இலங்கையின் சமூக வாழ்வில் சாதிக் கொடுமை மனிதாபிமானமற்றதென்பதை உணர்ந்ததோடல்லாது சந்தர்ப்பவாத பாராளுமன்ற அரசியலில் நம்பிக்கை வைக்காததாலும், உயர் சாதியினரின் மதிப்பை இழந்துவிடுவோமென அஞ்சாததாலும் எம்மால் இதனைச் சாதிக்க முடிந்தது.

சாதி அடக்கு முறைக்கு எதிராகப் போராடும்போது, இதுகாலவரை சாதிக் கொடுமையைப் பாதுகாத்துவந்த அரசாங்கத்தின் அடக்குமுறை இயந்திரத்திற்கும் முகங்கொடுக்க வேண்டும் என்பதையும் தாழ்த்தப்பட்ட மக்கள் புரிந்துகொண்டனர். பொலீஸ் சட்டத்தின் பாதுகாவலன் எனக் கூறப்படுகிறது. ஆனால், சாதிக் கொடுமையை எதிர்த்த தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்தின் போது, பொலீஸ் நாண்டின் சட்டத்தை, அதாவது சமூகக் குறைபாட்டுத் தடைச் சட்டத்தை அமுல் நடத்தத் தவறியதோடல்லாது, சாதிக் கொடுமையின் பாதுகாவலர்களாகவும் வெளி வந்தனர்.

1966 அக்டோபர் 21-ம் திகதி சாதிக் கொடுமையை எதிர்த்துச் சென்ற மக்கள் கூட்டத்தினரை மிருகத்தனமாகத் தாக்கி விரட்டியடித்தனர். தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டப் பாதையில் தம்மாலான முட்டுக்கட்டைகள் யாவற்றையும் போட்டனர். இப்பலாத்காரத்தின் உச்சக்கட்டம் மாவிட்டபுரத்தில் நடைபெற்றது. பிரதி பொலீஸ் அதிபர் மாவிட்டபுரம் சென்றார். தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமையை நிலைநாட்ட வல்ல. ஆனால் சட்டத்தை மீறிய படு பிற்போக்குவாதியான சுந்தரலிங்கத்திற்குப் பாதுகாப்பளிக்கவும், மாவிட்டபுர ஆலயத்தின் வெளியே சமாதானமாக நின்ற சத்தியாக்கிரகிகளைக் குண்டாந்தடி கொண்டு தாக்கவுமேயாகும்.

சாதிக்கொடுமைக்கு எதிரான தமது போராட்டம் தனிமையான போராட்டமல்ல என்பதைத் தாழ்த்தப்பட்ட மக்கள் உணரவேண்டும். அவர்கள் தாமாகவே தனித்து வெற்றிபெற முடியாது. அவர்கள் தமது போராட்டத்தை இலங்கையின் ஏனைய பகுதி மக்களின் போராட்டங்களுடன், சிங்களவர்களினதும் தமிழர்களினதும் போராட்டங்களுடன் ஏகாதிபத்தியம், நிலப் பிரபுத்தவம் அவற்றின் ஏவல் நாய்களான யூ. என். பி., தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் இத்தியாதி ஆகியவற்றை ஒழித்துக்கட்டும் போராட்டங்களுடன் இணைக்க வேண்டும். சமுதாய அமைப்பிலே ஓர் புரட்சிகர மாற்றம் ஏற்படுவதன்மூலம்தான் சாதிக்கொடுமை ஒழியும்.

எமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நாம் உயர்சாதியினரிடையில் உள்ள முற்போக்குப் பகுதியினரை, குறிப்பாகக் கமக்காரர்கள், உழைப்பாளர்கள், தேசபக்தியுள்ள புத்தி ஜீவிகள் வாலிபர்களை வென்றெடுக்க மேலும் முயலவேண்டும். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இயல்பான நண்பர்கள். அவர்கள் தற்காலிகமாக ஆயிரக்கணக்கான வருடங்கள் நிலவிவந்த பிரபுத்துவ மூட நம்பிக்கைகளினால் கண்மூடிகளாய் இருப்பினும் நாம் அவர்களுக்கு உண்மையை நன்றாக விளக்கச் செய்து அவர்களைப் பொறுமையுடன் வென்றெடுக்க வேண்டும்.

1969-ம் ஆண்டு சாதிக் கொடுமையை எதிர்த்த பல போராட்டங்கள் நடைபெறும் என்பதில் சந்தேகமில்லை. இப்போராட்டங்களுக்குச் சரியான அரசியல் தலைமை, மேலும் கூடுதலான ஒற்றுமை, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் மன உறுதியும், செயல்திறனும், உயர்சாதியினர் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் உள்ள முற்போக்குச் சக்திகளுடன் பரந்துபட்ட ஐக்கியமும் அவசியமாகும்.

சாதி வெறியர்களையும் பொலீசையும் எதிர்த்துப் போராடுகையில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த எமது தோழர்கள் காட்டிய மன உறுதிக்கும் வீரத்திற்கும் நான் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன். அவர்கள் பல தியாகங்களைச் செய்துள்ளனர். தமது அன்புக்குரியவர்களின் உயிர்களைப் பலிகொடுத்தனர். ஆனால் அவர்கள் காட்டிய மன உறுதி பிரமிக்கத்தக்கதாகும். ஒடுக்கப்பட்ட எமது மக்கள் தட்டி எழுப்பப்பட்டு, ஒன்றுபட்டு, சரியாகத் தலைமை தாங்கப்பட்டால் சகல இடையூறுகளையும் எதிர்த்துப் போராடுவர் என்பதையே இவ் வுறுதி எடுத்துக்காட்டுகிறது.

சாதிக் கொடுமையை ஒழிப்பதற்கும் தீண்டாமையை இல்லாமல் செய்வதற்கும் யாழ்ப்பாணத்தின் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்றும் அவர்கள் பக்கம் நின்று போராடும்.

★ ★ ★

# நாவலன், சாதிவெறிக் காவலன்!

நாவலன் நல்லோனென்று
நாட்டிலே உரைக்கும் சில்லோர்
நாவலன் சாதிக் கொள்கை
நன்றாக அறிகுவாரோ?
நாவலர் சாதி பார்ப்போர்
காவலர், என்ற உண்மை
பாமரர் அறிவர், ஆனல்
பாவலர் அறியார் போலும்!

ஒடுக்கப் பட்டோர்களுக்காய்
ஒரு துளியேனும் சிந்தான்
வெறுக்கப் பட்டோனே, அன்னார்
வெண்ணீறு பூசியென்ன?
உடுக்கப்பட் டாடையுண்டேல்
உயர்குல மாவதோடா?
ஒடுக்கப்பட் டோர்கள் காலில்
உடன்விழு! பாபம் நீங்கும்.

— எஸ். வில்வராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாரும் இன்புறுக!

சுத்தானந்தபாரதி

ஒன்றே வானம் ஒன்றே பூமி
ஒன்றே கதிரவனும்
ஒன்றே காற்றும் கடலும் மலையும்
ஒன்றே யுள்ளுயிராம்.
என்றே யுணர்வோம்
எல்லாவுலகும் இதயங் கலந்திடலாம்
அன்றே அமைதி அன்றே யின்பம்
அன்பின் வழியதுவே!

வீட்டுப் பிரிவும் வீதிப் பிரிவும்
விதவித மதப் பிரிவும்
நாட்டுப் பிரிவும் ஊட்டுப் பிரிவும்
நானென்னும் பிரிவும்
ஏட்டுப் பிரிவும் எண்ணப் பிரிவும்
இல்லா துலகினிலே
கூட்டுறவாக வாழ்வோம் வாரீர்
குவலயத் தோழர்களே!

162611

ஆட்களைச்சுற்றி ஆயிரமாயிரம்
ஆணவக் கோட்டையின்றி
தாட்களைச் சுற்றித் தம்பட்டமடிக்கும்
சமயப் பறையடங்கி
வாட்களைச் சுற்றி வரிசை நடக்கும்
வல்லர சாட்சியின்றி
நாட்களைச் சுற்றித் திருவருள் பொலிய
நலங்கள் கூடிடுமே!

[சுத்தானந்த பாரதி அவர்கள், யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாட்டு மலருக்காக, அவரைச் சந்தித்த வெகுஜன இயக்கப் பிரமுகர் ஒருவரிடம் எழுதிக் கொடுத்த பாட்டு இது.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி அமைப்பு சாம்பலாவது உறுதி

"முருகன்"

தீண்டாமை என்னும் பிரச்சினைக்கு தமிழரில் பலர் துணிவுடன் முகங்கொடுப்பதில்லை.

ஆதிகாலத் தமிழ்ச் சமுதாயம் சாதிப் பிரச்சினை என்பது பற்றி அறிந்திருக்கவேயில்லை என்று கூறிக்கொள்வதன் மூலம், இத்தீண்டாமைப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டிய தமது பொறுப்பினின்றும் தம்மைத் தவிர்த்துக்கொள்ள முயல்கின்றனர். ஆரிய ஆதிக்கத்தினால் திராவிட சமுதாயத்தின்மீது திணிக்கப்பட்ட ஒரு அமைப்பே இதுவென்று அவர்கள் கூறுகின்றனர். அன்றேல் சைவ சித்தாந்த சாஸ்திரத்தில் இப்பிரச்சினைபற்றி ஒன்றுமே கூறப்படவில்லை என்று பசப்புகின்றனர்.

ஆனால் சாதியின் சரித்திரத்தைப் பற்றிய வியாக்கியானம் எவ்வாறாக இருந்தபோதிலும் தீண்டாமை என்பது இங்கு, இன்று, எம்மத்தியில் அலட்சியப்படுத்த முடியாத ஒரு பிரச்சினையாகத் தாண்டவமாடுகின்றது.

இக்கசப்பான உண்மையை இவர்கள் முன் வைத்தால், இக்கனவான்கள் இரண்டாவது ஓர் தந்திரத்தைக் கையாள்கின்றனர். 1957-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் அமுல் நடத்தப்படின் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவிடும் என்று கூறுகின்றனர்.

அந்தச் சட்டம் இயற்றப்பட்டு இன்று பத்து வருடங்களைக் கடந்துவிட்டபோதும், அது தொடர்ச்சியாகவும் தீவிரமாகவும் அமுல் நடத்தப்பட்டுள்ளதா? அன்றேல் எதையாவது சாதித்துள்ளதா?

ஆகவே இப்பிரச்சினையானது இன்னும் அதே கோர ரூபத்துடன் எவ்வித மாற்றமுமின்றிக் காட்சியளிக்கின்றது.

ஆகவே இவ்வேளையில் குறிப்பாகத் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் அதன் மாநாட்டை நடத்தும் இவ்வேளையில் சாதி அமைப்பின் தொடரான சரித்திர வளர்ச்சி பற்றியும், சமூகத்தில் அது உண்டாக்கிய விளைவுகள் பற்றியும் ஆராயாவிட்டாலும், அதன் சரித்திர வளர்ச்சியின் பாற்பட்ட சில முக்கியமான, ஆதாரபூர்வமான கட்டங்களைப்பற்றி ஆராய்வது பொருத்தமானது மட்டுமல்ல, பயனளிப்பதுமாகும்.

விஞ்ஞானமும், விஞ்ஞானத்தோடு இணைந்த வாழ்க்கை நடத்தும் பல்லாயிரக்கணக்கான மனிதர்களும், விலங்கிலிருந்தே மனிதன் தோன்றினான் என்று கூறுகின்றனர். அதுமட்டுமன்றி ஆதி மனிதனானவன் உணவைத் தேடியலைந்து வாழ்ந்தான் எனவும், அவ்வாறு உணவைத் தேடி அலைவதையே தனது வாழ்க்கையின் ஒரே முயற்சியாகவும் கொண்டு வாழ்ந்தான் எனவும் கூறப்படுகிறது. ஆகவே தொழில் வேறுபாடோ அன்றி வர்க்க வாரியான, இன வாரியான, சமூகவாரியான பிரிவினையோ சமுதாயத்தில் இருக்கவில்லை என்பது தெளிவாகின்றது. இதுவே புராதன பொதுவுடமைக் காலம் என்று நாம் அறியும் காலம். இக்காலப்பிரிவில் இந்தியா உட்பட உலகின் எவ்விடத்திலும் சாதிப் பிரிவினையோ வர்க்க வேறுபாடோ இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், சமூகம் என்பது பிடித்து வைத்த பிள்ளையார் அல்ல. அது மாற்ற முற்று, வளர்ச்சியுற்று முன்னேறுகிறது. மனிதன் தனது உணவுத் தேவையைப் பூர்த்திசெய்வதற்காகப் புதிய பல வழிகளைக் கையாண்டு, இயற்கையோடு போராடி அபிவிருத்தியடைந்து வருகிறான். அவன் உலோகங்களைக் கண்டுபிடித்து, அவற்றைத் தான் முன்பு காணாத சிறந்த, நவீன ஆயுதங்களாக, கருவிகளாக மாற்றியமைத்து விட்டான். இக்கருவிகளின் உதவிகொண்டு அவனது வாழ்க்கையானது பல புரட்சிகரமான மாற்றங்கட்குள்ளானது. உணவைத் தேடியலைந்த நிலையிலிருந்து உணவை உற்பத்தி செய்பவனாக மாறினான். இம்மாற்றத்தின் விளைவாக, இம்மனிதரனைவரும் உணவிற்காக அலையவேண்டிய நிலை மாறி பலர் ஒரு சமுதாயத்திற்குத் தேவையான குறிப்பிட்ட அளவு உணவை உற்பத்திசெய்வோராகவும், சிலர் அவ்வுணவை உற்பத்தி செய்யும் பெரும்பான்மையோரை நடாத்துபவராகவும், சுரண்டுபவராகவும், ஆளுபவராகவும் உருப்பெற்றனர்.

இச்சிறுபான்மையினர் தம்மை ஆள்வதற்கு அனுசரிக்கும் அளவிற்கு இப்பெரும்பான்மையினர் அசட்டையாக இருந்தனரா என்பதே கேள்வி. இல்லை! அவர்கள் அவ்வாறிருக்கவில்லை. சிறந்த கருவிகளை ஆக்கியவர்கள் சிறந்த ஆயுதங்களையும் ஆக்கி அதன் துணைகொண்டு பெரும்பான்மையினரைச் சுரண்டவும் நசுக்கவும்கூடியதாக இருந்ததால் உழைக்கும் மக்கள் கீழ்ப்படிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதிலிருந்தே வர்க்க பேதமுடைய சமுதாயம் மனித சரித்திரத்தில் முதன் முதலாகத் தோன்றியது. இவ்விதமாக முதலில் இவ் ஏற்றத்தாழ்வானது அடிமை என்றும் ஆண்டான் என்றும் தோன்றி, பண்ணையாள் என்றும் நிலப்பிரபு என்றும் வளர்ந்து இன்று தொழிலாளியாகவும் முதலாளியாகவும் காட்சியளிக்கின்றது. இவ்வாறாக உருவான இந்த அடிப்படை ஏற்றத் தாழ்வான வர்க்க பேதமே பின்பு சாகியம், இனம், சாதி, மதம் என்ற பிற ஏற்றத்தாழ்வுகளுக்கு வித்திட்டது. இவ் ஏற்றத்தாழ்வே இந்தியாவிலும், இலங்கையிலும் சாதி என்ற பேதத்தை விளைவித்தது.

இவையெல்லாம் மனிதன் தனது கருவிகளையும், ஆயுதங்களையும் விருத்தி செய்ததன் விளைவுகளே. மரத்தையும், கல்லையும், உலோகங்களையும்கூட பிளந்த அதே வீச்சில் தனக்குரிய சமுதாயத்தையும் வர்க்கங்களாகப் பிளவுபடுத்தினான்.

இது ஒரு பலாத்காரமான மாற்றமேயாகும். ஆனால் பலாத்காரமுடைய புரட்சியின்றி எவ்வாறு பரிணாம வளர்ச்சி ஏற்பட முடியும்?

ஆனால் வளர்ச்சியை வெறுப்பவர்கள், எதிர்ப்பவர்கள் அதைக் கண்டு அஞ்சுபவர்கள் சாதி ஒழிப்பிற்குப் புரட்சி தேவையில்லை என்று கூறுகின்றனர். இச்சாதிப் பிரச்சினையானது சமாதானமாகவும் படிப்படியாகவும் காலப் போக்கில் முதலாளித்துவ சமுதாயத்தின் அங்கங்களான வர்க்க அமைப்பினாலும், ஜனநாயகத்தாலும் மூடி மறைக்கப்பட்டு விடுமெனக் கூறுகின்றார்கள்.

இது இந்தியாவிலோ அன்றி இலங்கையிலோ நடந்ததுண்டா? இல்லை! சமூகத்தின் ஒவ்வொரு பிரிவும் சாகியம், இனம், மதம், சாதி என்னும் பலவிதமான பிரிவினைகளின் அடிப்படையில் பாமர ஜனங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பிரிவினைகள் அத்தனையும் முதலாளி – தொழிலாளி என்ற அடிப்படைப் பிரிவினையை அழியவிடாது பாதுகாப்பு அளிக்கின்றன.

(தொடர்ச்சி 60-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரத்தில் ஆலயப் பிரவேசப் போராட்டம்



மாவிட்டபுரத்தில் ஆலயப் பிரவேசத்திற்கென திரண்டிருந்த ஆயிரக் கணக்கான மக்கள் சாதி வெறியர்கள் செய்த மிருகத்தனமான தாக்குதல்களைப் பொருட்படுத்தாது உறுதியுடன் இருப்பதையும், இவர்கள் உறுதியான போராட்டத்தின் மூலம் தேர்கள் எவ்வித அலங்கரிப்புக்களும் இன்றிக் காட்சி அளிப்பதையும், வெகுஜன இயக்கத் தலைவர் திரு. எஸ். ரி. என். நாகரட்ணம் வெகுஜன இயக்கத் தோழருடன் பேசிக்கொண்டிருப்பதையும் படத்தில் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்ட புரக் கந்தா!

வ. மகாலிங்கம்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

மாவிட்ட புரக் கந்தா மயிலூர்ந் தன்று
மையலுறு குறச்சாதி மகளைக் காதல்
தாவிட்ட பான்மையொடு தழுவிக் கொண்டு
தரணிக்குச் சமத்துவத்தைத் தந்தாய் அப்பன்
நாவிட்ட தாலெச்சில் நயந்து பெற்றான்
நவில்வலைச்சி யாமுன்னை நயந்த வன்னை
கூவிட்ட பன்றிகட்குக் குழைந்து தன்பால்
கொடுத்தான் கோத் திரப்பண்பைக் குலைத்திடாதே

ஒரு தாயின் கும்பியிலே உதித்த தெய்வம்
உயர்வென்றும் தாழ்வென்றும் உரைக்க லாமோ
பெருமாட்டி உமையீன்ற நீயு முந்தன்
பிறவியெனு முயர் நல்லூர்க் கந்தனும்
வருமானங் கருதியா, வர்ணத் தாலா
வரண்ட மனப் பான்மை நெறி வாதத் தாலா
ஒருகோயில் திறந்துவே ஹொன்றி லின்று
ஒதுக்கியிருக் கிறதென்று உரைத்திடாயே.

மையிரவில் மதிமயக்கில் மனையை நீவி
மாபெரிய சமத்துவத்தை மனதிற் றேக்கிப்
பையரவுப் படமுமுயர் நறவுந் தேடிப்
பரவசத்தி லூறுமுயர் பணம்ப டைத்தோர்
வைகறையி லுயர்சாதி யாகும் பாங்கை
வாழ்த்திவர வேற்குவடி வேலா நாட்டில்
கையறுநல் லேழைகுலம் கதியற் றேங்கக்
கனமான சாதிகுலம் கதைக்க லாமோ?

குடிகேடி, விபசாரி, கொள்கை யில்லாக்
கொடியோர்கள் விலைவாசிக் கொள்ளைக் கூற்றம்
பிடிவாதப் பிற்போக்குப் பிண்ட மென்னும்
பெருபிணிசேர் சழக்கரெனும் பேய்கள் நாய்கள்
மிடிசேர்ந்தும் நேர்மைநெறி, மேலா மெண்ணம்
மிளிருதனிப் பண்புறையும் மெலோ ரொன்றாய்
வடிவேலா நின்கோயில் வழுத்த வென்றும்
வரக்கூடா தென்றுநின் வாயிற்பூட்டு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கொடியைத் தாங்கியொரு சேனை யின்று
    செகமனைத்தும் சமதர்மச் சிந்து பாடிச்
சிங்கமென முரசறைந்து சீறிப் பாய்ந்து
    சீர்பெருகு மாவோசிந் தனைமேற் கொண்டே
பங்கமறுத் தேழைகுலப் பயத்தை நீக்கிப்
    பண்பாட்டை நிலைநிறுத்தும் பணியை யேற்று
எங்குதுய ரிருந்தாலும் எய்து வீழ்த்த
    எழுந்திட்ட வுண்மையுன தானை யன்றோ!

★

(57-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே அடிப்படைப் பிரிவினையை விரும்பும், அதனாலே வாழும் ஆளும் வர்க்கம் மற்றைய பிரிவினைகளை ஒழிக்க இடங் கொடுக்குமா? கொடுக்கவே கொடுக்காது.

ஆகவே வர்க்கப் பிரிவினையை ஒழித்தாலன்றி சமுதாயத்தின் வேறெந்தப் பிரிவினையையும் ஒழிக்க முடியாதென்பது தெளிவாகின்றது. பல்வேறு வகையான ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்கும் போராட்டங்கள் வர்க்க பேதத்தை ஒழிக்கும் போராட்டத்தில் சங்கமிக்கின்றன.

முன்னர் குறிப்பிட்டபடி இவ் வர்க்க பேதமானது பலாத்காரத்தினாலேயே தோன்றி, அதனாலேயே பாதுகாக்கப்பட்டும் வருகின்றது.

எனவே, முள்ளை முள்ளாலேயே எடுக்கவேண்டும், வைரத்தை வைரத்தாலேயே அறுக்கலாம் என்பது போன்று பலாத்காரத்திலே தோன்றிய இப்பேதத்தை பலாத்காரத்தாலே அழிக்க முடியும்; அழிக்கவும் வேண்டும்.

இதன் கருத்து சமத்துவத்தைப் பெற முயற்சிப்பவர்கள் ஆலயங்களிலும், தேனீர்க் கடைகளிலும் பலாத்காரத்தைப் பாவித்தார்கள் என்பதல்ல. ஆனால் எதிர் மாறாக அவர்கள்மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டது என்பதாகும். மாவிட்டபுரத்திலே பொலிசார் சத்தியாக்கிரகிகள் மீது குண்டாந்தடிப் பிரயோகம் செய்தது மாத்திரமன்றி, ஆலயத்துக்குள்ளிருந்து பலவகையான ஆயுதங்களையும் கைப்பற்றினார்கள் என்றதிலிருந்து ஆயுதந் தாங்கிய பிற்போக்காளர்களுக்கு எதிராக புரட்சியாளர் பலாத்காரத்தைப் பிரயோகிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இதுவே மனித சரித்திரத்தின் நியதி. இதை எவரும் மறைக்கவோ, மறுக்கவோ, தவிர்க்கவோ முடியாது. இந்த நியதியினுள் அகப்பட்டுள்ள சாதி அமைப்பு சாம்பலாவது உறுதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதியுடன் முன்செல்வோம்

மு. முத்தையா
[வட. இ. ஐ. க. தொ. ச. செயலாளர்]

மனித சமூகத்தில் ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாக வாழ உரிமை உண்டு. மக்களாகிய எமக்கும், விவசாயி, தொழிலாளர் முதலியோருக்கும் விடுதலை உரிமைகள், பொருளாதார முன்னேற்றம் முதலியவை இவ் அமைப்பில் கிடைப்பது என்பது வெறும் கனவாகவே இருக்க முடியுமென்பதை எமது வாழ்க்கையின் அனுபவத்தில் காண முடிகின்றது. தாழ்த்தப்பட்டோராகிய நாம முதலாளித்துவ அமைப்பு முறையினுல் அடக்கப்பட்டிருக்கிறோம் என்பதை இங்கு வெளிப்படுத்துதல் நன்றெனக் கருதுகிறேன்.

எமது இளம்பராயச் சிறிய படிப்பில்கூட இரு பாடசாலைகளில் மாறிப் படிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதென்றால், அது நெடுங்கால ஏகாதிபத்திய முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ அமைப்புப் புத்திஜீவிகளால் வழிநடாத்தப்பட்ட பாதையினுல் ஏற்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட அநீதியான பாதக முறையே என்பதுதான் எனது கருத்து. இந்தக் கருத்தோட்டச் சிந்தனை, நாளடைவில் ஏன், எதற்கு எப்படிப்பட்டவை என்ற மனப் போராட்டம் உந்து விசையாகவே முன் தள்ளிச் சென்ற காரணத்தால், அநீதியான சமூகக் கொடுமைகளை வேருடன் களைந்தெறியாத வரையிலும் வெகுஜனம் கிளர்ந்தெழாத வரையிலும் எமது விடுதலையென்பது முட்டையினுள் அவிந்து அழிந்துவிடும் குஞ்சாகவே இருக்க முடியும் என்பதை உணர்ந்தேன்.

எமது சமூக விடுதலைக்காக இதுவரையில் நாம் பங்கு கொண்ட நல்வழி ஐக்கிய சேவா சங்கம், சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம், அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை, அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி, வட. இலங்கை கள்ளுத் தொழிலாளர் சங்கம் போன்ற ஸ்தாபனங்களிலிருந்து இயங்கி வந்தபோதிலும், இவ்வித ஸ்தாபனங்களின் தலைவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உண்மையான அடிப்படை உரிமையைப் பெற்றுக்கொடுக்கமுடியாது அற்ப உதவிகளைச் செய்துகொண்டிருந்தார்கள். செனட்டர் பதவி, ஆசிரியர் உத்தியோகம் எடுத்துக் கொடுப்பது, இடமாற்றம் பெற உதவி செய்வது சத்தியப்பிரமாண ஆணையாளர் பதவி ஆகியன போன்ற அற்ப உதவிகளைத்தான் செய்து கொண்டிருந்தார்கள். இவைகூட எமது மக்களிடமிருந்து ஒரு சில தலைவர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் மறைமுகமாக லஞ்சம் உட்படப் பல பாரபட்சமான முறையுடன் நடந்திருக்கிறார்கள் என்றால் அவை எமது சமூகத்துக்குச் செய்த துரோகமேயொழிய நன்மையில்லை. ஐக்கிய முன்னணியினர் அச்சுவேலி மகாநாட்டில் நிறைவேற்றிய உரிமைப் போராட்டத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியாத காரணம் இவர்களுடைய பலவீனமாகும் சாதி வெறியர்களுடைய சூழ்ச்சிக்கும் இரையாகி எமது சமூகத்தைப் பலவீனப்படுத்தியதையும் அறிந்தோம். இந்தக் கொடுமையைத் தீர்ப்பதற்கு மக்கள் ஆதரவைக் கொண்டே சீவல் தொழிலாளருக்காக வட இலங்கை ஐக்கிய கள்ளுத் தொழிலாளர் சங்கத்தை ஆரம்பித்ததோடல்லாமல் உயர்சாதி மக்களுள் நல்லெண்ணம் கொண்ட வாலிபர்கள், முதியோர்கள், பெண்கள் முதலியோருடன் தாழ்த்தப்பட்ட மக்களாகிய நாமும் அணி திரண்டு புரட்சிகரத் துணிவுடன் தாழ்த்தப்பட்டோரின் விடுதலைக்கான இயக்கத்தில் இணைந்து போராடினோம். சுன்னாகத்திலிருந்து ஆரம்பித்த இயக்கம் விரிவடைந்து இருவருடங்களுக்கிடையில் நினைக்க முடியாத அளவுக்கு வெற்றியீட்டியதையும் மாவிட்டபுரத்தில் ஆரம்பித்த புதிய சத்தியாக்கிரகமுறை மாவிட்டபுரத்தில் திருவிழாக்கள் தடைப்பட்டதோடல்லாமல் பிரதானமாக செல்வச் சந்நிதி ஆலயம் திறக்கப்பட்டதும் அதைத் தொடர்ந்து சில ஆலயங்களும், சாவகச்சேரி தேனீர்க் கடையைத் தொடர்ந்து வேறு சில கடைகளும் திறக்கப்பட்டன. சாதிவெறியர்களும் சமூகத் துரோகிகளும் பல மிழந்த காரணத்தால் மீண்டும் திறக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி வெற்றி நம்முடையதே!

சி. கணேசன்

தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டம் இற்றைக்கு இரண்டு வருட காலமாக பல இடங்களில் நடைபெற்று வந்ததை நமது நாடு மட்டுமல்ல வெளி நாடுகளும் அறிந்ததொன்றாகும். இதில் குறிப்பாக சங்கானை, சாவகச்சேரி, கொடிகாமம், அச்சுவேலி போன்ற இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்திய உரிமைப் போராட்டங்களின் பயனாக சாவகச்சேரியிலுள்ள தேனீர்க்கடைகள் யாவும் திறக்கப்பட்டு நமது மக்களும் ஏனைய மக்களோடு சரிசமமாக ஆசனத்தில் அமர்ந்து சாப்பிட்டு தேனீர் அருந்தும் உரிமையும் கிடைத்தது. இதேபோல் போராடிவரும் சங்கானை அச்சுவேலி, கொடிகாமம் போன்ற மற்றைய பகுதிகளிலுள்ள தேனீர்க்கடைகள் ஆலயங்கள் பொது ஸ்தாபனங்கள் பொது நிலையங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகள் யாவும் வழங்கப்பட்டவைகளாக இருக்க வேண்டும். அதற்காக நாம் தொடர்ந்து போராட நமது மக்கள் முன்வரவேண்டும். குறிப்பாக சென்ற ஆண்டு மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்தில் நாம் நடத்திய ஆலயப்பிரவேசப் போராட்டத்தை ஒவ்வொருவரும் எண்ணிப் பார்ப்போம். அங்கே என்ன நடந்தது ஆலயப் பிரவேசத்தை தடுத்து நிறுத்துவதற்காக சாதி வெறி பிடித்த பலரைத் தொண்டர்படை என்ற பட்டநாமம் சூட்டி அங்கு நிறுத்தினார்கள். அவர்கள் அங்கு செய்ததென்ன? ஆலயப் பிரவேசத்துக்கு சென்ற பல குடும்பங்களில் பெண்களை ஆலயத்துக்குள்ளே விட்டும் ஆண்களை உள்ளே செல்ல விடாது தடுத்தும் நிறுத்தப்பட்டனர். அப்பொழுது வெளியில் நின்றவர்கள் என்ன

---

61-ம் பக்கத் தொடர்ச்சி...

படாத கோவில்களுக்கு முள்வேலி அடைப்பதும் கேற்றுக்கள் போடுவதுடன் பனை மரக்குத்திகள் சாத்தியதையும், முண்டுகள் கொடுத்ததையும் இருவருடங்களுக்கிடையில் காணமுடிந்திருக்கிறதென்றால் சிந்தனையில் ஆழமானதாகவும், செயல்த்திறனில் தீவிர உந்து விசை போன்றதாகவும் செயல் புரிவதற்கு வெகுஜன இயக்கம் எடுத்துக் கையாண்ட பாதை சரியானதென்பதைக் குறுகியகால நடவடிக்கைகள் மூலம் காணக்கூடியதாயிருக்கின்றது.

ஆகவே இந்த இயக்கத்தைப் பலப்படுத்துவதற்கும், முன்னெடுத்துச் செல்லுவதற்கும் எதுவித தயக்கமுமின்றிப் பிழைகளைத் திருத்திக்கொண்டு மேலும் சரியானவைகளை முன்னெடுத்தும் தீவிரமாக்கியும் பல தலைமுறை பொறுத்திருந்த நாம் எமது தலைமுறை வாழ்வுக்கிடையில் தாழ்த்தப்பட்டோரென்ற நிலையை ஒழித்துக் கட்டுவதுடன், நாங்களும் மனிதர்கள் தானென்ற பாதையை நிலைநாட்டி எதிரிகளை புறமுதுகிடச் செய்வதற்கு ஏகோபித்த மக்களாக நாம் வீறிட்டெழும் வண்ணம் வெகுஜன இயக்கதைச் சக்தி மிக்கதாக கட்டி வளர்ப்பதும், அதன் கொள்கைகளையும், திட்டங்களையும் துணிவுடன் முன்கொண்டு செல்ல மேன்மேலும் ஐக்கியப்படுவதுமே ஒரேவழியாகும். இந்த ஐக்கியமே கடந்த இருவருட காலத்தில் எமது இயக்கத்தையும், போராட்டங்களையும் உலகறியச் செய்தது என்பதையும், பிற்போக்கு வாதிகளை கதிகலங்கச் செய்தது என்பதையும் நன்கு மனதில் இருத்தி முன் செல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார்கள்? எங்களுடைய மனைவி மக்கள் உள்ளே போய்விட்டார்கள். அவர்கள் வரட்டும் அவர்களைக் கூட்டிச் செல்வதற்காகத் தான் நாங்கள் நிற்கின்றோம் என்றனர். அப்பொழுது உள்ளே சென்ற பெண்களும் பிள்ளைகளும் உள் வீதியைச் சுற்றி வணக்கத்தை முடித்துக்கொண்டு வெளியே வந்தனர். வந்தவர்கள் வெளியில் நின்ற தங்கள் கணவன்மார்களுடன் கதைத்துப் பேசிக்கொண்டு நடந்தார்கள். இப்படிப் பலர் ஆண்களும் பெண்களும் உள்ளே சென்று வழிபட்டு திரும்பியதை கண்டிருக்கின்றார்கள். இதை மறைக்க முடியுமா? மறக்க முடியுமா? அதே போல் மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்துக்கு வழிபடச் சென்றவர்களில் நானும் ஒருவன். என்னையும் தடுத்து நிறுத்தினார் திரு சுந்தாலிங்கம். அவர்மீது வழக்சத் தாக்கல் செய்திருக்கிறேன். சமூகக் குறைபாடுகள் நீக்கும் சட்டத்தை நம்பி இப்படிப்பலர் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த வழக்குகளில் ஒன்று மட்டுவில் சின்னையா என்பவர் சுந்தாலிங்கம் மீது தாக்கல் செய்பட்ட வழக்காகும். இவ் வழக்கில் சுந்தரலிங்கத்தைக் குற்றவாளியாக கண்டு மல்லாகம் நீதிபதி திரு. சண்முகலிங்கம் ஐம்பது ரூபாய் குற்றப்பணமாகக் கட்டும்படி தீர்ப்பு வழங்கினார். சுந்தரலிங்கம் அதை எதிர்த்து அப்பீல் செய்திருக்கின்றார். தீர்ப்பு எப்படியாகுமோ என்பதை உரிமைக்காகப் போராடும் நமது சமூகம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது. இது மட்டுமல்ல 17-ம் திருவிழா அன்றும் நான் மாவிட்டபுரம் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டுத் திரும்பியபோது சாதி வெறியர்கள் பலர் என்னை மிருகத்தனமாகத் தாக்கினார்கள். அத் தாக்கலின் பயனாக பல நாட்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று விடு திரும்பினேன். பல மாதங்கள் தொழில் செய்ய முடியாத நிலையில் இருந்தேன். என்றாலும் உரிமைப் போர் தொடுக்கும் நமக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் மென்மேலும் தீவிரப் படுத்திய சம்பவத்தில் ஒன்று: அதுதான் மாவிட்டபுரம் கந்தன் ஆலயப்பிரவேசப் போராட்டம். இப்போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தபோது நம்மைக் காட்டிக்கொடுத்த, மக்கள் சக்தியை மழுங்கடித்து உரிமைப் போராட்டத்தை உருக்குலைத்து ஊக்கத்தையும் ஆக்கத்தையும் உதறித்தள்ளினர் உலுத்தர்களான துரோகத் தலைவர்கள். காட்டிக்கொடுத்து கபட நாடகம் ஆடும் இவர்களை மக்கள் மத்தியில் இருந்து தூக்கி எறிந்துவிட்டு மக்களுக்காக மனம் சளைக்காது உழைத்தவரும் நம் தலைவர்கள் ஏழைத் தொழிலார்ளகள் விவசாயிகளின் தலைவர்கள் என்று மக்கள் பெருமிதப்படக்கூடிய தலைவர்களைக்கொண்டு அவர்களுடைய முற்போக்குக் கொள்கைகளையும் இலட்சியங்களையும் முன்வைத்துத்தான் தீண்டாமை ஒழிப்பு, வெகுஜன இயக்கம் மக்களை நல்ல பாதையில் அழைத்துச் செல்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்று சேர்த்து ஐக்கியப் படுத்தி மக்கள் தங்கள் உரிமைகளைப்பெற ஒரேயொரு வழி போராட்டந்தான் என்ற பாதையைக் காட்டி மக்களின் உரிமைகளைப் பெற வழிவகுத்துக் கொடுத்த பெருமை தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்துக்கே உரியது. ஆகவே நாம் எல்லோரும் எந்தக் கஷ்டத்திலும், துன்பத்திலும் சளைக்காது உறுதியுடன் உரிமைப் போரை முன்னெடுத்துச் செல்வோம். துணிவுடன் கஷ்டங்களைத் தாண்டி முன்செல்வாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரமும் மக்கள் போரட்டமும்

**மாவையான்**

மாவிட்டபுரம் என்றதும் அது பிற்போக்குச் சாதி வெறியர்களின் கோட்டையாகவும் அங்கு நடைபெற்ற போராட்டம் மனித உரிமை கோரிய மக்களது நியாயமான உரிமைப் போராட்டம் என்பதையும் ஒருமாதகாலம் நடத்திய போராட்டங்களின் மூலம் உலகறியச் செய்துவிட்டது. மாவிட்டபுரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயப்பிரவேசம் செய்யப்போகிறார்களா? இல்லையா? சாதிவெறியர்கள் ஒன்றுகூடியுள்ள இக்கோட்டைக்குள் தாழ்த்தப்பட்ட மக்களால் பலமான தாக்குதல் கொடுக்க முடியுமா? அல்லது கோவில் சமாதானமாகச் சகல மக்களுக்கும் திறந்துவிடப்படுமா? இதுபோன்ற பல கேள்விகள் மாவிட்டபுரம் கொடியேறப் பல மாதங்களாக அடிபட்ட கேள்விகளாகும், ஆனால் கோவில் ஆதீன கர்த்தாக்கள் ஒன்றுகூடி எப்படியும் ஆலயப் பிரவேசத்தைத் தடுப்பது என்றும் இதற்கான எதிர்ப்பு இயக்கத்தின் தலைமைப் பொறுப்பையும் தொண்டர்படை என்ற குண்டர் படையை உருவாக்கும் சகல பொறுப்புகளையும் சாதி அரக்கனை சுந்தரலிங்கத்திடம் ஒப்படைத்தனர். சாதிவெறியர்களும், பிற்போக்கு வாதிகளும் ஒன்றுகூடி ஆலயப்பிரவேசத்தைத் தடுப்பதில் மும்முரமாக இருந்த வேளையில் ஒடுக்கப்பட்ட மக்கள் ஆலயப் பிரவேசம் செய்வதில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமையில் சகல ஏற்பாடுகளையும் செய்தனர். கொடியேற்ற நாள் நெருங்க நெருங்க உரிமை கோரும் சக்திக்கும், உரிமையை மறுக்கும் பிற்போக்குச் சக்திகளுக்குமிடையிலான போராட்டமும் விரிவடைந்து வந்தது. பொலிசார் தாம் ஆலயப் பிரவேசப் போராட்டத்திற்குத் தகுந்த பாதுகாப்பு அளிப்பதாயும், சட்டத்தை அமுல் செய்யப் போவதாகவும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்திற்கு வாக்குறுதி அளித்தனர்.

கொடியேற்றத்தின் அன்று காலையே ஆலயப்பிரவேசத்திற்காக ஒடுக்கப்பட் மக்கள் கோவிலுக்குச் சென்றனர். இரு வாசல்களிலும் குண்டர் படையினர் என்ற பெயரில் பல ஊர்களைச் சேர்ந்த கழிசடைகள் நிறுத்தி வைக்கப்பட்டனர். கோவிலின் உள் செல்லச் சென்றவர்களைத் தடுத்தனர். இக்குண்டர்களின் தலைவன் எனச் சொல்லிக்கொள்ளப்படும் அரக்கன் சுந்தரலிங்கம் பலரைப் பலவந்தமாகத் தடுத்தான். அவர்களைப் பொலிசில் முறைப்பாடு செய்யும்படி கூறித் திருப்பிவிட்டார்கள். பொலிசில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் எதிரிகள் கைதுசெய்யப்படவில்லை. அவர்கள் தொடர்ச்சியாகவே வாசல்களில் நின்று தடுப்பு வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர். இவர்கள் எப்படித்தான் தடுப்பு வேலைகளில் ஈடுபட்டபோதிலும் அநேக ஒடுக்கப்பட்ட மக்கள் உட்சென்று வணங்கிவிட்டுத் திரும்பினர். கொடியேற்றத்தின் அன்று ஆரம்பித்த இவ் ஆலயப் பிரவேசப் போராட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றது ஒடுக்கப்பட்ட மக்களும சகல வழிமுறைகளையும் பாவித்தனர். சட்டத்தின் மூலம் பிரச்சனை தீரும் எனக் கூக்குரல் இட்டுவந்தவர்களுக்கு மாவிட்டபுரப் போராட்டத்தின் போது சட்டமானது எப்படிப்பட்டது, அது யாருக்கு உதவி செய்கின்றது என்பதை நன்கு அம்பலமாக்கிவிட்டது. தன்னை வழிபடவிடாது தடுத்ததாக திரு சி. கணேசன் என்பவர் சுந்தரலிங்கம் அவர்களுக்கு எதிராகக் கோட்டில் வழக்குத் தாக்கல் செய்தார். கோடு சுந்தரலிங்கம் கணேசனைத் தடுக்கக்கூடாது எனவும் உத்தரவிட்டது. ஆனால் அப்படியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரவுக்குப் பின்பும் சுந்தரலிங்கம் கோவில் வாசலில் தடுப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தார். அது மாத்திரமல்ல, அதே கணேசன் படுமோசமாக இக்கும்பலினால் கேவலமான முறையில் தாக்கப்பட்டார். ஆனால் அப்படித் தாக்கியவர்கள் கூட உடன் கைது செய்யப்படவில்லை. சட்டம் என்று ஒடுக்கப்பட்ட மக்களை ஏமாற்றக் கூறப்பட்ட தொன்றேயொழிய உண்மையில் அவ்வியக்கத்திற்கு எதுவித உதவியும் செய்யவில்லை. சகலதும் ஒரு கண் துடைப்பாகவே இருந்து வந்தது.

ஆனால் எது எப்படி நடைபெற்றுவந்த போதிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது போராட்டத்தில் உறுதியாகவே இருந்து வந்தனர். நாளுக்குநாள் வடபகுதி எங்கும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் ஆலயப் பிரவேசத்திற்கெனக் கோவிலுக்குவர ஆரம்பித்தனர். வெளி மண்டபத்தை முற்றுகையிட்டனர். பின் வெளி மண்டபம் சுற்றிக் காட்டுக் கம்புகளால் அடைக்கப்பட்டது. மக்கள் வாசலில் கூட்டமாக நின்றனர். இதனால் சுவாமியின் வெளிவீதித திருவிழா நிறுத்தப்பட்டது. வெளிப்பகுதிகூட வரம்புகள் கட்டித் தண்ணீர் இறைக்கப்பட்டுச் சேறும் சகதியுமாக்கப்பட்டது. இந்த மிருகத்தனமான செயல்களை எல்லாம் மக்கள் பொறுமையுடன் சகித்துககொண்டு தமது இறுதி நோக்கத்திற்கான வாய்ப்பை எதிர் பார்த்து நின்றனர். இவ்விதம் சாதி வெறியர்களின் கழிசடை வேலைகள் கூடக்கூடத் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்ட உணர்வும், உறுதியும், ஐக்கியமும் வளர்ந்து கொண்டே வந்தது.

இருபத்திமூன்றும் திருவிழா அன்று அதிகாலையே மக்கள் கூடிவிட்டனர். அன்று என்றுமில்லாத அளவு ஆயிரக்கணக்கான மக்கள் ஆலயப்பிரவேசத்திற்கென ஒன்றுசேர்ந்தனர். ஆயுதம் தாங்கிய பொலிசார் சகல வீதிகளிலும் நிறுத்தப்பட்டனர். பொலிஸ் ஜீப்புகள் போர்க்களத்தில் ஓடுவது போன்று ஓடித்திரிந்தன. தடைகளுக்கு வெளியில் மக்கள் கூட்டமும், தடைகளுக்கு உட்புறத்தில் குண்டர் படையினரும் நின்றனர். இக்குண்டர் படையினர் அமைதியாக நின்ற மக்களைக் கோபமூட்டும் வேலையில் ஈடுபட்டனர் கால்களால் தட்டியும், மண்ணால் எறிந்தும் கேலிசெய்து வேடிக்கை விடத் தொடங்கினர். இருபத்திமூன்று நாட்கள் பொறுமையுடன் சகித்த மக்கள் அன்று பொறுமையை இழந்தனர். குண்டர் படையினரையும், சகல தடைகளையும் தாண்டிக் கோவிலுக்குள் சென்றனர். குண்டர் படையினர் மக்களால் தாக்கப்பட்டனர் அவர்கள் புறமுதுகுகாட்டி ஓடினர். கோயிலின் உட்சென்று ஒரே இருப்பாக இருந்த மக்களை, சட்டத்தை அமுல் செய்யும் பொலிஸ் என்ன செய்தது - அவர்களைப் பலாத்காரமாக வெளியில் தூக்கிக்கொண்டு வந்துவிட்டனர். மேலும் கோவிலுக்குள் போக முனைந்தவர்களைப் பொலிசார் தாக்கினர். சகல மக்களும் கோவிலுக்குள் இருந்து வெளியில் கொண்டுவரப்பட்டனர். இச் செய்தி கணப்பொழுதில் நாடு பூராவும் பரவியது, பத்திரிகைக்காரர்கள், படப்பிடிப்பாளர்கள், தென்னிலங்கைச் சிங்களப் பிரமுகர்கள் கோவிலை முற்றுகையிட்டனர்.

அன்று அரசாங்க அதிபர், கொழும்பிலிருந்து விசேஷமாக வந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், வடபகுதிப் பொலிஸ் அதிபர், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர்கள் ஆகியோர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இப் பேச்சுவார்த்தையில் ஒரு கட்டத்தில் இப்போராட்டத்திற்கும், இயக்கத்திற்கும் சம்பந்தமில்லாத எம். சி. சுப்பிரமணியம், ஜீ. நல்லையா போன்ற துரோகிகளும் கலந்துகொண்டனர். இவர்கள் கலந்துகொள்கிறார்கள் என்ற பேச்சுக் கேட்டதுமே காட்டிக்கொடுப்பு நடைபெறும் என மக்கள் பேசிக்கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தனர் அன்று மாலை ஐந்து மணி வரை பேச்சுவார்த்தை நடைபெற்றது. அவர்கள் வைத்த எந்தத் திட்டத்தையும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜனத் தலைவர்கள் ஏற்க மறுத்துவிட்டனர். ஆனால் துரோகத் தலைவர்கள் தமது பூரண ஒத்துழைப்பைத் தருவதாக ஒப்புக்கொண்டனர்.

திரளாகத் திரண்டிருந்த மக்களின் மத்தியில் ஒருதலைப் பட்சமான, துரோகத்தனமான, கேவலமான சமரசத் திட்டத்தை வடபகுதியின் போலிஸ் அதிபர் வாசித்தார். மக்களை இப்போராட்ட களத்தில் இருந்து திரும்பிச் செல்லுமாறும், திருவிழா நடைபெற வழிசெய்யுமாறும், திருவிழாக்கள் முடிந்தபின் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வுகாண்பதாகவும் கூறப்பட்டது.

ஆனால் இத்திட்டத்தைத் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவர்களும், மக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் தொடர்ந்தும் போராட்டம் நடைபெறுமெனப் பிரகடனம் செய்தனர். அமைதியாக இருந்த மக்களின்மேல் சட்டத்தைப் பாதுகாக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவிசெய்ய முன்வந்த, சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தை அமுல் செய்யும் பொலிஸ் படை மிருகத்தனமாக ஏவிவிடப்பட்டது. மக்கள் தாறுமாறாகத் தாக்கப்பட்டுப் படுகாயம் அடைந்தனர். மேலும் ஆயுதம் தாங்கிய பொலிசார் கோவிலைச்சுற்றி இறக்கப்பட்டனர்.

ஒரு மாதகாலம் நடைபெற்ற போராட்டத்தின் இறுதியில் பிற்போக்குச் சக்திகள் இந்த நாட்டின் அரசாங்கத்தின் சகல உதவிகளுடனும் வெற்றிபெற்றனர் என்பது உண்மை. ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தற்காலிகமான தோல்வி என்ற போதிலும் அவர்களது நீண்டகாலப் போராட்ட இலங்கை அடையும் பாதையில் இப்போராட்டம் பல அனுபவங்களைக் கொடுத்துள்ளது. அகிம்சை, சட்டம் காலப்போக்கில்மாறும், பேச்சு வார்த்தைகளில் தீரும் போன்ற சகல தவறான மார்க்கங்களும் மீண்டும் மாவிட்டபுரத்தில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு முன்னால் உள்ள ஒரேபாதை போராட்டமேயாகும். அது மாவிட்டபுரம் மட்டுமல்ல மற்றைய ஏனைய பிரச்சனைகளுக்கும் அதுவொன்றே இறுதிவெற்றியைத் தரக்கூடியது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. சரித்திர முக்கியத்துவம் பெற்ற இப்போராட்டத்தின் படிப்பினைகளை நன்கு மனதில் வைத்து எதிர்காலப் போராட்டத்திற்கான சகல தயாரிப்புகளையும் செய்து மாவிட்டபுரத்தில் மக்கள் சக்தியின் பலத்தை மீண்டும் நிலைநாட்ட உறுதியுடன் முன்செல்வோம்.

சமுதாயத்தின் செல்வம் தொழிலாளர்கள், விவசாயிகளாலும், உழைக்கும் புத்திஜீவிகளாலும் சிருஷ்டிக்கப்படுகின்றது. அவர்கள் தமது தலைவிதியைத் தமது கைகளில் எடுத்துக்கொண்டு, ஒரு மார்க்ஸிஸம் – லெனினிஸ மார்க்கத்தைப் பின்பற்றி, பிரச்சினைகளைத் தட்டிக்கழிப்பதற்குப் பதிலாக, அவற்றைத் தீர்ப்பதில் ஒரு ஊக்கமான மனோபாவத்தைக் கொண்டால், அவர்களால் கடக்க முடியாத கஷ்டங்கள் உலகில் இருக்கவே முடியாது.

மாஓ சே – துங்

University of Jaffna
162611
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0743

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org